விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 23 செவ்வாய்க்கிழமை (06.05.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 138

### இராணுவ கெடுபிடிகளிற்கு அஞ்சி

# இலங்கை அகதிகள் மீண்டும் தமிழகத்திற்கு

(கொழும்பு)

**வடக்கில் தற்போது அதிகரித்துள்ள இராணுவத்தினரின் கைதுகள், விசாரணைகள் என்பவற்றுக்கு அஞ்சி தமிழகத்திற்கு தப்பிச் செல்லும் இலங்கை அகதிகளின் எண்ணிக்கை மீண்டும் உயர்வடையத் தொடங்கியுள்ளது.**

இலங்கையில் இருந்து அகதிகள் குழுவொன்று கடல் மார்க்கமாக நேற்று தமிழகம் சென்றடைந்துள்ளது.

இலங்கை இராணுவத்தின் கெடுபிடி தாங்க முடியாமல் தாங்கள இந்தியாவுக்குத் தப்பி வந்திருப்பதாக இந்த அகதிகள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 10 இலங்கை அகதிகள் கடல் மார்க்கமாக இன்று தனுஷ்கோடி அருகே அரிச்சல்முனை கடற்கரை பகுதிக்கு சென்றுள்ளனர்.

அவர்களிடம் தமிழக பொலிஸார் விசாரணை மேற் கொண்டு வரு

20 ஆம் பக்கம் பார்க்க..



## அச்சுவேலி முக்கொலை; சந்தேகநபர் விளக்கமறியலில்



(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலி கதிரிப்பாய் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்ற முக்கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரை எதிர் வரும் 16 ஆம் திகதி வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதி மன்ற நீதவான்

20 ஆம் பக்கம் பார்க்க..

## மோடி பிரதமரானால் இலங்கைக்கு ஆபத்து!

### எச்சரிக்கிறார் சம்பிக்க

(கொழும்பு)

பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி இந்தியப் பிரதமரானால் இலங்கையின் இறையாண்மைக்கு ஆபத்து ஏற்படும் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவின் முக்கியஸ்தரும் அமைச்சருமான

20 ஆம் பக்கம் பார்க்க..

## இலங்கை முஸ்லிம்கள் லண்டனில் போராட்டம்

(கொழும்பு)

இலங்கையில் முஸ்லிம்கள் உட்பட சிறுபான்மை இனங்களுக்கு எதிராக கடும்போக்கு பௌத்த மத அமைப்புக்களால் தாக்குதல் நடத்தப் படுவதாகக் குற்றஞ்சாட்டி, பிரிட்டனில் இருக்கும் முஸ்லிம்களால் ஒரு கண்டன ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் நேற்று நடத்தப்பட்டது.

இலங்கை முஸ்லிம் புலம்பெயர் அமைப்பு என்ற இயக்கத்தின்தலைமையில், பல சிவில் அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்த இந்த போராட்டத்தில், நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கலந்துகொண்டார்கள்.

பிரித்தானிய பிரதமர் அலுவலகத்துக்கு முன்பாக கோசமிட்டு ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்த முஸ்லிம்கள், அங்கிருந்து ஊர்வலமாக இலங்கை தூதரகத்தை நோக்கிச்சென்றனர்.

பொது பல சேனா உட்பட சில

20 ஆம் பக்கம் பார்க்க..

## மின்சாரம் தாக்கியதில் இருவர் உயிரிழப்பு

(கரவெட்டி)

வெவ்வேறு பிரதேசங்களில் மின்சாரத்தாக்குதலுக்குள்ளான இருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவங்களில் ஒன்று நேற்று மதியம் ஒரு மணியளவில் பருத்தித்துறை பன்னைக்கட்டுப்பகுதியில் இடம்பெற்றது.

இதில் பருத்தித்துறை கொட்டடி கடற்கரை வீதியைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான இராசரத்தினம் ஜெயரத்தினசீலன் (வயது

20 ஆம் பக்கம் பார்க்க..

## இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு

(மல்லாவி)

இளைஞர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மதியம் மாங்குளம் புதிய கொலனி பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

இதில் கொழும்பில் வசித்துவந்த ரவிக்குமார் (வயது 32) என்பவரே உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டவராவார்.

வெளிநாட்டில் வசிந்துவந்ததாக கூறப்படும் பிரஸ்தாப இளைஞன் தொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்காக கொழும்பு வந்து சிலகாலம்

20 ஆம் பக்கம் பார்க்க..

## கணவனும் மனைவியும் ரி.ஐ.டியினரால் கைது!

(வவுனியா)

வவுனியா, கணேசபுரத்தைச் சேர்ந்த இளைஞன் மற்றும் அவரது மனைவி ஆகியோர் வெளிநாடு ஒன்றிற்கு செல்ல முற்பட்ட வேளை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

விடுதலைப் புலிகளை மீள உருவாக்க முயன்றதாக கூறி அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்ட அப்பன் அவர்களுக்கு உதவியதாக கூறி வவுனியா, கணேசபுரத்தைச் சேர்ந்த கணேசன் றேகன் (வயது 30) என்ற இளைஞனும் அவரது மனைவியுமே நேற்று காலை

20 ஆம் பக்கம் பார்க்க..

எச்சரிக்கை! எச்சரிக்கை!! எச்சரிக்கை!!!

VISA REJECTED

எப்படியாவது வெளிநாடு போய்விடவேண்டும் என்ற அவசரத்தில் நம்பகமற்ற வழிமுறைகளை முயன்று

என்றைக்குமே வெளிநாடு போகமுடியாத நிலைமைக்கு ஆளாகாதீர்கள்

அந்தந்த நாடுகளின் விசா நிபந்தனைகளின்படி 15 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட அனுபவம் கொண்ட விசா சேவை வல்லுனர்கள் மூலம் எந்தவொரு நாட்டுக்குமான Student Visa – Work Permit – Skilled Migration – PR சேவைகள்

இலட்சங்களைக் கொடுத்துவிட்டுக் காத்திருந்து ஏமாறாமல் வெறும் 30,000/= உடன் பயணத்தை ஆரம்பியுங்கள்



சிகரம் Sikaram TakeOff

மேலதிக விபரங்களுக்கு:
www.sikaram.lk
முற்பதிவு: 077 36 16 798

சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(C-7278)

## போரை நிறுத்தாத இந்தியா ஆயுத குழுவை உருவாக்கியது

### பேராசிரியர் சிற்றம்பலம் கடும் சாடல்

(கொழும்பு)

வரலாற்று ரீதியாக தமிழர் தாயகப் பூமியாக கருதப்படும் வடக்கு-கிழக்கு பிரிக்கப்பட்டபோது மௌனம் காத்த இந்தியா போரை நிறுத்த சந்தர்ப்பம் கிடைத்தும் காத்திரமான நடவடிக்கையெதனையும் எடுக்க [illegible] வளர்த்து விட்டு எமது பிராந்தியத்தில் அழிவையே ஏற்படுத்தியிருந்தது என இந்தியத்துணைத் தூதுவர் முன்னிலையில் யாழ்.பல்கலைக் கழக பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தெரிவித்துள்ளார்.

தென் அமெரிக்காவின் பிரிட்டிஷ் கயானாவிற்கு உயர்ஸ்தானிகராக இடமாற்றம் பெற்றுச்செல்

20 ஆம் பக்கம் பார்க்க..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மாற்றுவலுவுள்ள யுவதியை வல்லுறவு செய்த சாரதி

(குருமன்காடு)

வவுனியா சுந்தரபுரத்தில் மாற்றுவலுவுள்ள யுவதியை வல்லுறவு புரிந்த சாரதியொருவர் நேற்று முன்தினம் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஓகான் நிறுவனத்தின் வாகனத்தில், விசேட தேவைக்குரியவர்களை நிகழ்வொன்று முடிந்து வீடுகளில் ஒப்படைக்க சென்ற சமயம் இறுதியாக வாகனத்தில் இருந்த 21 வயதுடைய சித்தசுவாதீனமற்ற யுவதியை அவ் வாகனத்தின் சாரதியான 53 வயதுடைய நபர் வல்லுறவுக்குட்படுத்தியதாக பொலிசில் முறையிடப்பட்டது.

இதனையடுத்து நேற்றைய தினம் சம்பந்தப்பட்ட நபர் வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

நீதிவான் அவரை 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்துள்ளார். (செ-250)

# சுயதொழில் கடன் - ஊக்குவிப்பு திட்டத்தில் இணைந்து கொள்க

(யாழ்ப்பாணம்)

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு இலங்கை மத்திய வங்கியின் செயற்றிட்டத்தின் கீழ் யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியினால் சுயதொழில் கடன் ஊக்குவிப்புத் திட்டம் ஒன்றினை தொழில் வழிகாட்டல் மையத்தில் செயற்படுத்தவுள்ளது.

அந்த வகையில் மேற்படி அமைச்சின் கீழ் இயங்கும் தொழில்நுட்பவியல் கல்லூரி, தொழிற்பயிற்சி அதிகார சபை, தேசிய பயிலுனர் கைத்தொழிற். பயிற்சி அதிகார சபை மற்றும் இளைஞர் சேவைகள் மன்றம் போன்றவற்றில் பயிற்சி நெறிகளை பூர்த்தி செய்து கொண்ட மாணவர்கள் இக்கடன் திட்டத்தில் இணைந்து கொள்ள முடியும்.

இத்திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் இளைஞர், யுவதிகள் தங்கள் பெயர் விபரங்களை தொழில்நுட்பவியற் கல்லூரி தொழில் வழிகாட்டல் மையத்திற்கு வருகை தந்து தங்கள் பதிவுகளை மேற்கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேலதிக விபரங்களை யாழ்.பிறவுண் வீதியில் அமைந்துள்ள தொழில்வழிகாட்டல் மையம், தொழில்நுட்பவியல் கல்லூரிலோ அல்லது 0212220028 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறும் பணிப்பாளர் என்.யோகராஜன் கேட்டுள்ளார். (அ)

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். சுன்னாகம் மேற்குப் பகுதியில் கிணற்றிலிருந்து சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, நேற்று பகல சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் நேற்றிரவு வரை அடையாளங் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தொடர்பில் நீதவான் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

# முல்லையில் வெடிப்பு; பணியாளர் காயம்

முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியில் கணினி விற்பனை நிலையம் ஒன்றில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தை அடுத்து கடை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. அங்கு தங்கியிருந்த ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை 1.30 மணியளவில நடைபெற்றுள்ள இச் சம்பவத்தில் கடையில் பணியாற்றும இ.நிதர்சன் (வயது 24) என்பவர் காலில் எரிகாயங்களுடன முள்ளியவளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரிக்கு அருகில குறித்த கணினி, இலத்திரனியல் உபகரண விற்பனை நிலையம் உள்ளது.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இந்தக் கடையில் வெடிப்பு சத்தம் கேட்டுள்ளது. அதன் பின்னர் கடை தீப்பிடித்து எரிந்துள்ளது.

இதன்போது கடைக்குள் பணியாளர் ஒருவர் தங்கியிருந்துள்ளார். இவரே எரிகாயங்களுக்கு இலக்காகியுள்ளார்.

உடனடியாக அயலில் இருந்தவர்கள் கூடி தீயை அணைக்க முற்பட்ட போதும் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அங்கு வந்த பொலிஸார் தண்ணீர் பவுஸரின் உதவியுடன் தீயை அணைக்க முயன்றனர். எனினும் அந்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. கடை முற்றிலுமாக எரிந்து போனது.

சம்பவத்துக்கு முன்னர் கடையில் வெடிப்பு சத்தம் கேட்டதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில், புலனாய்வு பிரிவினரும் பொலிஸாரும் காயமடைந்த நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (செ-267)

**பிள்ளையார் இன்**

வாடிக்கையாளரின் அபிமானம் பெற்ற உங்கள் பிள்ளையார் இன் இல் இன்று முதல் மாலை 3 மணி தொடக்கம் 6 மணிவரை யாழ் முறைப்படி தயாரிக்கப்பட்ட "மசாலா தோசை, பூரி, சப்பாத்தி" சுடச் சுட உடனடியாக வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 0212222829

(சி-7274)

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-7280)

# திருட்டு போனது 12 பவுண் நகை

(யாழ்ப்பாணம்)

வீட்டில் யாருமில்லாத நேரம் பார்த்து ஜன்னல் கம்பிகளை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த சுமார் 7 இலட்சம் ரூபாய் பெறுமதியான 12 பவுண் தங்க நகைகளையும் 5 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச்சென்றுள்ளனர்.

யாழ். நல்லூர் சங்கிலியன் வீதியிலுள்ள வீட்டினிலேயே நேற்றுக்காலை 10 மணிக்கும் நண்பகல 12 இடைப்பட்ட நேரத்தில் இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் தாலிகொடி, தங்கச்சங்கிலி, காப்பு உள்ளடங்கலாக 12 பவுண் நகை திருட்டுபோயுள்ளதாக வீட்டின் உரிமையாளரான தவராசா கோமதி என்பவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (செ-6)

## Association for Health and Counselling"Shanthiham"

### Quotation for Laptop/ Desktop Computers

Executive Director,AHC-Shanthiham will be obtained sealed quotation under registered cover for the following Brand new Computers with latest features (More than 3rd Generation) with their relevant technical specification up to **28.05.2014.** (USA product preferable)

1. Laptop computers 03 Nos.
2. Desktop computers 03 Nos. with CPU, Monitor, Keyboard, Mouse and UPS with their features

Any Clarification could be obtained From Finance Branch (AHC-Shanthiham) T'Phone 021 321 1348

J.Thatparan
Executive Director,
AHC-Shanthiham.

8,8/1 Katpakavinayagar Lane,
Off Kachcheri Nallur Road,
Jaffna. 05.05.2014

(C-7279)

## கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்

### பதவி வெற்றிடம்

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பிராமண குல உதவி அர்ச்சகர்**
**02. காரியாலய முகாமையாளர்**

அண்மையில் பெறப்பட்ட இரண்டு நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

A9 வீதி, கிளிநொச்சி.

செயலாளர் கோ.பத்மநாதன்

தலைவர் ச.ஸ்ரீகௌரிபாலா

(C-7277)

# துயர் பகிர்கின்றோம்




அமரர் திருமதி **அன்னம்மா கணேசபிள்ளை**

எமது பாடசாலை ஆசிரியர் திரு.க. கேதீஸ்வரன் அவர்களின் பாசமிகு மாமியார் அமரர் திருமதி அன்னம்மா கணேசபிள்ளை கடந்த 06.04.2014 அன்று சிவபதமடைந்தார். அவர்களின் மறைவிற்கு அனுதாபம் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
ஆசிரிய நலன்புரிக் கழகம்,
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்

(6325)

# கண்ணீர் அஞ்சலி



செபஸ்ரியாம்பிள்ளை அன்ரனி பெர்ணாண்டோ

எமது பாடசாலை முன்னாள் ஆசிரியை திருமதி ரெ.கலிஸ்ரா அவர்களின் பாசமிகு தந்தை செபஸ்ரியாம்பிள்ளை அன்ரனி பெர்ணாண்டோ அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய சகோதரர்கள்,**
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்

(6324)

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னம்மா கந்தையா



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் 37/48, சேர் பொன் இராமநாதன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மாகந்தையா நேற்று (05.05.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதர் கந்தையாவின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.05.2014) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தின் சார்பில்
செல்வி அன்னலட்சுமி கந்தையா
(ஓய்வுபெற்ற அதிபர், யா/பெரியபுலம் ம.வி)

(6326)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேர்ஸ் ரைவஸ் நோய்த்தாக்கம் தீவிரமடைகிறது சவுதியில்

## ஹஜ் கடமைக்கு தடைவிதிப்பு

சவுதி அரேபியாவில் தீவிரமடைந்து வரும் மேர்ஸ் வைரஸ் நோயை கட்டுப்படுத்தும் பொருட்டு ஹஜ் உம்ரா கடமைகளுக்கு சிறுவர்கள், 60 வயதுக்கு மேற்பட்டோரை அனுமதிப்பதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தவிர ஏனைய வகை நோய்களுக்கான தடுப்பு மருந்தை பெறாதவரகளுக்கும் விசாக்களை வழங்குவதில்லை என்றும் மக்கா தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்தின் ஹஜ், உம்ரா குழுவின் தலைவர் சாத்அலகுரைஸி தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியாவில் தீவிரமடைந்திருக்கும் மேர்ஸ் வைரஸை கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் ஓர் அங்கமாக பல்வேறு ஹஜ் மற்றும் உம்ரா முகவர்களும் சிறுவர்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட யாத்திரிகர்களின் விசா விண்ணப்பங்களை ஏற்பதை நிறுத்தியுள்ளன.

சவுதியின் மேற்கு மாகாணங்கள் குறிப்பாக மக்கா, மதீனா மற்றும் ஜித்தா நகரங்களில் மேர்ஸ் வைரஸ் பரவியிருக்கும் நிலையில் பல ஹஜ் மற்றும் உம்ரா சேவை வழங்குநர்களும் வயதான யாத்திரிகர்களை தவிர்த்து வருகின்றனர். எனினும் இது குறித்து சவுதி அரசு இதுவரை உத்தியோகபூர்வ அறிவிப்பு எதனையும் வெளியிடவில்லை.

புனித ரமழான் மாதத்திற்கு இன்னும் இரண்டு மாதங்களே உள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வைரஸ் தொற்றும் வாய்ப்பு அதிகம் உள்ள சிறுவர்கள் மற்றும் 65 வயதுக்கு கூடிய யாத்திரிகர்கள் ஆபத்து நீங்கும் வரை எதிர்வரும் காலத்தில் யாத்திரை திட்டத்தினை ஒத்தி வைத்துக் கொள்ளும்படி சவுதியின் சுகாதார அமைச்சர அப்துல் பக்கிஹ் கடந்த வாரம் அறிவுறுத்தியிருந்தார். யாத்திரிகர்களிடம் வைரஸ் பரவும் அபாயம்காரணமாக உம்ரா மற்றும் ஹஜ் சேவை முகவர்கள் தமது வாடிக்கையாளர்களை அறிவுறுத்த விசேட நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (2)

## நிர்வாக சபைத்தெரிவு

கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தின் இவ்வாண்டுக்கான நிர்வாக சபைத் தெரிவு பொதுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை மாலை சனசமூக நிலையத்தில் இந்நிலையத் தலைவர் சி.ஜி. திருமாலழகன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக சனசமூக நிலைய சமாசத்தின் தலைவர் கொ. குணசிங்கம், சனசமூக நிலைய சமாசத்தின் செயலாளர் கு.மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கடந்தாண்டு நிர்வாக சபையினரால் நல்ல முறையில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதால் நடப்பாண்டிலேயும் குறித்த நிர்வாக சபையினரை பொது சபை உறுப்பினர்கள்ஏகமனதாகதெரிவுசெய்தனர்.

இதற்கமைய தலைவராக சி.ஜி. திருமாலழகன், செயலாளராக எஸ். கங்காதரன், பொருளாளராக சி. கிருஸ்ணதாசன், உபதலைவராக ஆர். கருணாகரன், உப செயலாளராக எம். நிறோசன், போசகர்களாக எஸ். நவரத்தினம், எஸ். சற்குணம் ஆகியோருடன் ஏழு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவாகினர். (2-60)


## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளது.

கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு (அனுபவமுள்ள இரு பாலாரும் - ஆண்கள் இரவுக்கடமை)

தெரிவு முறை

- நேர்முகத் தேர்வு
- செயன்முறை

தகைமையுடையவர்கள் 06.05.2014 (செவ்வாய்க்கிழமை) இன்று பிற்பகல் 3.30 மணிக்கு வலம்புரி அலுவலகத்திற்கு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும். (வலம்புரி அலுவலகத்தை அண்மித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


# துப்பாக்கிச்சூடு நியாயமானது; நியாயப்படுத்தியது ஆணைக்குழு

(கொழும்பு)

வெலிவேரிய, ரத்துபஸ்வெல பகுதியில் குடிநீர் கேட்டு ஆர்ப்பாட்டம் நடத்திய பொது மக்கள் மீது இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலை இலங்கையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழு நியாயப்படுத்தியுள்ளதாக தெரிய வருகின்றது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டதுடன், 40 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தேவையின்றி இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டமையும், இராணுவத்தினர் பொது மக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியமையும் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது.

இது தொடர்பில் விசாரணை நடத்திய இலங்கையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழு, தமது அறிக்கையை இறுதி செய்துள்ளது.

இதில் இராணுவம் இந்த ஆர்ப்பாட்டத்தின் போது தமது வரையறைக்குள்ளேயே செயற்பட்டிருப்பதாக மனிதவுரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அறிக்கை இராணுவத் தளபதியிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் தலைவர் பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார். ஊடகவியலாளர்கள், கிராம மக்கள், படையினர் மற்றும் பொலிஸாரால் கிடைக்கப்பெற்ற வாக்கு மூலங்களின் அடிப்படையில் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (2)

# ஐ.நாவின் விசாரணைக்கு ஒத்துழைக்கமாட்டோம்

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைய ஐ.நா. மனிதவுரிமை அலுவலகம் விசாரணை செயற்பாடுகளை ஆரம்பித்தால் அதற்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்காது. இது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எவ்விதமான மாற்றமும் இல்லை என்று நீர்ப்பாசன முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி. சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கை மனிதவுரிமை விவகாரம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக இம்மாதமளவில் விசாரணைக் கட்டமைப்பை நிறுவுவதற்கான செயற்பாடுகளை ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவை அலுவலகம் ஆரம்பிக்கும் சாத்தியம் உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை குறித்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை அலுவலகம் இலங்கை தொடர்பில் வெளிமட்டத்திலிருந்து விசாரணைகளை நடத்தினால் அதற்கு முகம் கொடுக்கவும் அரசாங்கம் தயாராகவே இருக்கின்றது. இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை அநீதியானதுடன் பக்கச் சார்பானது என்பதனை தெளிவாக வலியுறுத்தியுள்ளோம்.

இம் மாதம் விசாரணைக் கட்டமைப்பை நிறுவவுள்ள மனிதவுரிமை பேரவை அலுவலகம் அது தொடர்பில் இலங்கைக்கும் அறிவிப்பதற்கு எதிர்பார்ப்பதாக ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை அலுவலகத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் விசாரணைக் கட்டமைப்பு மற்றும் அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கையை தீர்மானிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைய விசாரணை கட்டமைப்பு உருவாக்கப்படும் என்றும் மனிதவுரிமைப் பேரவை அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை இலங்கை அரசாங்கம் முழுமையாக நிராகரித்து விட்டது. அது பக்கச்சார்பானது என்றும் அநீதியானது என்றும் அரசாங்கம் தெளிவாக கூறிவிட்டது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அலுவலகம் பிரேரணைக்கு அமைய விசாரணை செயற்பாடுகளை முன்னெடுக்கும் என்பது எமக்குத் தெரிந்த விடயமாகும். ஆனால் மனிதவுரிமைப் பேரவை அலுவலகத்தின் விசாரணை செயற்பாடுகளுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்காது. இதனை வெளிவிவகார அமைச்சு உறுதியாக கூறிவிட்டது.



அந்தவகையில் அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டில் எவ்வித மான மாற்றமுமில்லை. அதேவேளை ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை அலுவலகம் இலங்கை தொடர்பில் வெளிமட்டத்திலிருந்து விசாரணைகளை நடத்தினால் அதற்கு முகம் கொடுக்கவும் அரசாங்கம் தயாராகவே இருக்கின்றது என்றார். (2)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532


## இராசி பலன்

**06.05.2014**
**(சித்திரை 23, செவ்வாய்க்கிழமை)**
**சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு**
**சப்தமி முன்னிரவு 7.24 மணிவரை**
**பூசம் முன்னிரவு 8.56 மணிவரை**
**இராகுகாலம் 2.56-4.26 மணிவரை**
**சுபநேரம் 10.26-11.56 மணிவரை**

வளவன்

**மேடம்** — தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரும் நாள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப்பார்த்து நீங்களும் வாங்க நினைப்பீர்கள், போக்குவரத்துக்களால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயமும் கிடைக்கலாம்.

**இடபம்** — நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நீண்ட நாளைய பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பீர்கள்.

**மிதுனம்** — இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும், புதிய நட்பால் பொருளாதர விருத்தி ஏற்படலாம்

**கடகம்** — அம்பிகை வழிபாட்டால் இன்பம் காணவேண்டிய நாள், நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்களைத் தேடி வரலாம், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** — தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முன் வருவீர்கள், திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** — குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசத்தைக் கொடுக்கும், நல்ல தகவல்கள் உங்களை நாடி வரலாம்.

**துலாம்** — அருமையான நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப்பெறுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், எதிர்பாராத பணவரவுகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** — தந்தைவழி உறவினர்களால் நன்மையுண்டு, எதிர்பாராத பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, சொத்துக்கள் தொடர்பில் இருந்த பிணக்குகள் தீரும், ஆன்றோர் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**தனுசு** — ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், குடும்பத்தில் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மகரம்** — உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** — உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங் கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மீனம்** — பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, சொத்துக்களால் நன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சங்கானையில் இளைஞர் குழுவினர் கடும் அட்டகாசம்

(சங்கானை)

ஐந்து பேர் கொண்ட இளைஞர் குழு போதை தலைக்கேறிய நிலையில் பொது மக்களை தாக்கியுள்ளது.

சங்கானை தேவாலய வீதியில் கடந்த 3 ஆம் திகதி நண்பகல் வேளை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

சம்பவதினம் குறித்த இளைஞர் குழு சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்குள் சென்று போதையேற்றியுள்ளது.

இதனால் நிலை குலைந்து போன அவ்விளைஞர்கள் அப்பகுதி வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் மற்றும் தத்தம் காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களையும் மூர்க்கத்தனமாக தாக்கியுள்ளனர்.

அதுமட்டுமன்றி வீடுகளுக்குள்ளும் புகுந்து அட்டகாசம் புரிந்து வீட்டு கதவையும் உடைத்து எறிந்தனர்.

தேவையற்ற முறையில் மக்களை வம்புக்கு இழுத்து தாக்குதல் நடத்திய இவ் இளைஞர்கள் சங்கானை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்தான் என குறிப்பிட்டுள்ள அவ்வூர் மக்கள், இவ் விடயம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர். (அ)

## கலாசார பேரவை செயற்குழு கூட்டம்

யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் கேட்டுள்ளார்.

நன்றி:-ஜலன்ட்




# அரியாலையில் விரைவில் நவீன மீன் விற்பனைக்கூடம்

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் வடமாகாண முதலாவது மீன்விற்பனைக்கூடம் நவீன வசதிகளுடன் அரியாலையில் கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் நிதி அனுசரணையின் கீழ் விரைவில் அமைக்கப்படுவதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என யாழ்.பிராந்தியமுகாமையாளர்சுகனோஜன் தெரிவித்தார். கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற மேற்படி விற்பனை கூடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதன்மூலம் யாழ்.மாநகர வாழ் மக்கள் மிகவும் குறைந்த விலையில் தரமான உடன் மீன்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

தரமான உடன் மீன் நுகர்வின் மூலம் யாழ்.நகர் மக்கள் மத்தியில் அதிகரித்திருக்கும் இருதய கோளாறு சம்பந்தமான பிரச்சினைக்கு இது உடனடி தீர்வாக அமையலாம்.

ஏனெனில் கடல் உணவு மற்றும் மீன் போசனை பதார்த்தங்களின் நுகர்வின் மூலம் ஒமேகா 3 எனும் கொழுப்பு அமிலம் உடலில் சேர்வதால் இது இருதய நோய்களை தவிர்க்கும் காரணியாகும் என்றார். (அ)

# துவாளி அம்மன் வீதி மக்கள் போக்குவரத்திற்கு திறப்பு



(கரணவாய்)

உடுப்பிட்டி பகுதியின் துவாளி அம்மன் பிரதான வீதி நீண்ட காலங்களுக்கு பின்னர் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியை நேற்று முன்தினம் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி.அ.தியாகேஸ்வரி திறந்து வைத்துள்ளார்.

குறித்த பாதையானது நீண்டகாலமாக புனரமைக்கப்படாது இருந்தமையால் மக்கள் போக்குவரத்து சிரமமாக காணப்பட்டது.

இந்நிலையில் வடமராட்சி தெற்கு மேற்கு தவிசாளர் பொ.வியாகேசு நிதியில் மற்றும் பொதுமக்கள் நிதியிலும் 300 மீற்றர் நீளமான மேற்படி வீதி புனரமைக்கப்பட்டது.

வீதி திறக்கப்பட்டதையடுத்து துவாளி அம்மன் மஹோற்சவத் திருவிழாவின் கொடியேற்றம் நேற்றுக் காலை இடம்பெற்றது. (2-60)

# ஆவரங்கால் கிழக்கு கடற்பரப்பில் சட்டவிரோதமாக கல் அகழ்வு

(நல்லூர்)

ஆவரங்கால் கிழக்கு கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் கல் அகழ்வு இடம்பெற்று வருவதாக கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளார்.

இதனால் கடற்றொழிலை மேற்கொள்ளும் கடற்றொழிலாளர்கள் தமது தொழிலை மேற்கொள்ள செல்கையில் சிரமப்படுவதாகவும் கல் அகழ்ந்த பள்ளத்தில் தாம் பல தடவை வீழ்ந்து எழும்புவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் கடற்கரையில் அப்பிரதேச மக்களால் குப்பைகள் கொட்டப்படுவதாகவும் இதனால் சுவாசிக்க முடியாதளவுக்கு துர்நாற்றம் வீசுவதாகவும் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இக்கடற்பரப்பில் கல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதனையும் பொதுமக்கள் கழிவுப் பொருட்களை கொட்டுவதையும் தவிர்க்க வேண்டும் என கடற்றொழிலாளர்கள் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-134)

# ஆங்கில விவாத இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் செயலகத்தினால் நடத்தப்பட்டு வந்த ஆங்கில விவாத இறுதிப்போட்டி நிகழ்வு யாழ்.கல்வியியல் கல்லூரியில் எதிர்வரும் 8 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதனை தொடர்ந்து வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும், சிறப்பு விருந்தினர்களாக ஜனாதிபதியின் ஆலோசகர் சுனிமல் பெனாண்டோவும், இந்திய மும்மொழிக் கற்கைநெறி பேராசிரியர் பி. மணியற்றவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்விற்கு வடமாகாணத்தில் உள்ள சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களையும் அமைச்சு, திணைக்கள தலைவர்களையும் ஆங்கில உதவி ஆசிரியர்களையும் ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு ஆளுநர் செயலகம் கேட்டுள்ளது. (அ)

# ஆயுதம் தொடர்பில் கைதான பெண்ணுக்கு விளக்கமறியல்

யாழ்.ஊர்காவற்றுறை பகுதியில் வீடொன்றில் மீட்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட பெண்ணினை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் கே.சபேசன் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி பெண்ணை நேற்று முன்தினம் பதில் நீதவானின் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்திய போதே நீதவான் மேற்படி உத்தரவினைப் பிறப்பித்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பிரான கந்தையா வருணன் என்பவரது வீட்டிலிருந்து கடந்த சனிக்கிழமை ரி 56 ரக துப்பாக்கி, ஒரு மகஸீன், 15 ரவைகள் உள்ளிட்டவை ஊர்காவற்றுறை பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் மீட்கப்பட்டன.




குறித்த பிரதான சந்தேக நபர் தலைமறைவாகியிருந்த நிலையில் அவரது மனைவி கைது செய்யப்பட்டு ஞாயிற்றுக்கிழமை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே நீதவான் மேற்படி உத்தரவினைப் பிறப்பித்தார். (அ)

## அலங்கார உற்சவம்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு தாழையம்பதி அருள்மிகு பார்வதி சமேத அன்ன மகேஸ்வரர் திருக்கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 30 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் அலங்காரத் திருவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு விசேட சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது.

உற்சவ காலங்களில் தினமும் மாலை 7 மணிக்கு அன்னைதாசன் க.ஆனந்தராசாவின் பெரிய புராண இசைச்சொற்பொழிவு இடம் பெற்று வருகிறது. (2)

# இந்தியா நடுநிலை வகித்தமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம்

## சாடுகிறது த.தே.ம. முன்னணி

இலங்கை அரசிற்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் வாக்கெடுப்பின் போது இந்தியா நடுநிலை வகித்தமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணத்திலுள்ள அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2012 ஆம் ஆண்டு ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவளித்தமைக்கு தமிழ் நாட்டில் இடம்பெற்ற பாரிய போராட்டங்கள் தான் காரணம். இதை தெரிந்து கொண்ட கூட்டமைப்பின எம்.பி எம்.ஏ.சுமந்திரன் தமிழ்நாட்டில் பேசும் போது உங்கள் பிரச்சினையினை நீங்கள பார்த்துக் கொள்ளுங்கள் எம்பிரச்சினையினை நாம் பார்த்துக் கொள்கின்றோம் என்று கூறினார்.

இவ்வாறு சுமந்திரன் தமிழ் நாட்டினை வாயை மூடும்படி கூறியதால் தான் இம்முறை தமிழ் நாட்டின் போராட்டங்கள் பலவீனமுற்று காணப்பட்டது. ஆகையால் இந்தியா மூன்றாவது தீர்மானத்தின் வாக்கெடுப்பின்போது நடுநிலைவகித்ததற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம்.

சுமந்திரன் ஐ.நா.அமர்வுகள் தொடர்பான பல பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். நாம் சர்வதேச விசாரணையினை கோரவில்லை என்று சுமந்திரன் கூறியுள்ளார். மனித உரிமை மீறல் விசாரணையை மட்டும்தான் மக்கள் விரும்புகிறார்கள் என்பது இலங்கை அரசின் எதிர்பார்ப்பு என்றும் இதற்கு மேலாக போர்க்குற்ற விசாரணையும் இடம் பெறும் என்று சுமந்திரன் கூறுகிறார்.

அமெரிக்கத் தீர்மானம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திட்டமிட்டே கருத்துக்களை மட்டுப்படுத்தியுள்ளது. மனித உரிமை என்பது வேறு, மனிதாபிமான சட்டம் என்பது வேறு. மனித உரிமை விசாரணை நடக்க வேண்டுமானால் அதில் மனிதாபிமான சட்டத்திற்குள் அடங்காதவை நடத்தப்படவேண்டும். ஆனால் உண்மையில் தமிழருக்கு இடம்பெற்ற அநியாயம் சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்குள் வரும் என்று நாம் கூறினோம்.

தமிழர் தொடர்பில் இத்தீர்மானத்தில் எதுவும் இல்லை என ஒருசில தரப்பினர் கூறியமையினாலேயே நாம் இதனை எதிர்த்தோம் என்று ஆபிரிக்க நாடுகள் கூறியதாக சுமந்திரன் கூறியிருந்தார்.

ஆனால் உண்மையில் நான் அந்நாட்டவர்களுடன் கதைத்த போது, "அமெரிக்கா கொண்டு வரும் எந்தத் தீர்மானத்தினையும் ஏற்பதில்லை என்றும், அமெரிக்கா உள்நாட்டு அரசியலினைக் குழப்பி அதனை தமக்கு சாதகமாகப் பயன்படுத்துவதினாலேயே ஏற்பதில்லையெனத் தெரிவித்திருந்தனர்" ஆகவே ஐ.நாவில் நானும் கலந்து கொண்டேன் என்ற வகையில் மக்களுக்கு உண்மையினை கூற வேண்டிய கடமைகள் எமக்கு உண்டு. ஆகவே மக்கள் எதை சொன்னாலும் நம்புவார்கள் என்று நினைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு பிழையான கருத்துக்களை கூறி மக்களை திசை திருபப பார்க்கிறார்கள் என்று அவர் மேலும் குற்றம்சாட்டினார். (2-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815, 021 567 1532

# பாலியல் வன்முறைகள் குறித்து இலங்கை அச்சம்

பாலியல் வன்முறைகள் தொடர்பில் அடுத்த வருட முற்பகுதியில் லண்டனில் நடைபெறவிருக்கும் சர்வதேச அளவிலான மாநாடு தமக்கு எதிராகப் பயன்படுத்தப்படலாம் என இலங்கை அரசாங்கம் அச்சமடைந்திருக்கின்றது. இலங்கை அரசின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இதனை உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் பாலியல் வல்லுறவும், பாலியல் வன்முறைகளும் இலங்கையில் பெருமளவுக்கு இடம்பெறுவதாக ஐ.நா.வின் அறிக்கை ஒன்றில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றது. இந்தப் பின்னணியில் அடுத்த மாத ஆரம்பத்தில் நடைபெறப் போகும் இந்த மாநாட்டில் இலங்கையில் இடம்பெறும் பாலியல் வன்முறைகள் குறித்து கவனம் செலுத்தப்படலாம் என இலங்கை அஞ்சுகின்றது.

நெருக்கடிகளின்போது பாலியல் வன்முறைகள் குறித்த விவகாரங்களைக் கையாள்வதற்கான ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனின் விஷேட பிரதிநிதி ஸனீப் பங்குரட், இலங்கையில் காணப்படும் நிலைமைகள் தொடர்பாக தாம் கவலையடைந்திருப்பதாகத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஐநா.வுக்கான இலங்கையின் விசேட பிரதிநிதி பாலித கோகணவின் கவனத்துக்கும் அவர் கொண்டுவந்திருந்தார். நெருக்கடிகளின் போது பாலியல் வன்முறைகள் இடம்பெறும் 21 நாடுகளில் ஒன்றாக இலங்கையையும் அவர் அண்மைய அறிக்கை ஒன்றில் வகைப்படுத்தியிருந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது. (2)

## காலநிலை மாற்றத்தினால் டெங்கு நோய் அபாயம்

நாட்டில் பரவலாக பெய்து வரும் மழை காரணமாக மீண்டும் டெங்கு நோய் பரவும் அபாயம் இருப்பதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப்பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போதுள்ள மழையுடன் கூடிய காலநிலை நிலவுகின்றமையினால் மழைநீர் தேங்கி நிற்கக்கூடிய அபாயம் உள்ளது. இது டெங்கு நோய் பரவுவதற்கு வழிவகுக்கும். எனவே, மக்கள் விழிப்புடன் செயற்படவேண்டும்.

மேலும், நாட்டிலுள்ள பிரதேச சுகாதார பணிமனைகளிடையே டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது. (2)


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.04.2013 வரையும் அடகுவைத்து மீட்கப்படாத நகைகள் 17.06.2014 இலிருந்து காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | -- |
| நெல்லியடி | -- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

(சி-7275)

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCY

### POST OF CHIEF SECURITY OFFICER GRADE II (ON ASSIGNMENT BASIS)

Applications are invited by me up to 28.05.2014 from suitably qualified persons for the post of Chief Security Officer, Grade II (on assignment basis).

**QUALIFICATIONS:**

1. An officer not below the rank of Assistant Superintendent of Police, Captain of the Army or an officer of equivalent rank in the other Armed Services.

OR

2. A Person who possesses a degree from a recognized University/ Higher Educational Institutions with not less than five (05) Years experience in security work.

OR

3. A holder of the post of Security Inspector, Grade I or above in the University Security Services and confirmed in the present post with not less than eight (08) Years satisfactory service in those grades.

**AGE:** Not more than 45 Years
(Not Retired Officers from the Police or other Armed Services may also apply)

**Salary Scale:** Rs. 39,024.00 (fixed) per month.

**Selection:** By Structured Interview

Applications should be on prescribed forms issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar/ Establishments (Non- Academic) of this University on a payment of Rs. 100/- for each application form at the people's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order/ Postal Order to the value of Rs. 100/- drawn in favour of the bursar of this University together with self addressed Rs.5/- Stamped envelope of 23x10 c.m. in size.

The envelop containing duly filled application form must bear **"Post of Chief Security Officer Grade II (on assignment basis)"** on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 28.05.2014.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Departments is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

REGISTRAR
University of Jaffna.
29.04.2014

(சி-7276)


LED LED LED LED LED
TCT Multi Trade Centre
இலும் (527, நாவலர் வீதி, யாழ்)
ஜெகன் களஞ்சியம் (447, கே.கே.எஸ் றோட், யாழ்)
இலும் Double Energy Saving Para Lights HiGreen LED Bulbs (Pin Type மட்டுமே இப்போது உள்ளது)
விற்பனையாகின்றது!
மொத்த கொள்வனவிற்கு,
0789 13 08 13 / 0788 745 253
(8315)



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 52.5<br>தகைமை/தொழில்: A/L (அவுஸ்திரேலியா)<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/3089 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 99 செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc /கணனி மென்பொருள் பொறியியலாளர்<br>தொ.இ: G/3093 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 16.75<br>உயரம்: 176 cm<br>தகைமை/தொழில்: BICT, MSc / System Administrator (UK)<br>தொ.இ: B/3090 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 52.75 செவ் 2 இல்<br>உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்: BA / முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: G/3099 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 27<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L / வியாபாரம்<br>தொ.இ: B/3091 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா: 16.5<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Software Analyzer (அவுஸ்திரேலியா PR) / Degree in IT<br>தொ.இ: G/1935 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: 20<br>உயரம்: 168 cm<br>தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்<br>தொ.இ: B/3092 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 7.75<br>தகைமை/தொழில்: BSc / விரிவுரையாளர்<br>தொ.இ: G/1936 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழருக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கவே ஐ.நா.தீர்மானத்தை புறக்கணித்ததாம் இந்தியா

## துணைத்தூதுவர் மகாலிங்கம் மீண்டும் எடுத்துரைப்பு

(கொழும்பு)

**ஐ.நா அமர்வில் அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்டு நிறை வேற்றப்பட்டுள்ள மூன்றாவது தீர்மானத்தின் வாக்கெடுப்பை புறக்கணித்ததால்தான் இந்தியா இலங்கை அரசுடன் இணைந்து பேசக் கூடியதாகவுள்ளது என்றும் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தால் இலங்கைத்தமிழர்களுக்கு தீர்வைப்பெற்றுக் கொடுக்கக் கூடிய சந்தர்ப்பத்தை இந்தியா இழந்திருக்கும் எனவும் யாழ். இந்தியத்துணைத்தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.**

தென்னமெரிக்காவின் பிரிட்டிஷ் கயானாவிற்கு உயர்ஸ்தானிகராக இடமாற்றம் பெற்றுச் செல்லும் யாழ்.இந்தியத்துணைத் தூதுவர் வி.மகாலிங்கத்திற்கு பிரியாவிடை நிகழ்வு ரில்ஹோ விருந்தினர் விடுதியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் இங்கு துணைத்தூதுவராக வருகைதந்தபோது இங்குள்ளவர்களுடன் உரையாடியதன் மூலம் உணவு கிடைத்தலே போதும் என்ற நிலையில் வடபகுதியில் மக்கள் இருந்தனர் என்பதை அறியமுடிந்தது.

எனக்கு விருப்பமான உணவை பெறவேண்டும் என்பதற்காக கோபப்படுவதை அன்றிலிருந்து நிறுத்திக்கொண்டேன்.

அதேவேளை 20 வருடம் கற்றன்த விடுதியில் வேலை செய்த இளைஞர்களுக்கு கற்றுக் கொடுத்தேன்.

யாழ்ப்பாணத்தில் கிடைத்த அனுபவம் போன்று இனிமேல் எந்தவொரு நாட்டிலும் எனக்கு கிடைக்காது. வெளிநாடு ஆனாலும் உள்நாட்டில் வாழ்ந்த உணர்வு யாழ்ப்பாணத்தில் இருந்த போது கிடைத்தது.

மலேசியாவில் இருந்தபோது கூட எனக்கு இப்படிப்பட்ட அனுபவம் கிடைத்ததில்லை.

யாழ்ப்பாணத்திற்கு வரும் போது பொதுவாக ஒரு பயமிருந்தது. யாழ்ப்பாணத்தைப்பற்றி அறிந்து கொண்டு தமிழர்களுக்கு முடிந்ததைச் செய்யலாம் என்ற நோக்கத்தில் வந்தேன்.

வெளியுறவுத்துறையில் செய்ய வேண்டிய வேலையைவிட அதிக துறைகளில் நான் சேவை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

வெளியுறவுத்துறையை பொறுத்தவரை அபிவிருத்தி சம்பந்தமாகயிருக்காது. ஆனால் இலங்கையில் அவ்வாறில்லை. மேலும் இலங்கையில் இந்தியா செய்ததைப் போன்று வேறு எந்தவொரு நாட்டிலும் இந்தியா இவ்வளவு அபிவிருத்திப் பணிகளைச் செய்ததில்லை.

இங்கு உரையாற்றி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்,

இந்தியாவின் அணுகு முறையை பற்றிக் கூறினார். இந்தியாவின் அணுகுமுறையை இரண்டு வகையாக எடுத்துக்கொள்ளலாம். நான் வரும் முன் , நான் வந்ததன் பின். நான் வரும் முன்நடந்தது சரித்திரம். சரித்திரம் பற்றி பேசுவதற்கு எனக்குத் தகுதியில்லை.இருந்தாலும் சில விடயங்களைக் கூற வேண்டும் என்று அவர் கூறினார். மக்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்த வேண் டியுள்ளது என்று.மக்களின் ஆதங்கத்தின் அடிப்படையில் தான் இந்தியா கடந்த 1987 ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படையை இங்கு அனுப்பியது. இந்திய அமைதிப படையை எவ்வாறு அனுப்பியது; எப்படிப்பட்ட சூழ்நிலையில் அனுப்பியது என்று நான் கூறவேண்டியதில்லை .

இந்திய அமைதிப்படை இங்கு வந்தபோது எப்படிப்பட்ட வரவேற்பு இந்திய அமைதிப்படைக்கு வழங்கப்பட்டது என்பதையும் நான் உங்களுக்கு கூறவேண்டியதில்லை. அதை நான் எல்லோரிடமும் கேட்டு அறிந்து கொண்டேன். இந்திய அமைதிப்படை இங்குவந்த 3 மாதங்களில் என்ன நடந்தது என்பதையும் நான் கூறவேண்டியதில்லை.

உங்கள் எல்லோருக்கும் தெரியும் என்னைவிட அப்படி இந்திய அமைதிப்படை எந்த நோக்கத்தோடு இங்கு வந்ததோ அந்த நோக்கத்தையும் என்ன தீர்வு காண வேண்டும் என்று வந்தார்களோ அந்தத்தீர்வை அடைய விடாமல் தடுத்ததற்கு இந்திய அமைதிப் படையோ இந்திய அரசாங்கமோ காரணமல்ல என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அதைப் பற்றி நான் இங்கு கூறவிரும்பவில்லை.

மேலும் ,13 ஆவது திருத்தத்தை இந்தியா சரியாக கையாளவில்லையென்று உங்கள் எல்லோருக்கும் தெரியும். 13 ஆவது திருத்தத்தை திருத்தமே இல்லாமல் திருத்தம் செய்வதற்கு எவ்வளவு முயற்சிகள் 2013 இல் இடம்பெற்றது என்று. ஆனால் அந்த முயற்சிகள் இந்தியாவினால்தான் தடுத்து நிறுத்தப்பட்டது. வடக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று எவ்வளவோ மாதங்கள், எவ்வளவோ வருடங்கள் இங்கு மனப் போராட்டம் இடம்பெற்று வந்தது. வடக்கு மாகாணத்தேர்தலையும் சரியான ஒரு தருணத்தில் நடத்த வேண்டும் என்று இலங்கை அரசை நிர்ப்பந்தித்ததும் இந்தியாவே. ஏனெனில் இந்தியாவிற்கு சென்றுதான் தேர்தல் திகதியும் மாதமும் குறிக்கப்பட்டது.

எனவே இந்திய அரசாங்கம் வடக்கு மாகாணத்தில் தேர்தலை நடத்தவேண்டும் என்பதற்காக என்ன செய்யவேண்டுமோ அதனைச்செய்தது. இன்று வடக்கில் முதலமைச்சர் ,அமைச்சர்கள், உங்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் என்றால் அதற்கு காரணமும் இந்தியாதான்.

இறுதியாக வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரம் என்னிடம் எழுப்பியகேள்வியையும் பதிலையும் கூறவிரும்புகின்றேன். அதாவது. ஐ.நா அமர்வில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட மூன்றாவது தீர்மானத்தை இந்தியா வாக்களிக்காமல் புறக்கணித்தது ஏன் என்று என்னிடம் கேட்டிருந்தார்.

இந்தியா புறக்கணித்ததற்கு பல காரணங்கள் உள்ளன அவை வெளிப்படையாக இங்கு கூற முடியாது. இந்தியாவின் வெளியுறவுக்கொள்கையில் வெளியிலிருந்து தாக்கம் கொடுப்பது என்பது என்றுமே ஒப்புக்கொள்ள முடியாத ஒன்று.

ஆகவேதான் அந்த மாதிரியான சந்தர்ப்பம் இலங்கைக்கு வரக்கூடாது என்று நினைத்து தீர்மானத்தை புறக்கணித்தது. அவ்வாறு புறக்கணித்ததன் காரணத்தால்தான் இந்தியா இலங்கை அரசுடன் இணைந்து பேசக் கூடியதாகவுள்ளது .

ஏனைய நாடுகளுடன் சேர்ந்து மூன்றாவது தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தால் ஏனைய நாடுகளுடன் இருந்திருக்கும். ஆனால் இலங்கைத் தமிழர்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க கூடிய சந்தர்ப்பத்தை இழந்திருக்கும். எனவேதான் இந்தியா அவ்வாறான முடிவை எடுக்க நேர்ந்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

ரில்ஹோ விருந்தினர் விடுதியின் உரிமையாளர் க. திலகராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை. பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், யாழ்.வணிகர் கழகத்தலைவர் இ.ஜெயசேகரன், வைத்தியர் சி.சிவரூபன் ,யாழ் .இந்தியத் துணைத்தூதரகத்தின் உதவித்துணைத் தூதுவர் எஸ்.டி.மூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-6)

# சர்வதேச சாசனத்தை மீறிய கனடாவுக்கு அரசாங்கம் ஐ.நாவில் முறையிட வேண்டும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்து

(கொழும்பு)

சர்வதேச சாசனத்தை மீறிய கனடாவுக்கு எதிராக அரசாங்கம் ஐ.நாவில் முறைப்பாடு செய்ய வேண்டுமென தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அவ் இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகள் அமைப்போடு தொடர்புபட்ட 16 அமைப்புக்களை இலங்கை அரசாங்கம் அண்மையில் தடை செய்தது.

அது ஐ.நா. வின் சர்வதேச சாசனத்தின் 13 மற்றும் 17 ஆவது சரத்துக்களுக்கமையவே மேற்கொள்ளப்பட்டது.

எனவே. ஐ.நா.வில் உறுப்புரிமை பெற்றுள்ள அனைத்து நாடுகளும் இத்தடையை ஏற்றுக்கொண்டு தத்தமது நாடுகளில் இயங்கும் இந்த அமைப்புக்களை தடை செய்ய வேண்டும்.

ஆனால், கனடா இந்த அமைப்புக்களை தடை செய்யப் போவதில்லையென அறிவித்துள்ளது. எனவே, கனடாவின் இத்தீர்மானமானது சர்வதேச சாசனத்தை மீறுவதாகவே அமைந்துள்ளது.

இதனால் அரசாங்கம் கனடாவுடன் இராஜதந்திர ரீதியான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும். அம் முயற்சி தோல்வி கண்டால் சர்வதேச சாசனத்தை கனடா மீறியுள்ளமையை சுட்டிக் காட்டி ஐ.நா. வில் அரசாங்கம் முறைப்பாடு செய்ய வேண்டும். அதற்கான பூரணமான உரிமை இலங்கை அரசாங்கத்திற்கு உள்ளது.

யுத்தம் முடிந்த பின்னர் வடக்கில் பாதைகளை, பாலங்களை அமைக்கும் அரசின் நடவடிக்கைகளால் தமிழ் மக்களின் நம்பிக்கையை பெற்றுவிட முடியாது. அங்கு வீடுகளை நிர்மாணிக்கும் போது அம்மக்களின் பங்களிப்பை பெற்றிருக்க வேண்டும்.

மாற்று அரசியல் கட்சிகளிடமும் ஆலோசனைகளை பெற்று அம் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியிருக்க வேண்டும்.

அங்கு உற்பத்தியாகும் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பு வழங்கப்படவில்லை. பெருமளவில் திராட்சைப்பழங்கள் உற்பத்தியாகின்றன.

அதனை பயன்படுத்தி வைன் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை திறந்து இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கியிருக்கலாம்.

அச்சுவேலி, காங்கேசன்துறை போன்ற வடக்கின் பல்வேறு இடங்களில் தொழிற்சாலைகளை ஆரம்பித்து வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தியிருக்கலாம். புனர்வாழ்வளிக்கப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு எவ்விதமான தொழில்களையும் பெற்றுக் கொடுக்கவில்லை.

சர்வதேச அழுத்தங்களுக்குள் நடத்தப்பட்ட வடமாகாண சபை தேர்தலில்கூட அரசாங்கம் தமிழ் மொழியில் விளம்பரம் செய்யப்படவில்லை.

இவ்வாறு வடபகுதி தமிழ் மக்களின் நம்பிக்கையை பெறுவதற்கான எந்தவிதமான முயற்சியையும் அரசு முன்னெடுக்கவில்லை.

தன்னிச்சையான செயற்பாடுகளால் நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளையும் சாம்பாராக்கி நாட்டை நெருக்கடியில் தள்ளிவிட்டுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார். (2)

## ரணில் நாடு திரும்பியதும் மஹிந்தவுடன் பேச்சு

தற்போது அமெரிக்காவில் தங்கியிருக்கும் ஐ.தே.க.வின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு திரும்பியவுடன் அவரைச் சந்தித்துப்பேச்சுகளை நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருப்பதாக கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த வருட முற்பகுதியில் பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே இந்தச் சந்திப்புக்கு ஜனாதிபதி ஏற்பாடு செய்திருக்கின்றார்.

பொதுத் தேர்தல் ஒன்றையே முதலில் நடத்தவேண்டும் என வலியுறுத்தியிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்கள், இவ்வாறானதொரு தேர்தலில் சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட வேண்டும் என்பதையும் வலியுறுத்தி வருகின்றார்கள்.

ஆளும் கூட்டணியில் இணைந்திருக்கும் பங்காளிக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய மற்றும் தேசிய சுதந்திர முன்னணி என்பன அரசாங்கத் தலைமையுடன் முரண்பட்டு அறிக்கைகளை வெளியிட்டு வரும் நிலையில்தான் தனித்துப் போட்டியிடுவது குறித்து சுதந்திரக் கட்சி ஆராய்ந்து வருவதாக தெரிய வருகிறது. (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இஸ்ரேலின் ஜெருசலேம் நகரில் நடைபெறும் வாராந்திர அமைச்சரவை கூட்டத்தில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கலந்து கொண்டதை படத்தில் காணலாம்.

# அஸ்த்ரா ஏவுகணை சோதனையில் இந்தியா வெற்றி கண்டுள்ளது

விண்ணிலிருந்து ஏவி வானில் உள்ள இலக்கை தாக்கும் அஸ்த்ரா ரக ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக பரிசோதித்தது.

இந்தியாவின் மேற்குப் பகுதியில கடற்படை தாக்குதல் எல்லைக்குட்பட்ட பகுதியில் சுகோய்- 30 ரக போர் விமானத்தில் இருந்து அஸ்த்ரா ஏவுகணை ஏவப்பட்டு மிக துல்லியமாக இலக்கை நோக்கி சென்று தாக்கியது.


கண்ணுக்கு புலப்படாத இலக்கை தாக்கும் இந்த ஏவுகணையை முதல் முறையாக இந்தியா உருவாக்கியதுடன், வெற்றிகரமாக அதை செலுத்தி சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது.

சோதனை முயற்சியின் வெற்றிக்கு பின்னர் அதை உருவாக்கிய விஞ்ஞானிகளுக்கு இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மைய தலைவர் தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றிகரமான சோதனையின் மூலம் இதே ரக ஏவுகணைகளை வைத்திருக்கும் அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளின் வரிசையில் இந்தியாவும் இடம் பிடித்துள்ளது.

# சவுதியை தாக்கிய நோய் அமெரிக்காவிலும் பரவியது

சவுதி அரேபியா உள்ளிட்ட அரேபிய நாடுகளில் மெர்ஸ் என்னும் உயிர்க்கொல்லி நோய் பரவி வருகிறது.



சில ஆண்டுகளுக்கு முன்பு சார்ஸ் என்னும் நோய் உலகம் முழுவதும் பரவி பல ஆயிரக்கணக்கானோரை பலிகொண்டது.

அதேபோன்று மெர்ஸ் நோயும் ஆபத்து நிறைந்ததாக கருதப்படுகிறது. இந்த நோய்க்கு இதுவரை 70 இற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். நோயை கட்டுப்படுத்த இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்த நோய் தற்போது அமெரிக்காவிலும் பரவியுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் சவுதி அரேபியாவுக்கு சென்றுவிட்டு திரும்பிய ஒருவரை நோய் தாக்கியுள்ளது.

அவரை இண்டியானாவில் உள்ள ஒரு வைத்தியசாலையில் தனிமைப்படுத்தி சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

நோய் தாக்குதலுக்குள்ளானவர் யார்? என்ற விபரங்கள் எதுவும் வெளியிடவில்லை. ஆனாலும் அவருடைய உடல்நிலை கட்டுக்குள் இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# காந்தி படம் வெளியிட்ட பாடசாலையை தீவிரவாதிகள் தாக்கினர்-மகா சர்மா

நேபாளத்தில் காஞ்சபூர் மாவட்டத்தில் உள்ள மகேந்திரநகரில் சர்வதேச பப்ளிக் மேல் நிலைப் பாடசாலையுள்ளது.



அங்கு வெளியிடப்பட்ட ஒரு புத்தகத்தில் இந்திய தலைவர்களாக மகாத்மா காந்தி உள்ளிட்ட பலரின்புகைப்படங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

இதைப் பார்த்த மாவோயிஸ்டுகள் கடும் ஆத்திரம் அடை ந்தனர்.

அந்த பாடசாலைக்குள் புகுந்த அவர்கள் வெறியாட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கிருந்த கணனிகள், தொலைபேசிகள் மற்றும் மேசை, நாற்காலிகளை அடித்து நொறுக்கினர். பெற்றோலை ஊற்றி த் வைத்தனர்

மேலும் அங்கு நிறுத்தி வைத்திருந்த பாடசாலை பேருந்துகளுக்கு தீ வைத்தனர். அதில் அந்த பேருந்து முழுவதும் எரிந்து நாசமானது.

இந்த தகவலை அப்பாடசாலையின் நிர்வாக இயக்குநர் மகாசர்மா தெரிவித்துள்ளார்.

# உலக வெப்பமயமாதலை தடுக்க ஐ.நா. பொதுச் செயலர் அழைப்பு



உலகவெப்பமயமாதலைத் தடுக்கும் முயற்சியில் பல நாடுகள் தற்போது முனைப்புடன் செயலாற்றி வருகின்றன.

ஐ.நா. சபையும் இதற்கான பல ஒப்பந்தங்களை ஏற்படுத்தி வருகின்றது. எதிர்வரும் 2015 ஆம் ஆண்டில பெரும் காலநிலை மாற்ற செயற்பாடுகளை மேற்கொள்ளும் விதத்தில் ஒரு அடித்தளத்தை உருவாக்கும் முயற்சியின் முதல் கட்டமாக அபுதாபியில் நேற்றுமுன்தினம் ஒரு கலந்தாய்வு மாநாடு நடைபெற்றது.

அந்நாட்டின் தலைநகரில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் உலக நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். எதிர்வரும் செப்டெம்பரில நடைபெற உள்ள காலநிலை உச்சி மாநாட்டிற்குத் தேவையான அடித்தள செயற்பாடுகளைத் துவக்கும் ஒரு மாநாடாக இந்த கூட்டம் நடைபெறுகின்றது.

இதற்குத் தலைமை தாங்கிய ஐ.நா.பொதுசெயலர் பான் கீ மூன் தனது உரையில் அடுத்த ஆண்டிற்கான புதிய உலக வெப்பமயமாதல் ஒப்பந்தத்தினைத் தயாரிக்க உலகளவிலான கொள்கைத் தலைவர்களைக் கேட்டுக்கொண்டார்.

அந்த முயற்சியில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் அச்சுறுத்தல் குறித்த செயற்பாடுகளில் அதிக முயறசிகளை மேற்கொள்ளுமாறும் அவர் வலியுறுத்தினார். சுற்றுப்புற சூழலைப் பாதுகாப்பதில் அவசர முயற்சிகளை மேற்கொள்ளாமல் உலக செழிப்பு மற்றும் பாதுகாப்பு மேம்பாட்டிற்கான நடைமுறைகளை செயற்படுத்தமுடியாது என்று அவர் குறிப்பிட்டார்.


கடந்த 2009ஆம் ஆண்டில் டென்மார்க்கின் தலைநகர் கோபனஹேகனில் நடைபெற்ற சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாநாட்டிற்குப் பின்னர் காலநிலை மாற்ற செயற்பாடுகள் உடன்பாடு குறித்து ஒரு இலக்கை எட்ட தொடர்ந்த முயற்சிகள் முரண்பாடுகளோடு முடிவடைந்தது இங்கு நினைவூட்டப்பட்டது.

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 70 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 80 |
| தக்காளி | 80 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 40 | 30 | 40 |
| கரட் | 80 | 60 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 50 | 40 | 60 |
| வாழைக்காய் | 25 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 20 | 60 | 60 |
| பயற்றங்காய் | 60 | 100 | 60 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 60 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 40-80 | 100 | 120 |
| போஞ்சி | — | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 70-100 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 10-50 | 40 | 30-35 |
| இராசவள்ளி | 80 | 100 | 80 |


facebook (f) பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 05

சஷ்மிதா அருண்குமார்



கைரேகை பார்த்து காலத்தை வீணடிக்கும் மாந்தர்களே! கையே இல்லாத இவருக்கும் உழைப்பால் உயர்வு உண்டென நீ உணர்வது தான் எப்போது?

விதுசன் சந்திரலிங்கம்



ஜங்கரன் சிவாஸ்கந்தன்




Like.Comment... Like


நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri எனும் தளத்தில் பதிவுசெய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

797



## துளசி

தனது கணவன் ராமனை இழந்து விதவையான துளசிக்கு வயதான காலத்தில் உழைத்து சம்பாதிக்க நேரிட்டது.

தனது கிராமத்தை விட்டுப் பக்கத்து கிராமமான ராமாபுரத்தை அடைந்த துளசி, அங்கு பள்ளிக்கூடத்தின் முன்னால் சிறிய கடையை அமைத்துக் கொண்டாள்.

அந்தக் கிராமத்திற்கு அவள் வந்து மூன்றே மாதங்கள் ஆகியிருந்த போது, திடீரென அங்கு கொலறா பரவியது.

பள்ளிக் குழந்தைகளின இடையே மிக அதிகமாகப் பரவியதால், பள்ளியையே மூடவேண்டிய நிலை ஏற்பட்டது.

பெரியவர்களும் அந்த நோயால் பீடிக்கப்பட்டனர்.

இது மாரியம்மனின் கோபத்தினால்தான் நடக்கிறது என்று மக்கள் நம்பினர்.

பள்ளிக்கருகில், முத்தம்மா என்பவளும் ஒரு கடை நடத்தி வந்தாள்.

துளசியின் கடையில் கிடைக்கும் தின்பண்டங்கள் மிகச் சுவையாக இருந்ததால், பள்ளி மாணவர்கள் முத்தம்மாவின் கடையை விட்டு விட்டு துளசியின் கடையிலேயே தின்பண்டங்கள் வாங்கத் தொடங்கினர்.



இதனால் கோபம் அடைந்த முத்தம்மா துளசியை எப்படியாவது ஊரை விட்டு விரட்டிவிட எண்ணினாள்.

அதற்கான ஒரு திட்டமும் தயாரித்தாள்.

கிராமத்தினர் அனைவரும் மாரியம்மனுக்கு விசேஷ பூஜை செய்து பிரார்த்தனை செய்தனர்.

அப்போது, கோயில் பூசாரியின் மீது சாமி வந்து, மக்களிடம், "கிராம மக்களே! நான் மாரியாத்தா பேசுகிறேன்! எனக்கு உங்கள் மீது கோபமில்லை.

கொலறா நோய் வர நான் காரணமில்லை.

இந்தக் கிராமத்தில் பள்ளிக்கருகே புதிதாக வியாபாரம் தொடங்கி இருக்கிறாளே ஒரு கிழவி! அவள்தான் காரணம்!

அவள் கடையிலுள்ள தின் பணடங்களைத் தின்றதால்தான் குழந்தைகளுக்குக் கொலறா ஏற்பட்டு ஊர் முழுவதும் பரவியது" என்று கூறினான்.

உடனே, ஆவேசமடைந்த கிராம மக்கள் திரண்டு வந்து துளசியின் கடையை சூறையாடினர்.

அத்தோடு நில்லாமல் அவள் மீது கல்வீசி எறிந்து அவளைக் கிராமத்தை விட்டுத் துரத்த முயன்றனர்.

துளசியின் தலையில் கல்பட்டு இரத்தம் வழியத் தொடங்கியது.

இதைக் கண்டு மனம் பொறுக்காத. பள்ளி ஆசிரியர் ஒருவர் அவர்களைத் தடுத்து "அட முட்டாள மக்களே! இந்த கிழவி மீது ஏன் கல் வீசி எறிகிறீர்கள்?" என்றார்.

"குறுக்கே பேசாதே! இவள்தான் கொலறா உண்டாகக் காரணம் என்று கோயில் பூசாரியே சொல்லிவிட்டார்!" என்றனர் அவர்கள்.

"பூசாரி சொன்னால் அதை உடனே உண்மையென்று நம்புவதா? பூசாரியை அவ்வாறு சொலலத் தூண்டியவள் முத்தம்மா! பூசாரிக்கு அவள் பணம் கொடுத்துத் தூண்டிவிட்டதை நான் என் கண்ணால் பார்த்தேன்.

கொலறா நோய் உண்டாக மக்களாகிய நீங்கள் அனைவரும் தான் காரணம்!

ஊரில் உள்ளது ஒரேயொரு ஏரி! அதிலிருந்து தான் தண்ணீர் எடுத்துக்குடிக்கிறோம்.

ஆனால், சமீப காலமாக அதில மாடுகளைக் குளுப்பாட்டியும், துணிகளைத் துவைத்தும், ஏரியை அசுத்தப்படுத்தி விட்டீர்கள்.

அசுத்த நீரினால்தான் கொலறா உண்டாகியிருக்கிறது. அதற்கு இந்தக் கிழவி மீது ஏன் பழி சுமத்துகிறீர்கள்? கொலறாவைக் குணப படுத்துவதற்கு நாம் நகரத்திலிருந்து மருந்துகள் வரவழைக்க வேண்டும்,

எதிர்காலத்தில் அது வராமல் தடுக்க, நமது ஏரியை சுத்தப் படுத்துவதுடன், அதை என்றும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்" என்று ஆசிரியர் கூறி முடித்தார்.

அவர் சொன்னது முற்றிலும் சரியென உணர்ந்த கிராமத்தினர் துளசியிடம் மன்னிப்புக் கேட்டனர்.

பிறகு காலறாவை குணமாக்கவும், எதிர்காலத்தில் வராமல் தடுக்கவும் எல்லோரும் முனைந்து செயற்பட்டனர்.

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

05.2014
06

- ➢1527 - ஸ்பானிய, மற்றும் ஜேர்மனியப் படைகள் உரோம் நகரைச் சூறையாடின. 147 சுவீடன படைகள் புனித ரோமப் பேரரசின் மன்னன் ஐந்தாம் சார்ள்சிற்கு எதிராகப் போரிட்டு இறந்தனர்.
- ➢1542 - பிரான்சிஸ் சேவியர் கோவாவை அடைந்தார்.
- ➢1682 - பிரான்சின் பதினான்காம் லூயி மன்னன் தனது கோட்டையை வேர்சாய் நகருக்கு மாற்றினான்.
- ➢1757 - பிரெடெரிக் தலைமையிலான புரூசியப் படைகள் ஆஸ்திரிய இராணுவத்தைத் தோற்கடித்து பிராக் நகரை முற்றுகையிட்டனர்.
- ➢1840 - பென்னி பிளாக் அஞ்சற்தலை ஐக்கிய இராச்சியத்தில் (அயர்லாந்து உட்பட) பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது.
- ➢1853 - "த லிட்டரறி மிரர்" (The Literary Mirror) எனனும் ஆங்கில மாதிகையை யாழ்ப்பாணத்தில் வைமன் கதிரவேற்பிள்ளை ஆரம்பித்தார்.
- ➢1854 - இந்தியாவில் முதல் தபால்தலை வெளியிடப்பட்டது.
- ➢1857 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் 34ஆவது இராணுவப் பிரிவு தனது அலுவலர்களைப் பாதுகாக்கத் தவறியமைக்காக கலைக்கப்பட்டது. இப்பிரிவின் மங்கள் பாண்டே என்ற சிப்பாய் தனது மேலதிகாரிகளுக்கெதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டு ஏப்ரல் 8 இல் தூக்கிலிடப்பட்டான்.
- ➢1860 - கரிபால்டி தனது தொண்டர் படைகளுடன் இரண்டு சிசிலிகளின் பேரரசைக் கைப்பற்றுவதற்காக ஜெனோவாவில் இருந்து புறப்பட்டான்.
- ➢1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஆர்கன்சஸ் அமெரிக்கக் கூட்டணியிலிருந்து விலகியது:
- ➢1889 - ஈபெல் கோபுரம் பாரிசில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.
- ➢1910 - ஐந்தாம் ஜோர்ஜ் ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினான்.
- ➢1937 - ஜேர்மனியின் ஹின்டென்பேர்க் என்ற வான் கப்பல் (zeppelin) நியூ ஜெர்சியில் தீப்பிடித்து அழிந்தது.
- ➢1942 - இரண்டாம் உலகப் போர்: பிலிப்பைன்சில் நிலைகொண்டிருந்த கடைசி அமெரிக்கப் படைகள் ஜப்பானிடம் சரணடைந்தன.
- ➢1945 - இரண்டாம் உலகப் போர்: கிழக்கு ஐரோப்பாவின் கடைசிப் பெரும் சமர் பிராக் நகரில் ஆரம்பமானது.
- ➢1967 - சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முஸ்லிம் குடியரசுத் தலைவரானார்.
- ➢1994 - ஐக்கிய இராச்சியத்தையும் பிரான்சையும் இணைக்கும் கால்வாய் சுரங்கம் அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது.
- ➢2001 - சிரியாவுக்கான தனது பயணத்தில் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் மசூதி ஒன்றிற்கு சென்றார். மசூதிக்குச்சென்ற முதலாவது திருத்தந்தை இவரேயாவார்.

### பிறப்புக்கள்

- ➢1856 - சிக்மண்ட் பிராய்ட், ஆஸ்திரிய உளவியல் மருத்துவர் (இ. 1939)
- ➢1861 - மோதிலால் நேரு, இந்திய விடுதலை வீரர் (இ. 1931)
- ➢1904 - ஹறி மார்ட்டின்சன், சுவீடன் எழுத்தாளர் (இ. 1978)
- ➢1953 - டோனி ப்ளேர், ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர்
- ➢1985 - கிரிஸ் பால், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

- ➢1952 - மரியா மாண்ட்டிசோரி, இத்தாலிய கல்வியியலாளர், மனோதத்துவ மருத்துவர் (பி. 1870)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...சாமியம்மா என்று அழைக்கப்படும் அந்தப் பெண் துறவி தன் இறை அனுபவங்களை விவரித்தபோது மெய் சிலிர்த்துப் போனேன். உணர்ந்து கொண்ட அனுபவங்களை உனக்குள்ளேயே பூட்டி வைத்துக்கொள். வெளியே சொல்லாதே! என்று அவரிட்ட அன்புக்கட்டளையை மனதில் எண்ணியவாறே வெளியே வந்தபோது அங்கு எல்லோரும் என்னைத் தேடிக்கொண்டிருப்பது தெரிந்தது.

எங்கே போய்விட்டீர்கள்? அதோ அந்த மடத்திற்கு வெளியே தொட்டி ஒன்று தெரிகிறதே, அதுதான் ஏழுசாலியர் மடம். சாலியர் இனத்து பக்தர்களிடம் இருந்து சேகரிக்கப்படும் அரிசியிலிருந்து தான் இங்கு அன்னதானம் செய்யப் படுகிறது.

இப்போது சாதம், சாம்பார், பொரியல் என வழங்கப்படும் அன்னதானம் ஆரம்பகாலத்தில் கஞ்சியாக மட்டுமே வழங்கப்பட்டதாம். இதோ மடத்திற்கு எதிரே உள்ள தொட்டியில்தான் வடித்த கஞ்சியை ஊற்றி வைத்துக் கொண்டு சதுரகிரிக்கு வரும் பக்தர்களுக்கு குவளையில் ஊற்றிக் கொடுப்பார்களாம். கஞ்சியை அன்னதானமாக வழங்கியதால் கஞ்சி மடம் என்ற பெயரே நிலைத்துவிட்டது.

உள்ளே சென்று பார்த்தோம். ஒரே சமயத்தில் நூறு அல்லது நூற்றைம்பது பேர் அமர்ந்து சாப்பிடும்படியான இடம். சாப்பாடு போடுவது மட்டுமன்றி, இரவில் தங்கிக்கொள்ளக்கூட பக்தர்களுக்கு இலவசமாக இடம் தருகிறார்கள்.

இதுவேயன்றி நாயுடு சமூகத்தாரின் அன்னதானக் கூடமொன்றும் இங்கு இருக்கிறது. இந்தக் கஞ்சி மடத்தை யடுத்து தேவஸ்தானத்தின் கோசாலை ஒன்று நிர்வகிக்கப்பட்டு வருகிறது. சுமார் 200 மாடுகளும் கன்றுகளுமாய் கோயில் மாடு என்பது அடையாளம் தெரியாத ஒவ்வொரு மாட்டின் கழுத்திலும் இரும்பு மணி ஒன்று கட்டித் தொங்க விடப்பட்டுள்ளது. அதுவாகவே மேய்ந்துவிட்டு அதுவாகவே தொழுவத்தில் வந்து சேர்ந்து விடும் அதிசயமும் இங்குதான் நடக்கிறது. காலையில் ஒரு வேளை தண்ணீர் வைக்கிறார்கள். மழை நாட்களில் இரண்டு வேளையும் உணவும் தண்ணீரும் வைக்கிறார்கள். இரவிலும் காலையிலும் எல்லாப் பசுக்களும் தலையாட்டும்போது கிடைக்கின்ற மணிச்சத்தம் கேட்க வித்தியாசமாக இருக்கிறது.



நடுகாளி

எல்லாம் சரிதான் இந்த நெல்லிக்கனி கதையை பாதியிலேயே விட்டு விட்டாரே, இந்தச் சிவனடியார் என்று யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது நாகராஜின் கடையருகே எல்லோரும் காத்திருப்பது தெரிந்தது.

வாங்க, வாங்க, உங்களுக்காகத்தான் வெயிட்டிங்.

## ஆன்மீகம் 113

எனக்காகவா?

ஆமாம், அந்த நெல்லிக்கனிக் கதையை இன்னும் இந்தச் சிவனடியார் முடிக்கவில்லையே. கதையை முடித்து விட்டாரானால் பிறகு அவரவர் படுப்பதற்கு இடம் தேடிப்போக வேண்டியதுதான்.

கொட்டும் பனியையும் பொருட்படுத்தாமல் கதை கேட்கத் தயாரானோம்.

சட்டைமுனி சித்தர் இடைநிறுத்திய நெல்லிக்கனி கதையை சிவனடியார் தொடர்ந்தார்.

கௌரவர்களிடம் சூதாட்டத்தில் நாட்டை இழந்ததால் துரியோதனன் விதித்த நிபந்தனைப்படி பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் போகையில் இந்தச் சதுரகிரி காட்டிற்கும் வரநேர்ந்தது.

ஒருநாள் மாலைப் பொழுதில் அர்ச்சுனனும் திரௌபதியும் வன வேடிக்கை பார்த்து வரலாமென்று கிளம்பி உலா வருகையில் முனிவர்கள் பலரும் தவம் செய்தொழுகும் அழகான சோலை ஒன்றைக் கண்டனர்.

சோலையின் நடுவே உயர்ந்து வளர்ந்திருந்த நெல்லி மரத்தில் ஒரே ஒரு நெல்லிக்கனி மட்டும் காய்த்துத் தொங்கும் அழகை திரௌபதி கண்டாள்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

**32**

...இலக்கியம் என்பது தேங்காய்; சராசரி நாய்கள் அதை உருட்டி விளையாடலாமே தவிர உடைத்துத் தின்ன முடியாது என்று ஒதுங்கியிருந்த ஒரு கூட்டம்;

இலக்கியம் என்பது புணர்ச்சி; அதில் பயன்பாடுதான் முக்கியமே தவிர பாஷை முக்கியமில்லை என்று ஏகாந்த வேதாந்தம் பேசிய ஒரு கூட்டம்.

இலக்கியம் என்பது தங்கள் கட்சி கட்டிக் கொடுத்த முப்பது சதுர கிலோ மீற்றருக்கு வெளியே இருக்க முடியாது என்று நம்பிக்கிடக்கும் ஒரு படித்த பாமரக் கூட்டம்;

திருக்குறளில் அடுப்பெரிய வழி இருக்கா என்று பாமரர்கள் யாசித்துக் கிடக்க- அதில் வரும் இன்னிசை அளபெடைக்கும் இசைநிறை அளபெடைக்கும் பாகுபாடு சொல்லிக் கொண்டிருந்த ஒரு பண்டிதர் கூட்டம்;

இத்தனை கூட்டங்களுக்கும் மத்தியில் பண்டிதத் தமிழின் கண்ணியம் கெடாமலும் பாமரனுக்கு அதில் அந்நியம் இராமலும் ஒரு புதுத் தமிழைக் கண்டுபிடித்துக் கடைசித் தமிழனின் காதுகளைத் தொட்டவர் சாலமன் பாப்பையா.

இலக்கியம்- கலை இரண்டுக்கும் எளிமையே பிரதானம்.

எளிமையே பயன்பாடு.

பயன்பாடு உள்ளது மட்டுமே பரிணாமம் பெறும்.

மனிதன் மட்டும் பயன்படுத்தியிராவிட்டால் இந்த பூமி உருண்டையே ஒரு சின்னச் சிலந்திக் கூடாய்ச் சிதிலமாகிச் சிதைந்திருக்கும்.

தமிழ் இலக்கியத்தைத் தங்கள் நாவால் துலக்கித் துடைத்தவர்களில் நம் தலைமுறையில் சாலமன் பாப்பையாவுக்குச் சரியான இடமுண்டு.

அவரைப் பற்றிய குற்றச்சாட்டு ஒன்றுண்டு.




அப்பளம் இலையையே ஆக்கிரமித்து விடுவது மாதிரி நகைச்சுவை அவரது பேச்சையே ஆக்கிரமித்து விடுகிறதாம்.

மாட்டேன்; நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்.

சிரிக்க வைக்க முடியாதவர்களும் சிரிக்க முடியாதவர்களும் விடுகின்ற சோகப் பெருமூச்சு என்று சொல்வேன் அதை.

ஒரு பேச்சில் நகைச்சுவை என்பதன் உள்ளீட்டை நன்றாய்ப் புரிந்து கொள்வது நல்லது.

குழந்தைக்குச் சோறூட்டுகிற தாய் நிலவைக் காட்டி ஊட்டுகிறாள்.

தாயின் நோக்கம் நிலாவைப் பிடித்துத் தருவதல்ல; சோறூட்டுவதே.

ஒரு நல்ல பேச்சில் நகைச்சுவை என்பது நிலா; விடயம்தான் சோறு.

பாப்பையா ஒரு தேர்வுக் கூடத்தில் மேற் பார்வையாளராய் இருந்தாராம். எல்லோரும் விடை பூட்டி ஊழுது கொண்டிருந்தார்களாம். ஒரே ஒரு மாண ன் மட்டும் உள்ளங்கையையே பார்த்துக் கொண்டிருந்தானாம்.

இவர் அவன் அருகே சென்று, "என்னப்பா செய்கிறாய்?" என்றாராம்.

அவன் சொன்னானாம்; 'கற்றது கையளவு சார்.'

இவர் திகைத்துப் போய், "அப்படியென்றால் கல்லாதது?" என்றாராம்.

அவன் "இடுப்பளவு சார்" என்றானாம்.

இந்த நகைச்சுவைக்குக் கீழே இருக்கின்ற கல்வி முறையின் போலித்தனங்கள்- கனிய வைக்க வேண்டிய கல்வியை அழுக வைக்கின்ற அவலங்கள்- இவையெல்லாம் சொல்லுக்குள்ளிருக்கும் பொருளைப் போல் உள்ளுக்குள்ளிருப்



பதை உணர முடியவில்லையா?

ஒரு கூட்டத்தில் சொன்னேன்.

சாலமன் பாப்பையாவோடு பேசுவதென்றால் எனக்கு இரண்டு வழிகளில் மகிழ்ச்சி.

முதல் மகிழ்ச்சி: அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தால் எவ்வளவு சாப்பிட்டு விட்டுப் போனாலும் சிரித்துச் சிரித்தே செரித்து விடும்.

இரண்டாவது மகிழ்ச்சி: அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்தால்தான் நான் கூடச் சிவப்பு என்பதை நாடு நம்பும்.

சிரித்தார்- கோட்டைகளைக்கூடக் குலுங்க வைப்பவர் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்.

அவர் சாகக் கூடாது;

சாகவே கூடாது.

ஏனென்றால்-

கற்றலிற் கேட்டலே நன்று என்னும் தலைமுறை இன்னும் இருந்து கொண்டே இருக்கிறது.

நானும் இன்னும் நீண்ட காலத்துக்குச் சிவப்பாகவே இருக்க வேண்டியிருக்கிறது.

-வைரமுத்து- (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு விரைகிறார் ஐ.நா.வின் அறிக்கையாளர்

புலம்பெயர்ந்தோர் மனிதவுரிமை தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர் பிரான் சுவா கிரேபேவ் இம்மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருக்கும் விசேட அறிக்கையாளர் பிரான்சுவா கிரேபேவ் புலம்பெயர்ந்தோர் மனிதவுரிமை தொடர்பாக ஆராய்வார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மார்ச் மாதம் 27 ஆம் திகதி ஜெனீவா மனித உரிமை பேரவையில் இலங்கை குறித்த பிரேரணை 23 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. 12 நாடுகள் பிரேரணையை எதிர்த்ததுடன் 12 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் நடுநிலை வகித்தன.

நல்லிணக்க ஆணைக்குழுவினால் கவனிக்கப்பட்ட காலப்பகுதியில் இருதரப்பினராலும் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில், விரிவான மற்றும் சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் அலுவலகத்திடம் கோரிக்கை விடுத்து இலங்கை குறித்த பிரேரணை ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் இடம்பெறவுள்ள பேரவையின் 27 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை பிரேரணையின் அமுலாக்கம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வாய்மூல அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டியது அவசியமாகும்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வாய்மூல அறிக்கை சமர்ப்பிக்கப்படவுளளமையினால் மே மாதமளவில் தேவையான நடவடிக்கைகளை மனிதவுரிமை பேரவை அலுவலகம் ஆரம்பிக்கும் என்று கூறப்படுகின்றது. (2)

# அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தில் மாறுபட்ட தரவுகளேயுள்ளன

## அரசாங்கம் தெரிவிப்பு

இடம்பெயர்ந்தோர் பட்டியலில் அரசாங்கம் திருத்தம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கையுடன் 400 குடும்பங்கள் இணைக்கப்பட்டுள்ளன. தற்போது 7 ஆயிரத்து 92 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 658 குடும்பங்கள் மீள்குடியேற்றப்படவுள்ள தாக மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஜானக சுகததாச தெரிவித்துள்ளார்.

மூதூர் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் காணப்படும் 35 நலன்புரி நிலையங்களில் இவர்கள் தங்கியுள்ளனர். எனினும், அரசாங்கத்தின் புள்ளி விபரத் தகவல்களுக்கு முற்றிலும் மாறுபட்ட தகவல்களை ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் வெளியிட்டுள்ளது. நாட்டில் மொத்தமாக 93447 பேர் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருவதாக ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் எம்முடன் இணைந்து பணியாற்றவில்லை எனவும் மேற்படி தகவல்களை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சரியான முறையில் மதிப்பீடு செய்யவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு பிரதிநிதிகளை நியமித்து ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றார். (2)

# பிரேரணை மீதான வாக்களிப்பை இந்தியா தவிர்த்தது ஏன்?

**2014 ஐ.நா. மனிதவுரிமை பேரவையில் இலங்கை மீதான வாக்கெடுப்பை தவிர்த்துக் கொண்டதன் மூலம் இந்தியா விடுக்கும் செய்தி என்னும் தலைப்பில் சண்டே லீடரில் என்.சத்தியமூர்த்தி எழுதிய ஆய்வுக் கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகின்றது.**

**- தமிழில் : யோகர்**

(நேற்றைய தொடர்ச்சி)

இது வெறும் ஊகப் பேச்சாக மட்டும் இருக்கக் கூடும். ஆனாலும் இந்தியாவின் தீர்மானம் பற்றி குறிப்பான இந்த நாடுகளுக்கு தெரிந்திருக்குமேயானால் இம் முறை ஏற்பட்ட இந்த திருப்பம் எப்படி ஏற்பட்டது என்பது பற்றி இலங்கை சிந்திக்க வேண்டிய ஓர் விடயமே இதுவாகும்.

### சர்வதேச சமூகத்தை இந்தியாவுக்கு எதிராக திசைதிருப்புவது

இலங்கையில் உள்ள தமிழர்கள் குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கடந்த வருடங்களாக சர்வதேச சமூகத்தை இந்தியாவுக்கு எதிராக திருப்பிவிடும் செயற்பாடுகளில் இறங்கியிருந்ததாகவே தெரிகிறது.

அத்தோடு இவ்வளவு சம்பவங்களுக்கும் பின்னரும் தாம் வெற்றிகண்டு விட்டதான ஒருவித எண்ணமுங்கூட அவர்களிடம் இருந்தது.



மன்மோகன்சிங்

புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் எண்ணக்கருவில் உருவாகி உசுப்பேற்றப்பட்டு தென்னிந்திய மாநில- தமிழ் நாடு அரசின் அரசியல் நிலைப்பாடுகளால் கவரப்பட்ட நிலையிலும் இந்தியாவை தம் வழிக்குக் கொண்டு வந்தாயிற்று எனவும் இப்போதிலிருந்து ஐ.நா.ம.உ. பேரவையில் இந்தியாவின் வாக்களிப்புப் பற்றி பெரிதும் கவலைப்படத் தேவையில்லை என்றே அவர்கள் தீர்மானித்திருக்க வேண்டும்.

பிந்திய தகவல்களின்படி இந்தியாவின் வாக்களிப்பு தவிர்ப்பு குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அதிருப்தி அடை



நிஷாபிஸ்வால்

ந்தது என்பதிலும் பார்க்க அதிர்ச்சி அடைந்தது என்றே கூற வேண்டும்.


இந்த வகையில் தமது நடவடிக்கைகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு வரையறுத்துக் கொள்வதுடன் உண்மை நண்பர்கள் யார் என்பதை நேர காலத்திலேயே தீர்மானித்துக் கொண்டு அதன் படி நடக்கவும் வேண்டு மென்பதே அவர்களுக்கான இந்தியாவின் செய்தியாக இருக்கிறது.

தனது எஞ்சிய மாநில நடிகர்களுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அக்கறைகள் மட்டில் பரஸ்பர நலன்க்ள் பற்றிய கருத்துக்களுடன் இந்தியா செயற்படுவது அதனது மற்றுமொரு விடயமாகும். இலங்கைத் தமிழ் பிரதிநிதித்துவம் என்ற மட்டில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பற்றிய கடப்பாடுகள் இந்தியாவுக்கு உள்ள தென்பதுடன் அதற்கான அழுத்தங்களை பிரயோகிக்கும் உரிமை தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் உண்டென்பது மற்றுமொரு விடயமாகும்.

முதலில் தமிழீழ விடுதலைப்புலிகள் பற்றியதும் தற்போது புலம் பெயர் தமிழர் பற்றியதுமான ஓர் இராஜதந்திரத்தை தாம் திறமையுடன் கையாண்டதாகவே தமிழ் தேசிய கூட்டமைப்பு எண்ணியிருக்க வேண்டும். ஆனாலும் தமது அதிர்ச்சிகள், அதிருப்திகளிலிருந்து மீளுவதற்கான நேரத்தை இந்திய- தேர்தல்கள் தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வழங்கலாமென்பதுடன் இந்தியா மட்டில் அவர்களது கடந்தகால செயற்பாடுகளை மீளாய்வு செய்து திருத்திக் கொள்ளவும் வேண்டும்.

அதாவது இந்தியாவே தமது தொப்பிள் கொடி உறவு பெற்றோர் என்பதுடன் தமிழ் நாடு தமது தொப்புள் கொடி உறவு-சகோதரர்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு தொடர்ந்திருக்குமானால் சுத்தமான இதயத்துடன் அவர்கள் செயற்பட வேண்டும்.

செய்தி இங்கு தெளிவாகவே உள்ளது! தொப்புள் கொடி உறவு- பெற்றோர் மீது ஆணையிட்டு ஒன்றைக்கூறிவிட்டு அவர்களையே அவமதிக்கும் படியான ஒன்றைச் செய்து அவர்களை நோகடிக்காதீர்கள். இது இந்தியா பற்றிய விடயமேதானென்றாலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு இங்கு கவனியாது விட்டது ஐ.நா. பேரவையின்



ஒபாமா

அந்த அமெரிக்க தீர்மானத்தின் இந்திய உள்விவகார ஆக்கிரமிப்புப் போக்கினை மட்டுமல்ல இந்தியாவை இங்கு எடுத்தெறிந்தவிதமாக பயன்படுத்திக் கொண்டதுமேயாகும். இதுவே இங்கு கூடுதல் அவமதிப்பிற்குரிய செயலாக இருக்கிறது.

சிலர் விவாதிப்பது போல் இந்தியா பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டிய தேவையேயில்லாத விளைவுகளுக்குங்கூட தமிழீழ விடுதலைப் புலிகளின் இதே விதமான அணுகுமுறையொன்றே காரணமாயிருந்தது என்பதும் சாத்தியமானதே! இருந்தும் இறுதியில் இந்தியாவே அதனை பொறுப்பேற்க வேண்டியதாயிற்று. இந்த விதமான அரசியல் நடத்தைகள் இந்தியாவுக்கு தேவையற்றதாகும். இந்தவித நோக்காடோ அவமதிப்போ இந்தியாவுக்கு வேண்டியதல்ல!

### உறுத்தும் நடத்தை

இந்தியாவின் தற்போதைய காங்கிரஸ் கட்சியே முன்னைய இரு வருடங்களின் போதும் அமெரிக்க தீர்மானங்கள் மீதான வாக்களிப்பினை கொள்கை அடிப்படையிலே தீர்மானித்திருந்தது. அதே அடிப்படையிலே இந்த தடவையும் ஐ.நா.ம.உ. பேரவை பிரேரணை மீதான வாக்களிப்பு தவிர்ப்பினையும் அது தீர்மானித்தது. விடயங்களை இவ்விதம் தெளிவுபடுத்துவதற்காகவே இந்திய வெளியுறவுச் செயலர் சுஜாதாசிங் அரசியல் தலைவர்களால் எடுக்கப்பட்ட அரசியல் தீர்மானமே அது எனக் கூறியிருந்தார்.

அநேகமாக மூத்த அமைச்சர் ப.சிதம்பரம் (தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்) அவர்களின் இது பற்றிய கூற்றுக்குப் பதிலளிக்கும் முகமாகவே வாக்களிப்பு தவிர்ப்பு விடயம் யூனியன் அமைச்சரவையில் ஒருபோதுமே விவாதிக்கப்படவில்லை! அதற்கான தீர்மானம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அதிகாரிகளாலேயே எடுக்கப்பட்டதாகும் என சிங் அவர்கள் மேலும் கூறியிருந்தார்.

நீண்டகாலம் சேவையாற்றிய மத்திய மூத்த அமைச்சரான திரு. சிதம்பரம் அவர்கள் முக்கிய தீர்மானங்கள் எடுக்கும் இந்த நடைமுறை பற்றி அறிந்திருப்பார் என்பதால் இதுமட்டில் சிறந்த விதமான விளக்க மொன்றையே அவர் கூறியிருக்க வேண்டும்.

ஐ.நா.ம.உ.பேரவையின் முதலாம் மற்றும் இரண்டாம் தீர்மானங்களுக்குப் பிற்பாடு தனக்கு ஏற்பட்டிருந்த இடை க்கால முக்கியத்துவத்துடன் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த முக்கிய பிரமுகர்களான பிரிட்டிஷ் பிரதமர் டேவிற் கமரூன் போன்



மஹிந்த ராஜபக்ஷ

றவர்களுடனான சந்திப்புக்களுங்கூட தமிழ் தேசிய கூட்டமைப்பின் மனதை புகைமூட்டமாக மறைத்து விட்டிருக்க வேண்டும்.

அதனாலேயே பாக்கு நீரிணைக்கப்பால் அருகிலுள்ள இந்தியா மட்டில் வெளிப்படையாகவே தெரிந்த உண்மையான நிலைப்பாட்டினை அவர்களால் கண்டுகொள்ள முடியவில்லை. சிலவேளைகளில் தடுக்க முடியாமல் நடந்து விடுவது போன்ற விடயங்களும் கூட அவர்களது பரந்துபட்ட பார்வையை- தூரதரிசனத்தை பனிமூட்டமாக மறைத்து விட்டதாயுமிருக்கலாம்.

அதாவது மக்கள் பற்றியதும் அரச நிர்வாக அதிகார அமைப்புகள் பற்றியதுமான வெகு அண்மித்த காலப் பார்வையே இங்கு மறைக்கப்பட்டதாயிற்று.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைச்சுவையால் நாகரிகம் வளர்த்த என்.எஸ்.கிருஷ்ணன்



க.கணேசலிங்கம்

"மனுசனாகப் பிறந்ததே மற்ற வர்களுக்கு உதவி செய்யத்தான். சிரிக்க வைக்கிறது கூட ஒரு உதவீ மாதிரித்தான்."

-என்.எஸ்.கிருஷ்ணன்.

தன்னுடைய முதல் படத்திலேயே தனக்கென்று ஒரு நகைச்சுவைப் பாணியைக் கையாண்டவர் என்.எஸ். கிருஷ்ணன். காமெடிக்கென தனி ட்ராக் எழுதிக்கொள்வதை ஆரம்பி த்து வைத்தவர் அவர்.

என்.எஸ்.கே. அறிமுகமானது சதிலீலாவதி படத்தில். ஆனால் முதலில் வெளிவந்த படம் மேனகா.

நகைச்சுவைப் பகுதிகளுக்கான கதை,வசனம்,பாட்டு,இயக்கம் என்று எல்லாவற்றையும் கிருஷ்ணனிடமே ஒப்படைக்க தயாரிப்பாளர்கள் தயக்கமின்றித் தயாரானார்கள்.

"கிருஷ்ணன் இல்லாத படம் ஓடாது என்ற பயத்தை கிருஷ்ணன் எப்ப டியோ பட முதலாளிகளின் மனதில் உண்டாக்கி விட்டார்! இந்த மாதிரி இதற்கு முன் யார் செய்திருக்கிறார் கள்?" என்று பிரபல எழுத்தாளர் வ.ரா. எழுதியுள்ளார்.

கிருஷ்ணன்-மதுரம் இல்லாமல் படம் எடுப்பதில்லை என்று பெரும் பாலான தயாரிப்பாளர்கள் அக்கால த்தில் முடிவெடுத்திருந்தனர்.

நாடகக் கொட்டகைகளில் சோடா விற்றுக்கொண்டிருந்த என்.எஸ்.கே. கலையுலகின் சக்கரவர்த்தியாக வளர் ந்து வாழ்ந்தவர்.

"நாட்டுக்குச்சேவை செய்ய  
நாகரிகக் கோமாளி  
வந்தானையா..."  
"விஞ்ஞானத்தை  
வளர்க்கப் போறேன்டீ  
மேலை நாட்டுக்காரரை  
விருந்துக்கழைத்துக்  
காட்டப்போறேன்டீ..."  
"சிரிப்பு இதன் சிறப்பை  
சீர்துக்கிப் பார்ப்பதே  
நமது பொறுப்பு... சிரிப்பு  
மனக் கவலையைப் போக்கி  
மூளைக்குத் தரும் சுறுசுறுப்பு"

சிரிப்பின் சிறப்பை சீர்தூக்கிப் பார்க்க வைக்கும் அவரது மறக்க முடியாத பாடல் வரிகள் இவை.

ஆரம்பத்தில் மதுரையில் பால மீன ரஞ்சினி சங்கீத சபா நாடகங்களில் என். எஸ்.கே, கே.சாரங்கபாணி விட்டுச் சென்ற இடத்தை நிரப்பி நடித்தார் நகைச்சுவைப் பாத்திரமேற்று.

பின்னர் டி.கே.எஸ். சகோதரர்க ளின் நாடகங்களில் நடித்து தனக்கென ஓர் இடத்தை தேடிக்கொண்டார்.

மேனகா நாடகம் டி.கே.எஸ். சகோ தரர் குழுவினருக்கு பெரும் புகழ் பெற்றுத் தந்த நாடகம்.

டி.கே. சண்முகம்- டி.கே.எஸ். நாட கக் குழுவில் என்.எஸ்.கே.இற்கு தமது நாடகங்களில் வாய்ப்புக்களை வழங் கினார். நாடகத் துறையில் நல்ல ஊக்க மளித்தார். தமது நடிப்புத் திறமையை வெளிப்படுத்த என்.எஸ்.கே. இற்கு நல்ல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அவரது நகைச்சுவைத் திறனும் நேரத்துக்குத் தகுந்தாற்போல் பேசும் வசனங்களும் அவரை நல்ல நடிகனாக உருவாக்கியது.

எஸ்.எஸ்.வாசன் (ஜெமினி விக டன்) எழுதிய முதல் நாவல் சதிலீலா வதியை மருதாசலம் என்பவர் பட மாக்க விரும்பினார். இயக்குநர் எல்லீஸ் ஆர்.டங்கன் என்ற ஆங்கிலேயர்.

என்.எஸ்.கே., எம்.ஜி.ஆர், எம்.ஜி. சக்ரபாணி, டி.எஸ்.பாலையா, எம்.கே. ராதா, எம்.வி.மணி, கே.வி. தங்க வேலு ஆகியோர் இந்தப் படத்தின் மூலம் அறிமுகமானார்கள்.

சதிலீலாவதி படப்பிடிப்பு நடைபெ ற்றுக் கொண்டிருந்தபோது அடுத்த படமாக மேனகாவில் நடிக்க என். எஸ்.கே. இற்கு வாய்ப்பு வந்தது.

எம்.கே. தியாகராஜபாகவதரின் "அம்பிகாவதி" படத்தில் கிருஷ்ணன்-மதுரும் இருவரும் இணைந்து நடித்த தில் மக்களிடம் நல்ல வரவேற்புக் கிடைத்தது.

பிரபல இயக்குநர்களான (சந்திர லேகா, ஔவையார்) எஸ்.எஸ். வாசன், எல்லிஸ் ஆர்.டங்கன் (அம்பிகாபதி) ஆகியோரது பெருமதி ப்பைப் பெற்றிருந்தார் என்.எஸ்.கே. நகைச்சுவைப் பகுதியை அவரிடமே விட்டுவிடத் தீர்மானித்தார்கள். அதனை சரியானபடி நிறைவேற் றியிருந்தார் என்.எஸ்.கே.

அறிஞர் வ.ரா. தமிழ் பெரியார்கள் என்ற நூலில் கிருஷ்ணனைப் பற்றி இவ்வாறு எழுதியிருந்தார்.

"ஹாஸ்யத்திலே எந்த ரகம் உயர்ந் தது? பத்து பேர்கள் கூடியிருக்கிற இடத் திலே எல்லோரும் சிரிக்க வேண்டும். அப் படி சமுதாயமாக எல்லோரும் சிரிக் காமல் ஓரிரண்டு பேர்கள் தலைகு னிந்து அவமானம் அடைந்தவர்க ளைப் போல் இருக்க நேரின் அந்த விகடம் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது அல்ல. தன்னைத் தானே நொந்து கொள் ளுகிற மாதிரிச் சொல்லி எல்லோ ரையும் கலகலவென்று சிரிக்கச் செய் வதுதான் உயர்ந்த ரகமான விகடம் ஆகும். கிருஷ்ணன் பிறரைக் கேலி செய்யும் விதமே விநோதமாக இருக் கிறது. யாரை அவர் கேலி செய்து கிண்டல் பண்ணுகிறாரோ அவரும் சேர்ந்து சிரிக்கும்படியான விதத்தில் கிருஷ் ணன் கேலி செய்கிறார். பிறருடைய உள்ளத்தைக் குத்திப் பிளப்பதில்லை. அவர் பிறருடைய உள்ளத்தை விரியச் செய்கிறார்"

பெரியார் ஈ.வே.ரா. போன்றவர்கள் பகுத்தறிவுக் கொள்கைகள், சீர் திருத்தக் கருத்துக்களை எடுத்துக்கூறிய போது ஏற்க மறுத்து எதிர்த்தவர்கள். என்.எஸ்.கிருஷ்ணன் இதுபோன்ற கருத்துக்களை தனக்கே உரித்தான நகைச்சுவை கலந்து சொன்னபோது எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ளத் தயாரா னார்கள். எதிர்த்த குரல்கள் சிரித்து மகிழ்ந்தன.

"இப்போது மக்களைக் குலுங்க குலு ங்கச் சிரிக்க வைத்து மகிழ்விக்க வேண்டு மானால் அந்தப் பணியை செய்யும் கலை ஞர் பலவித துறைகளிலும் தேர்ச்சியும் தெளிந்த அறிவும் அனுபவமும் கொண்டவராக இருக்க வேண்டிய நிலை இருக்கிறது."

இது என்.எஸ்.கே. 1949ஆம் ஆண்டு மேமாதம் 8 ஆம் திகதி வானொலி யில் ஆற்றிய உரையின் போது கூறிய கருத்துக்கள்.

என்.எஸ்.கே. தமது தனித்திறமை, ஆற்றல், நாடகங்கள் மூலமும் பெற்றுக் கொண்ட அனுபவம் எல்லாவற்றை யும் சேர்த்து சுமார் 102 படங்கள் வரை சிறப்பாக நடித்துள்ளார். ஒரு தெலு ங்குப் படத்திலும் (பாக்கிய லக்சுமி) கன்னட படத்திலும் (ஸ்ரீரத்னா) நடித்துள்ளார்.

அவர் சொந்தமாக இயக்கிய படங் கள் பணம், மணமகள், நல்லதம்பி.



என்.எஸ். கிருஷ்ணன்

*மணமகள்* படத்தில் பிரபல பாடகி எம்.எல்.வசந்தகுமாரி- பி.லீலா ஆகி யோர் இணைந்து பாடும் *எல்லாம் இன்பமயம்* என்ற கர்நாடக இசையில் அமைந்த பாடல் என்றுமே இன்பம யான பாடல், ஆனந்த கான அமுதமழை.

என்.எஸ்.கே.யின் இசை ஈடுபா ட்டை இது வெளிப்படுத்தி நிற்கிறது.

உடுமலை நாராயண கவியின் இந்தப் பாடலுக்கு இசைமேதை சுப்புராமன் இசையமைத்திருந்தார்.

இப்படத்தில் பிரபல நடிகர் டி.எஸ். பாலையா மற்றும் லலிதா, பத்மினி ஆகியோரும் நடித்திருந்தார்கள். கதை, வசனம் கலைஞர் மு.கருணாநிதி எழுதியிருந்தார்.

இப்படத்தின் முதல்நாள் சிறப்புக் காட்சியைப் பார்த்த பிரபல எழுத்தா ளர் கல்கி என்.எஸ்.கே.யின் இல்லத் துக்கு நேரில் சென்று ரோஜா மலர் மாலை அணிவித்து என்.எஸ்.கே. இற்கு தமது பாராட்டுதல்களை தெரி வித்துக்கொண்டார்.

'என்.எஸ்.கே. இயக்கிய மூன்று படங் களில் ஒன்று *நல்லதம்பி*.

"நாட்டுக்குச் சேவை செய்ய  
நாகரிகக் கோமாளி வந்தானையா..."

என்ற பாடலை இந்தப் படத்திலேயே என்.எஸ்.கே. பாடியிருந்தார். (பாடல் உடுமலை நாராயணக் கவி)

என்.எஸ்.கேயின் பல்வேறு பகுத்தறி வுச் சிந்தனைகளையும் முழுமையாகப் பார்க்க முடிந்தது *நல்லதம்பி* படத்தில். தனது நடிப்பாற்றலாலும் நகைச்சுவைத் திறமையாலும் தனக்கென ஒரு இடத் தைப் பெற்றுக்கொண்டார் அவர்.

*நல்லதம்பி* படத்துக்கு உடுமலை நாரா யணகவியின் பாடல்களும் சி.ஆர்.சுப் பராமனின் இசையும் மிகவும் சிறப் பாக இடம்பெற்றிருந்தன. பிரபல தெலு ங்கு நடிகை பி.பானுமதிக்கு *நல்லதம்பி* தான் முதல் தமிழ்படம். நடிப்பதிலும் பாடுவதிலும் தனித்திறமை கொண்டிரு ந்த அவர் சிறப்பாகவே செய்திருந்தார்.

திரைக்கதை வசனம் சி.என். அண்ணாத்துரை எழுதியிருந்தார்.

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் நாஞ்சில் நாட்டில் நாகர்கோவிலை அடுத்த ஒழுகின சேரியில் 1908 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் திகதி பிறந்தார். 17 ஆவது வயதில் டி.கே. எஸ். சகோதரர்கள் நடத்திய நாடகக் கம்பனியில் சேர்ந்தார். நாடகங்களில் நடித்ததோடு ஹார்மோனியம், மிரு தங்கம் போன்ற இசைக்கருவிகளை இசைக்கவும் திரைச்சீலைகளுக்கு ஓவியம் தீட்டவுமான நுட்ப வேலைக ளிலும் ஈடுபட்டார்.

1933 இல் கோவலன் கதையை ஏ.வி.மெய்யப்பச் செட்டியார் இவ ரது குரலைக் கொண்டே இசைத் தட் டாக வெளியிட்டார். 1935 இல் மேனகா திரைப்படம் மூலம் தனது திரைவாழ் வைத் தொடங்கினார். சதிலீலாவதி, வசந்தசேனா, சந்திரகாந்தா, அம்பிகா பதி போன்ற படங்கள் அவருக்குப் புகழைத் தேடித்தந்தன. தியாகராஜ பாகவதருடன் ஏற்பட்ட நட்பு, டி.ஏ. மதுரம் திரையில் மட்டுமல்லாமல் வாழ்விலும் இணையாக அமைந் தது ஆகிய இரண்டும் முக்கிய திருப்புமுனைகளாக அமைந்தன.

சென்னை கீழ்ப்பாக்கத்தில் நியூ டோன் ஸ்ரூடியோவில்தான் அன்றைய பிரபலங்களான எம்.கே.டி.பாகவதர், எம்.எஸ்.சுப்புலட்சுமி, பி.யு.சின் னப்பா போன்றோர் நடித்த படங்கள் எடுக்கப்பட்டன. கலைவாணருக்கு இந்த ஸ்ரூடியோதான் கலைத்துறை வீடு போலச் செயற்பட்டது.

பாகவதர், தன்ஷா, ஜித்தன், நாகூர் ராமநாதன் செட்டியார் ஆகியோர் அந்த ஸ்ரூடியோவின் நிர்வாகிகளாக இருந்தனர். ஆனால் ஏதாவது பிரச் சினை என்றால் அவர்கள் உடனே என்.எஸ்.கேயைத் தான் தேடுவார் கள். அந்த ஸ்ரூடியோவில் கலைவா ணருக்கு இருந்த செல்வாக்கு அப்படி.

சிவாஜி நடித்த அம்பிகாபதி படத் துக்கான வேலைகள் நடந்து கொண்டி ருந்தபோது அந்தப் படத்தின் பாடல் களை கண்ணதாசன் எழுதி வந்தார். அவ ருக்கும் சிவாஜிக்கும் இடையே ஏற் பட்ட சிறு சச்சரவு பெரியளவில் வளர்ந் தது. இதனைப்பேசி சீர்செய்து இருவ ரையும் ஐக்கியப்படுத்தி வைத்தார்.

பிரபல நடிகர் எஸ்.வி.சகஸ்ரநாமம் நட்டமடைந்த சமயத்தில் தனது கம்ப னியின் நிர்வாகப் பொறுப்பையே அவரிடம் ஒப்படைத்து அவரை அவரது கஷ்டத்திலிருந்து விடுபட்டு தலைநிமிர வழிசெய்து கொடுத்தார்.

இவையெல்லாம் என்.எஸ்.கேயின் மனிதாபிமான, மனிதநேய செயற்பாடுக ளின் வெளிப்பாடுகளேயாகும்.

இவரது கலைப்பணி, இவர் வெளி ப்படுத்திய நவீன காலத்திற்கேற்ற சீர்திருத்தக் கருத்துக்கள் இவைகளுக் காக இவரையும் மதுரத்தையும் சோவியத் யூனியன் தமது நாட்டுக்கு வரவழைத்து கௌரவமளித்துச் சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.


நான்காம் வகுப்பு வரையே படி த்து நாடகக் கொட்டகைகளில் சோடா விற்பனை செய்து நாடகங்களில் நகை ச்சுவைப் பாத்திரமேற்று பின்னர் திரை யுலகில் தனக்கென ஒரு தனியிடத்தை நிலைநாட்டிக்கொண்ட கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் நாட்டுக்குச் சேவை செய்ய வந்த நாகரிகமான கலைஞர் என்பதை இலகுவில் மறுத்துவிடமுடியாது.

சுமார் 32 ஆண்டுகள் அவர் தமிழ்க்கலை உலகின் ஆதர்சன சக்தியாக விளங்கினார்.

சிரிப்பதற்கும் கொடுப்பதற்கும் படிப்பு வேண்டுமா? என்ற கேள்வி க்கு தகுந்த விடையைத் தந்த அபூர்வ கலைஞர் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவைச் சீர்குலைப்பதற்கான களமாக பயன்படுகிறதா இலங்கை?



கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் மீண்டும் சர்ச்சையில் சிக்கிக் கொண்டுள்ளது. தமிழ் நாட்டுக்குள் தீவிரவாத தாக்குதல்களை மேற்கொள்வதற்கு அல்லது அதற்கான ஆளணியையும் தகவல்களையும் திரட்டுவதற்கான களமாக பாகிஸ்தான் கொழும்பிலுள்ள தமது தூதரகத்தைப் பயன்படுத்திக் கொள்கிறது என்று இந்தியத் தரப்பில் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

கடந்த வாரம் கண்டியைச் சேர்ந்த ஜாகீர் ஹசேன் என்ற முஸ்லிம் நபர் சென்னையில் கைது செய்யப்பட்டமை, சென்னை சென்ரல் ரயில் நிலையத்தில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு ஆகியவற்றை அடுத்து, இந்த விவகாரம் இன்னும் தீவிரம் பெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

சென்னையில், கண்டியைச் சேர்ந்த பாகிஸ்தான் புலனாய்வு முகவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட மறுநாளே ரயில் நிலையத்தில் குண்டுவெடித்துள்ளது. இந்தக் குண்டுவெடிப்புக்கு, யார் காரணம் என்று இந்தப் பத்தி எழுதப்படும் வரை கண்டறியப்படவில்லை.

பொதுவாகவே, இந்தியாவில் எங்கு குண்டுவெடிப்பு நிகழ்ந்தாலும், அல்லது தீவிரவாத தாக்குதல்கள் நடந்தாலும், அதனை பாகிஸ்தான் உளவுப்பிரிவுடன் தொடர்புபடுத்தி சந்தேகிப்பது வழக்கம்.

ஆனால், இந்தக் குண்டுவெடிப்புக்கு, நக்சலைட் எனப்படும் இடதுசாரித் தீவிரவாதிகள், அல்லது வட கிழக்கு மாநிலங்களில் செயற்படும் ஏதாவது தீவிரவாத அமைப்புகூட பொறுப்பாக இருக்கலாம் என்ற சந்தேகம் உண்டு.

ஏனென்றால், அசாம் தலைநகர் கௌகாத்தி செல்லும் ரயில், சென்னை சென்ரல் ரயில் நிலையத்தில் வந்து நின்றபோதுதான் இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது.

வடகிழக்கு மாநிலங்களில், நக்சல்களினது ஆதிக்கமும் அதிகம். ஏனைய சுதந்திரம் கோரும், தனி மாநிலம் கோரும் சிறிய போராளிக் குழுக்களினது செயற்பாடுகளும் அதிகம்.

எனவே, இந்தத் தாக்குதல்களுக்கு யார் பொறுப்பு என்று கண்டறியப்பட்ட பின்னரே, இதில் பாகிஸ்தானுக்கு தொடர்பு உள்ளதா என்பது உறுதி செய்யப்படும்.

எவ்வாறாயினும் இந்த விவகாரத்தில் பாகிஸ்தான் உளவுப் பிரிவுக்குத் தொடர்புகள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, தென்னிந்தியாவை அது குறிவைத்துள்ளது என்று சமீபகாலமாகவே செய்திகள் வந்து கொண்டிருந்தன.

தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் குழப்பங்களையும், தாக்குதல்களையும் மேற்கொள்வதற்கு பாகிஸ்தான் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ.முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக, இந்தியாவின் மத்திய புலனாய்வு அமைப்புகள் அவ்வப்போது எச்சரிக்கை விடுப்பது வழக்கம்.

ஆனால், இம்முறை அந்த எச்சரிக்கையையும் மீறி, இந்தியாவில் தேர்தல் நடந்து கொண்டிருக்கும் சூழலில் நிகழ்த்தப்பட்ட குண்டுவெடிப்பு இந்தியாவினது, குறிப்பாக தமிழ் நாட்டினது பாதுகாப்புத் தொடர்பான கேள்விகளை எழுப்பியுள்ளது.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகளும் நெருக்கமும் அதிகரித்துள்ள சூழலில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் இடைவெளி அதிகரித்துள்ள சூழலில் தான் இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது.

இது இந்தியாவினது பாதுகாப்பு விடயத்தில், கூடுதல் கவனத்தையும், இலங்கையுடனான நெருக்கத்தையும் அதிகரித்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை புதுடில்லிக்கு உணர்த்தியுள்ளது.

கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் உள்ள அதிகாரிகள், தென்னிந்தியாவுக்குள் தமது புலனாய்வு முகவர்களை ஊடுருவச் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதான குற்றச்சாட்டு, இப்போது எழுகின்ற ஒன்றல்ல. ஏற்கனவே இந்தக் குற்றச்சாட்டு பல முறை கூறப்பட்டது.

கடந்த ஆண்டு தமீம் அன்சாரி என்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வர்த்தகர், கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரக புலனாய்வு முகவருடன் தொடர்பு வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதற்குப் பின்னர், தொடர்ச்சியாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடுத்து, கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றிய பாகிஸ்தான் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி, அங்கிருந்து மாற்றப்பட்டதாக தகவல்கள் வெளியாகின.

குறித்த அதிகாரியை கொழும்பில் இருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கும்படி, கொழும்புக்கு புதுடில்லி அழுத்தங்களைக் கொடுத்ததாகவும் கூட கூறப்பட்டது. மீண்டும் இப்போது அதே பிரச்சினை தோன்றியுள்ளது.

பொதுவாக, முக்கியமான நாடுகளில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள், அந்த நாட்டையோ அல்லது அயல்நாட்டையோ உளவு பார்ப்பதற்கான அதிகாரிகளைக் கொண்டிருப்பது ஒன்றும் ஆச்சரியமான விடயமல்ல.

பனிப்போர் காலத்தில் கிழக்கு மேற்கு என்று உலகம் பிளவுபட்டிருந்தபோது, புலனாய்வு அதிகாரிகளே சக்திவாய்ந்த நாடுகளின் இராஜதந்திர சேவையில் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

அத்தகைய அதிகாரிகளை குறித்த நாடு வெளியேற்றுவதும், அதற்கு பதிலடியாக மற்ற நாடு வெளியேற்றுவதும் சிலவேளைகளில் குறிப்பிட்ட புலனாய்வு அதிகாரியை பிடித்து தண்டிப்பதும்கூட பனிப்போர் காலத்தில் நிகழ்ந்துள்ளன.

தூதரகங்கள் என்பது தனியே நாடுகளுக்கிடையிலான உறவுகளை வளர்ப்பதற்கான களமாக மட்டும் பயன்படுத்தப்படுவதில்லை. அதையும் தாண்டி, நாட்டின் நலனைக் கருத்தில் கொண்ட புலனாய்வுத் தகவல்களைத் திரட்டும், சில வேளைகளில் எதிரி நாட்டைச் சீர்குலைப்பதற்கான களமாகவும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

இத்தகைய பின்னணிக்கு கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகமும் விதிவிலக்கானதாக இருக்கும் என்று கருத முடியாது.

தூதரகங்களில் உள்ள பாதுகாப்பு ஆலோசகர் என்ற பதவியானது, குறித்த நாடு பற்றிய பாதுகாப்பு சம்பந்தமான தகவல்களை திரட்டுவதற்கு உருவாக்கப்பட்டதே என்பதை நினைவில் கொள்ளலாம்.

எவ்வாறாயினும், தனக்கு எதிரான சதித்திட்டங்களுக்காக கொழும்பு களமாகப் பயன்படுத்தப்படுவதை, புதுடில்லி ஒருபோதும் விரும்பாது.

ஏற்கனவே, இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர், பாகிஸ்தானைத் தளமாக கொண்ட லஷ்கர் இ.தொய்பா தீவிரவாதிகள், இந்தியாவுக்குள் நுழைவதற்கான தளமாக இலங்கையைப் பயன்படுத்துவதான குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தன.

அதனை இலங்கை அரசாங்கம் அப்போது நிராகரித்திருந்தது. அதுமட்டுமன்றி, இந்தியாவைக் கண்காணிக்கும் தகவல் தொடர்பு நிலையம் ஒன்றை, வடக்கில் பாகிஸ்தான் அமைத்திருப்பதாகவும் கூட செய்திகள் வெளியாகின.

பொதுவாகவே இந்தியாவுக்குள் ஊடுருவுவதற்கு பாகிஸ்தான் உளவுப்பிரிவு இலங்கையைத் தளமாகப் பயன்படுத்துவது வழக்கம் என்று சிபிஐயின் முன்னாள் இயக்குனர் ஆர்.கே.ராகவன் தெரிவித்துள்ளதும் கவனிக்கத்தக்கது.

போர் முடிவுக்கு வந்த பின்னர், குறிப்பாக கடந்த இரண்டொரு ஆண்டுகளில் இலங்கை மீதான பாகிஸ்தானின் கரிசனைகள் அதிகரித்துள்ளது என்பதில் சந்தேகமில்லை.

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் நெருக்கமடைந்துள்ளதை புதுடில்லியால் அவ்வளவு சகித்துக் கொள்ள முடியவில்லை என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய விடயம்.

அண்மைக்காலமாக இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் பாகிஸ்தான் படை அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதற்கு இருதரப்பு இராணுவ ஒத்துழைப்புகள் அதிகரித்துள்ளது ஒரு காரணம்.

ஆனால், இவ்வாறு இலங்கைக்கு வரும் பாகிஸ்தான் ஜெனரல்களும் சரி, உயர்மட்ட அதிகாரிகள் குழுக்களும் சரி, தமிழ்நாட்டிலிருந்து சில பத்து கி.மீ. தொலைவில் உள்ள யாழ்ப்பாணத்துக்கு செல்வதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர்.

இது இந்தியாவினது சந்தேகங்களை வலுப்படுத்தியுள்ளது. கடந்த மாதம் இரண்டு பாகிஸ்தான் படை அதிகாரிகள் குழுக்கள் யாழ்ப்பாணம் சென்றிருந்தன.

இவை வெளிப்படையானதாக இருந்தாலும், போருக்குப் பின்னர், இலங்கையைத் தமது இரகசியத் தளமாகப் பாகிஸ்தான் புலனாய்வு அமைப்பு பயன்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

அதுமட்டுமன்றி, இந்தியப் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் நடவடிக்கைமையமாகவும் கொழும்பை பாகிஸ்தான் பயன்படுத்தி வருவதாகவும் இந்தியப் புலனாய்வு அமைப்புகள் மிக அண்மையில் குற்றம் சாட்டியிருந்தன.

இரண்டு வாரங்களுக்கு முன்னர், மத்திய நிதிப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் விடுத்த எச்சரிக்கை ஒன்றில், கொழும்பிலுள்ள தமது தூதரகம் மூலம் இந்தியாவுக்குள் போலி நாணயத்தாள்களை பாகிஸ்தான் அனுப்பி வருவதாக குறிப்பிட்டிருந்தனர்.

பங்களாதேஷ், நேபாளம் உள்ளிட்ட நாடுகளையும் இதற்கு பாகிஸ்தான் பயன்படுத்துவதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

பாகிஸ்தானில் இருந்து கடத்தப்பட்ட 5 ரூபா, 10 ரூபா, 20 ரூபா, 50 ரூபா போலி நாணயத்தாள்களை இந்திய அதிகாரிகள் கைப்பற்றியும் இருந்தனர்.

இந்தப் பின்னணியில்தான், கண்டியைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவர், சென்னையில் பாகிஸ்தான் புலனாய்வு முகவர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் அங்கு தகவல்களைத் திரட்டவும், தீவிரவாத தாக்குதல்களுக்கு ஆட்களைச் சேர்க்கவும் அனுப்பி வைக்கப்பட்டவர் என்று கூறப்படுகிறது.

இது உண்மையானால் அது தமிழ்நாட்டில் மட்டுமன்றி, இலங்கையிலும்கூட அமைதியற்ற நிலையை உருவாக்கும்.

கொழும்புக்கும், புதுடில்லிக்கும் இடையிலான உறவுகள் சற்று குழம்பிப் போயுள்ள சூழலில், புதுடில்லியில் அடுத்துப் பதவியேற்கவுள்ள அரசாங்கத்துக்கு இது மிகப் பெரிய சவாலாகவே இருக்கும்.

ஏனென்றால் பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் முன்னெப்போதும் இல்லாதளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளன. அது இந்தியாவினது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உருவெடுக்கும் போது இந்தியா சும்மாயிருக்க முடியாது.

அதுவும் இந்த விவகாரத்தில் கடும்போக்கைக் கடைப்பிடிக்கக் கூடிய பா.ஜ.க. ஆட்சியமைக்கக் கூடிய நிலை ஏற்பட்டால் இந்த விவகாரத்தில் கொழும்புக்குச் சங்கடங்கள் அதிகம் ஏற்படலாம்.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பௌத்த பிக்குகளின் ஆலோசனை வழிகாட்டல்கள் அவசியமானது

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பௌத்த பிக்குகளின் ஆலோசனை வழிகாட்டல்கள் மிகவும் அவசியமானது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மருதானை ராஜசேகரராமய வில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், நாட்டின் ஐக்கியத்தை பாதுகாக்க பௌத்த பிக்குகளின் ஆலோசனை அடிக்கடி எதிர்பார்க்கின்றோம்.

30 ஆண்டுகளான நீடித்த போரின் போது பௌத்த பிக்குகளின் ஒத்துழைப்பு முக்கியமானது. போரை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்த பிக்குகள் ஒத்துழைப்பு வழங்கினர்.

இன்றும் முல்லைத்தீவு, வவுனியா, அம்பாறை, திருகோணமலை போன்ற மாவட்டங்களின் சில கிராமங்களை பௌத்த பிக்குகளே பாதுகாத்து வருகின்றனர்.

குறித்த மாவட்டங்களில் வாழ்ந்து வந்த அப்பாவி சிங்கள மக்களை விரட்டியடிக்க எடுக்கப்பட்ட முயற்சிகளை பௌத்த பிக்குகள் தடுத்துள்ளனர்.

நாட்டில் விஹாரைகள் இருந்திருக்காவிட்டால் பௌத்த உரிமைகளை பாதுகாத்திருக்க முடியாது. பௌத்த மத உரிமைகளை உறுதி செய்ய பிக்குகள் வழங்கி வரும் ஆதரவு அளப்பரியது.

மஹா சங்கத்தினரை பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும் என்றார். (2)



வலி.தெற்கு கோப்பாய் பிரதேச ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் இ.ஐங்கரன் தலைமையிலான குழு கடந்த வெள்ளிக்கிழமை தொண்டைமானாறு அக்கரைப் பகுதிக்கு சென்றுள்ளது. இதன்போது அப்பிரதேச மக்கள் கிணற்றிலிருந்து குடிநீர் எடுப்பதற்கு நீர் இறைக்கும் இயந்திரத்தினை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்

(படம்: நல்லூர் செய்தியாளர்)

# புலம்பெயர் அமைப்புகள் தடையை இந்தியா ஏற்றுக்கொண்டது

## த டைம்ஸ் ஒப் இந்தியா தகவல்

(கொழும்பு)

16 புலம்பெயர்ந்த அமைப்புகள் மற்றும் 424 தனி நபர்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் விதித்திருந்த தடையை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

த டைம்ஸ் ஒப் இந்தியா இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. இதன்படி இந்த தடை செய்யப்பட்டவர்களில் ஒருவர் பிரித்தானியாவில் இருந்து இந்தியாவுக்கு வந்த போது, அவர் விமான நிலையத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே நடைமுறையை ஈரானும் மேற்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்தியாவும் இலங்கை அரசாங்கத்தின் தடையை தமது நாட்டில் நடைமுறைப்படுத்தி இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

எனினும் முன்னதாக கனடா இந்த தடையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று தெரிவித்திருந்தது.

இந் நிலையில் அமெரிக்காவும இந்த தடையை ஏற்றுக் கொள்வதில்லை என்ற நிலைப்பாட்டை எடுத்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (2)

# கல்வித்துறையில் காணப்படும் குறைபாடுகள் களையப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் கல்வித்துறையில் காணப்படும் குறைபாடுகள் களையப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறு கையில்,

எதிர்கால சந்ததியினரை நிர்க்கதியாக்காத வகையிலான கல்வி முறைமை உருவாக்கப்படும்.

கல்வித்துறையில் காணப்படும் குறைபாடுகளுக்கு அரசாங்கம் பொறுப்பு சொல்ல வேண்டும்.

சிங்களம் தமிழ் மற்றும் வரலாறு ஆகிய பாடங்கள் மாணவர்களுக்கு கற்பிக்கப்படுவதுடன் நாட்டுக்கு அர்த்தமுள்ள பிரஜைகளை உரு வாக்கக் கூடிய வகையிலான கல்வி முறைமை உருவாக்கப்பட வேண்டும.

சர்வதேச பாடசாலைகளில் சிங்களம் தமிழ் மற்றும் வரலாறு பாடங்கள் கற்பிக்கப்படுவதில்லை. இதனால் மாணவர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, தாய் நாட்டை நேசிக்கும் தலை முறையை உருவாக்க வேண்டும் என்றார். (2)

# ரயில் பெட்டிகள் கழன்றது எப்படி?

## விசாரணை ஆரம்பம்

கொழும்பிலிருந்து பளை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த யாழ் தேவி ரயிலில் இருந்து இரண்டு பெட்டிகள் கழன்று சென்ற சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வவுனியா, மூன்றுமுறிப்பு பிரதேசத்திலேயே இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த ரயில் பெட்டிகள் இருந்த பகுதியை நோக்கி மீண்டும் பயணித்த யாழ்தேவி, அவ்விரு பெட்டிகளையும் இணைத்துக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்துள்ளது.

எனினும் இந்த சம்பவத்தினால் பயணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர். (2)

# அனர்த்த மாவட்டங்களாக நான்கு இடங்கள் பிரகடனம்

(கொழும்பு)

மலையகத்தின் நான்கு மாவட்டங்கள் மண் மற்றும் கற்பாறை சரிவு அனர்த்தங்கள் நிகழக்கூடிய மாவட்டங்களாக தேசிய கட்டட ஆய்வுத்திணைக்களத்தினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

பதுளை, நுவரெலியா, கண்டி, கேகாலை ஆகிய மாவட்டங்களே மண் மற்றும் கற்பாறை சரியும் பிரதேசங்களாக பிரகடனம் செய்யப்பட்டிருப்பவைகளாகும்.

தேசிய கட்டட ஆய்வுத்திணைக்கள மண் பரிசீலனைப் பிரிவின் பணிப்பாளர் ஆர்.எம்.எஸ். பண்டார மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் தொடர்ச்சியாக பெய்து வரும் பெருமழையினையடுத்து ஆங்காங்கே மண் மற்றும் கற்பாறை சரிவுகள் இடம்பெற்றுள்ளன. இந்நிலை மேலும் நீடிக்கலாமென்றும் மக்கள் இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்கும்படியும் பணிப்பாளர் ஆர். எம்.எஸ். பண்டார தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டின் சீரற்ற கால நிலை மேலும் சில தினங்களுக்கு தொடரலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (2)

# இன்று ஒரு தகவல்

## குழந்தைகள் கவனம்!

ஒருத்தர் மிகவும் அவசரமாக போய்க் கொண்டிருந்தார்.

"எங்கே போகிறீர்கள்" என்று கேட்டேன்.

"எனக்கு வேண்டிய ஒருத்தருக்கு குழந்தை பிறந்திருக்கிறதாக செய்தி வந்தது. அது தான் வைத்தியசாலைக்கு போய்க்கொண்டிருக்கிறேன்." அப்படியென்றார்.

" அப்படியென்றால் கொஞ்சம் இப்படி உட்காருங்கள்... சில விபரமெல்லாம் சொல்கிறேன்... கேட்டுவிட்டுப் போங்கள்" என்றேன்.

புதுசா பிறந்திருக்கிற ஒரு குழந்தையைப் பார்க்கப் போகிறதென்றால், அது சாதாரண விடயமில்லை.

அதிலே மிகவும் கவனமாக நடந்து கொள்ள வேண்டும்! புதுக்குழந்தைக்கு நோய் சுலபமாக தொற்றும். முக்கியமாக காற்று மூலமாக பரவுகிற நோய்கள் சுலபமாக தொற்றும் அதனால், எமக்கு உடம்பு சரியில்லையென்றால், குழந்தையை விட்டு கொஞ்சம் தள்ளி இருக்கிறதுதான் நல்லது.

பெரியவர்களைப் பொறுத்தவரைக்கும் சாதாரணமாக உள்ள ஒரு கிருமி கூட குழந்தையை பொறுத்தவரை மிகவும் மோசமான ஒரு கிருமியாக இருக்கும்.

சில வெளிநாடுகளில் எப்படி தெரியுமா? பிறந்த குழந்தை தூங்கிக் கொண்டிருக்கிற ஒரு அறைக்கு போகவேண்டுமென்றால்... போகிறவர்கள் முகமூடி(Mask) போடவேண்டும். காலணிகளை மாற்ற வேண்டும். அவ்வளவு சுத்தமாக உள்ளேபோய் பார்த்துவிட்டு வர வேண்டும்.

பொதுவாக, சில வைத்தியசாலைகளிலே பார்த்தீர்களானால்.. பார்வையாளர் நேரத்தில் (Visiting hours) தாயைவிட்டு குழந்தையை தனியாக பிரித்து வைப்பார்கள்.

ஏனென்று நினைக்கிறீர்கள்..?

அந்த நேரம், பலபேர் வருவார்கள்... போவார்கள்... அவர்கள் கை, கால் சுத்தமாக இருக்காது. சுத்தமில்லாத கைகள் மூலமாக கிருமிகள் பரவும்.

சுத்தமில்லாத கையென்றால் மண், தூசு படிந்த கைமட்டுந்தானென்று அர்த்தமில்லை! வீதியில் கையை வீசிநடந்து வருகிறீர்கள். குழந்தையைப் பொறுத்தவரை அதுகூட சுத்தமில்லாத கைதான்.

தாயைத் தவிர மற்றவர்கள் குழந்தையை தூக்காமல் பார்க்கிறது நல்லது! தாய்கூட அளவோடு கொஞ்சுவதோடு நிறுத்தவேண்டும்.

புதுசா ஒரு குழந்தையை பெற்றிருக்கிற பெண்ணிடம் மற்றைய தாய்மார்கள் ஏதாவது சொல்லிபடியே இருப்பார்கள்.

குழந்தையை அப்படி வளர்க்கவேணும், இப்படி வளர்க்க வேணும் என்று சொல்வது கூட, அந்தப் பெண்ணை குழப்பிவிடக் கூடும். அதனால் அப்படியெல்லாம் கதைக்கக்கூடாது. அந்தப் பெண்ணே ஏதாவது கேட்டால் கூட வைத்தியர் சொல்ல வேண்டியதையெல்லாம், நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது.

புதிதாக பிறந்த குழந்தை தானென்றில்லை, ஒரு நோயாளிக் குழந்தையைப் பார்க்கப் போகிறதென்றால் கூட மிகவும் எச்சரிக்கையாகவே நடந்து கொள்ள வேண்டும்.

இப்படி எல்லா விபரமும் என் எதிரிலே இருந்தவரிடம் சொல்லி முடித்தேன். " மிகவும் நன்றி" என்று சொல்லிவிட்டு அவர் புறப்பட்டார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளநோயை குணப்படுத்த மீசிறியநுண் தொழில்நுட்பம்

மருத்துவ உலகில் புதிய பரிமானத்தினை மீசிறிய தொழில்நுட் பம் எதிர்காலத்தில் ஏற்படுத்தவுள்ளது. உளநோய் நிலைகளை மூளையில் அடையாளப்படுத்துவதனால் (Topolodical Mapping of mentalillness) மீசிறியநுண் தொழில் நுட்ப அணுகுமுறையில் நிரந்தரமாகவே உளநோய்களை பூரணமாகக் குணப்படுத்த கூடியதாக அமையும்.

இன்று மூளையின் செயற்பாடுகளை பல நுண் அலகுகளாக வகைப்படுத்தக்கூடியதாவுள்ளது. இது நுண் விழிநிலை என்கின்ற (Microconsciousness) செயற்பாட்டு அலகினை வரையறுக்கக் கூடியதாக அமைகின்றது. நாட்பட்ட உளநோய்களையும் மிதமான உளநோய்களையும் பூரணமாக குணப்படுத்தக்கூடிய சூழலை எதிர்கால விஞ்ஞானிகள் உருவாக்கி விடுவர்.

இது மருத்துவ துறையில் செங்குத்தான மாற்றங்களை ஏற்படுத்தப் போகின்றது. இதற்கு உளமருத்துவ ஆய்வுகள், நரம்பியல், உடற் தொழிலியல் கண்டுபிடிப்புகளும் மீசிறிய நுண் தொழில் நுட்பமும், வலைப்பின்னல் மின் பொறியியலும், பௌதிகவியல், இரசாயனவியல் ஆய்வுகளும் துணைபோகும். இதனால் பல உளநோய்களைப் பூரணமாகக் குணப்படுத்துவதோடு உளநோய் தொடர்பான சமூக வடுவினையும் இல்லாதுசெய்யலாம். மருந்துகளால் ஏற்படும் பக்க விளைவுகள் இல்லாது போகும். தொடர்ந்து மருந்து எடுக்கும் தேவை இல்லாது போகும். தொடர்ந்து சிகிச்சைக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லாது போகும். தற்போது பயன்பாட்டில் உள்ள இதயவியக்கிகள் போன்று மீசிறிய நுண் தொழில் நுட்பம் மூலமான மூளையவியக்கிகளை (Intracerebralnana pacing) மூளையின் நுண்விழி நிலை மாற்றத்திற்கு (Microcon sciousness) பிரயோகிக்கலாம்.

இதனால் நரம்புமின்பாய உடற்தொழிலியல்நிபுணத்துவத்தின் மூலம் பல உளநோய்களை இல்லாது செய்து விடலாம். உளப்பிளவையில் வரும் மாயப்புலன்கள் (Hallucinotions) தவறான எண்ணங்கள் (Delusions) எண்ணங்களால் ஏற்படும் மாற்றங்கள் என்பனவற்றை தவிர்த்திடலாம். மூளையில் Amygdala எனும் பகுதியில் நுண்விழிநிலை மாற்றங்கள் மனச்சோர்வு, பதகளிப்பு,



சந்தேகப்படும் உளப்பிளவை நோய் என்பவற்றை இல்லாது செய்யும்.

மின் வலிப்புச் சிகிச்சைமுறை (Electroconvulsive Therapy) ஸ்ரொயிட் மருந்துக்கள் மூலம் நரம்புக்கலங்கள் பாதிக்கப்படுவதை தடுப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. எனவே நுண்விழிநிலையில் மீசிறிய நுண் தொழில்நுட்ப அணுகுமுறையிலான மின்வலிப்பு சிகிச்சை முறைகள் ஆக்கபூர்வமானதாக அமையும்.

மனிதனின் உணர்வுகளின் வெளிப்பாடு மூளையில் Hypothalamus எனும் பகுதியில் உள்ள நரம்புக் கலங்களினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. எனவே உணர்வு வெளிப்பாடுகளின் நோய்நிலை மூளையவியக்கிகளை Hypothalamus பகுதியின் நுண் விழி நிலையில் செயற்படுத்தலாம்.

பெரும்பாலான உளநோய் நிலைகளில் பக்க மூளை (Temporal lobe) முன்மூளை (Grontallobe) என்பன பாதிக்கப்படுகின்றது. இப்பகுதிகள் பாதிக்கப்படும் போது நுண் விழிநிலை மாற்றத்தினை மீசிறிய நுண் தொழில்நுட்பத்திற்கான மூளையவிக்கிகள் மூலம் ஏற்படுத்தலாம்.

உளப்பிளவை நோயில் Meso cortical பிரதேசத்தில் A 10 Dopamine நரம்புகல இணைப்புகளில் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இதன்போதும் மீசிறிய நுண் அணுகுமுறையிலான மூளையவியக்கிகள் மூலம் நுண் விழி நிலை மாற்றத்தினை ஏற்படுத்தலாம். அறளைபெயர்தலின் போது Noradrenergic நரம்புக் கலங்கள் பாதிக்கப்படுகின்றன. இதனையும் மீசிறிய நுண் தொழில்நுட்ப அணுகுமுறையிலான மூளைவியக்கிகளை செயற்படுத்துவதால் கட்டுப்படுத்தலாம். நடு மூளையில் உள்ள DRN நரம்புக்கலங்களிலும் MRN நரம்புக் கலங்களிலும் ஏற்படும் மாற்றங்கள் மனச்சோர்வு நிலையினை ஏற்படுத்துகின்றது.

எனவே, இப்பகுதியின் நுண் விழி நிலையினை மீசிறிய நுண் தொழில்நுட்ப மூளையவியக்கிகள் மூலம் சாதாரண நிலைக்கு மாற்ற முடியும். அல்சைமர் நோயின் போது Cholinergic நரம்புக் கல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. எனவே அதற்




குரிய மூளையவியக்கியினால் இந்நோயினை கட்டுப்படுத்தும் சூழல் உருவாகும்.

அடுத்து Tricyclic மருந்துகள், Phenothiazine மருந்துகள், Quieta pine, Clozapine, Diazepam போன்ற மருந்துகளின் இரசாயானக் கட்டமைப்புக்களில் நுண் வடிவமைப்புக் களை உருவாக்கி பிரயோகிக்கலாம். Benzodiazepine lonophore complex இல் மீசிறிய நுண் தொழில்நுட்ப அணுகுமுறையின் மூலம் நுண் விழி நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் நித்திரையின்மை பதகளிப்பு என்பவற்றினை நீக்கலாம்.

போதைவஸ்துக்கு அடிமையானவர்கள், மதுப்பாவனைக்கு அடிமையானவர்கள், புகைப்பிடித்தலுக்கு அடிமையானவர்கள் போன்றவர்களுக்கு மீசிறிய நுண் அணுகு முறையிலான நுண்விழிநிலை மாற்றங்களை ஏற்படுத்த முடியும். இதற்கு Opiate நரம்பு கல இணைப்பு நிலைகள், Nicotine நரம்பு கல இணைப்பு நிலைகளில் மூளையவியக்கிகளை செயற்படுத்தல் வேண்டும். இதனால் உலகில் போதைப் பொருள், மதுபானம், புகைத்தல் போன்ற பழக்கங்களை இல்லாது செய்யலாம்.

மீசிறியநுண் தொழில்நுட்ப அணுகு முறையினை நோயெதிர்ப்புத்தன்மை, சிறுநீரகச் செயற்பாடு, ஈரலின் செயற்பாடு, சதையின் செயற்பாடு என்பவற்றிக்கும் பிரயோகிக்கலாம். இவை எதிர்வரும் 50 வருட காலத்தில் சாத்தியமானதாக அமையலாம். இதனால் உளநோய்கள் மட்டுமல்ல உயர் குருதி அமுக்கம், சலரோகம், சிறு நீரக செயலிழப்பு, ஈரற்செயலிழப்பு என்பனவற்றிற்கும் தீர்வு காணக் கூடியதாக அமையும்.

எனவே எமது இளம் சந்ததியினர் சிறந்த ஆராய்ச்சியாளர்களாக மீசிறிய நுண் இரசாயனவியல், பௌதீகவியல், உடற்றொழிலியல், மருந்தியல், உளமருத்துவம், மருத்துவம், நரம்பியல் போன்ற துறைகளில் ஆழமாக கற்று மீசிறிய நுண் தொழில்நுட்பத்தினை பிரயோகத்திலான நுண் விழிநிலை மாற்றங்களையும் ஏனைய மருத்துவச் சாதனைகளையும் ஏற்படுத்தலாம். இவை மனித குலத்திற்கு பெரும் நன்மை பயப்பனவையாக அமையும்.

**முக்கிய ஆங்கில பதங்கள்**

01. மீசிறியநுண் தொழில்நுட்பம் Nanotechnolgoy
02. உளநோய்களை மூளையில் அடையாளப்படுத்தல் Topological Mapping of Mentalillness
03. நுண் விழிநிலை Microconsciousness
04. மூளையவியக்கி Intracerebral Pacing
05. மாயப்புலன்கள் Hallucinations
06. தவறான எண்ணங்கள் Delusions
07. உளப் பிளவைநோய் Schizopherenia
08. மின் வலிப்புச் சிகிச்சை Electroconvulisve Theraphy

இது ஒரு மருத்துவ எதிர்வுகூறல் கட்டுரை. மாணவர்கள், ஆராய்ச்சியாளர்களுக்கு சிந்தனையை தூண்டுவதாக அமையும். மக்களுக்கு எதிர்காலத்தில் மருத்துவம் எவ்வாறு முன்னேறப் போகின்றதை கட்டியம் கூறுகின்றது. மேலும் பெற்றோர்கள் தமது குழந்தை களை ஆராய்ச்சியாளர்களாக உருவாக்க உதவும்.

Dr.C.S.யமுனாநந்தா

# எனது அழைப்பை வடக்கு முதலமைச்சர் புறக்கணித்தால் வடக்கில் குதிப்பேன்

## அமைச்சர் பசில் எச்சரிக்கை



வடமாகாண சபையின் முதலமைச்சரினால் மத்திய அரசாங்கத்தின் சுகாதார அமைச்சர் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோரை சந்திக்க முடியுமாயின் ஏன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான என்னை சந்திக்க முடியாது? என்று அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளருமான பசில் ராஜபக்ஷ கேள்வியெழுப்பினார்.

அண்மைக்காலமாக முதலமைச்சருக்கு சந்தர்ப்பத்தை வழங்கிவிட்டு நான் வடக்கின் செயற்பாடுகளிலிருந்து ஒதுங்கியிருக்கின்றேன். எனது அழைப்பை முதலமைச்சர் தொடர்ந்து புறக்கணித்தால் மீண்டும் வடக்கு களத்தில் இறங்கி பணியாற்றுவது குறித்து முடிவை எடுத்து விடுவேன் என்றும் அமைச்சர் எச்சரித்தார்.

வடக்கில் மூலை முடுக்குகள் குறித்து என்னை விட அறிந்தவர் எவரும் இல்லை. வடக்கு முதலமைச்சருக்கு வடக்கின் எல்லைகள் கூட தெரியாது. வடக்கு மக்களுக்கு சேவையாற்றுவதைவிடுத்து அவர் புலம்பெயர் மக்களின் தேவைகளை நிறைவேற்றி வருகின்றார் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வட மாகாண சபை முதலமைச்சரை சந்திப்பதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சந்தர்ப்பம் கேட்டமைக்கு இன்னும் சாதகமான பதில் வழங்கப்படவில்லை என்பது குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

வட மாகாண சபை உரிய முறையில் இயங்கப்படுவதற்கு அரசாங்கம் சந்தர்ப்பம் வழங்கவில்லை என்று வட மாகாண முதலமைச்சர் உலகம் முழுவதும் கூறிக்கொண்டிருக்கின்றார். நாங்கள் செய்து காட்டுகின்றோம் என்றுதான் இவர்கள் வட மாகாண சபை அதிகாரத்தை பெற்றுத்தருமாறு கேட்டிருந்தனர். மேலும் உள்ளூராட்சி மன்றங்களையும் பெற்றுக்கொண்டனர்.

வடமாகாண சபையினதும் உள்ளூராட்சி மன்றங்களினதும் அதிகாரங்களை பெற்றுக்கொண்ட கூட்டமைப்பினர் தற்போது மக்களுக்கு சேவை செய்யாமல் மத்திய அரசாங்கத்தை குறைகூற ஆரம்பித்துவிட்டனர்.

யாழ். மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழு தலைவராக வருமாறு முதலமைச்சர் விக்னேஸ்வரனை ஜனாதிபதி கோரினார்.

ஆனால் அவர் மறுத்தார். எனினும் அதில் தற்போது இணைந்துகொண்டு அரசாங்கத்தைக் குறைகூறுகின்றார். அங்கு சென்றும் அரசாங்கத்தையே விமர்சிக்கின்றனர்.

மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வட மாகாண சபைக்கு சிறந்த சந்தர்ப்பமுள்ளது. மீன்பிடி, சுகாதாரம், கல்வி, விவசாயம், கைததொழில என முக்கியமான விடயதானங்கள மாகாண சபையிடம் உள்ளன.

ஆனால் உரிமையாக உள்ள விடயங்களை விட்டுவிட்டு உரிமையற்ற விடயங்களையும் கோருவதையும் அதற்காக பிரேரணைகளை நிறைவேற்றுவதையும் கூட்டமைப்பினர் செய்து வருகின்றனர்.

வட மாகாண சபை முதலமைச்சரை சந்தித்து கலந்துரையாட வேண்டும் என்ற எண்ணத்திலேயே நான் இன்னும் இருக்கின்றேன். ஆனால் அவர் அதற்கு இதுவரை சாதகமான பதிலை அளிககாமல் இருக்கின்றார். வட மாகாண சபை முதலமைச்சரினால் மத்திய அரசாங்கத்தின் சுகாதார அமைச்சர் மற்றும் கல்வி அமைச்சர்களை சந்திக்க முடியுமாயின் ஏன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான என்னை சந்திக்க முடியாது?

வடக்கு மக்களுக்கு சேவையாற்றுவதற்கு உண்மையான ஆர்வம் கூட்டமைப்பினருக்கு இருந்தால் அதற்கு வழிகளும் சந்தர்ப்பங்களும் உள்ளன. அவ்வாறு நேர்மையான நோக்கம் இருந்தால் கூட்டமைப்பினர் எம்முடன் இணைந்து செயற்படலாம். ஆனால் வடக்கு மக்களுக்கு சேவையாற்றுவதை விடுத்து முதலமைச்சர் புலம்பெயர் மக்களின் தேவைகளை நிறைவேற்றி வருகின்றார் என்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவா சென்ற த.தே.கூட்டமைப்பினர் சர்வதேச விசாரணையை கோரவில்லை

## வலி.வடக்கு பிரதேச சபை துணை தவிசாளர் குற்றச்சாட்டு

ஜெனீவா சென்ற கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழின அழிப்பு தொடர்பில் சர்வதேச விசாரணையை கோராமல் மௌனம் காத்திருந்தனர் என்ற உண்மையை போட்டுடைத்துள்ளார் அக்கட்சியின் உறுப்பினரும் வலி.வடக்கு பிரதேச சபையின் துணைத் தவிசாளருமான எஸ்.சஜீவன்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனீவா மனிதவுரிமை அவையின் உத்தியோகஅமர்வுகளுக்கு வெளியே நடத்தப்படும் ஓர் நிகழ்வுகளில் சிலமுக்கியமான தயாரிப்பு வேலைகளுக்கான கருத்துப் பரிமாறல்கள் நடைபெறும். இவ்வாறான கூட்டங்களை பலவிதமான அமைப்புகள் நடத்துவது வழமை. இவ்வாறான ஒரு சந்திப்பில், அதுவும் 18 நாடுகளைக் கொண்ட ஓர் அரங்கில் கலந்துகொண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு முன்வைக்கப்பட்டபோது, சர்வதேச விசாரணையை பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வேண்டவில்லை.

மாறாக, வரப்போகும்தீர்மானம் இலங்கை அரசாங்கத்திற கெதிரான ஒரு தீர்மானமாக அமைந்தாலே போதுமானது என்ற கருத்துப் படவே அவர் உரையாற்றியிருந்தாா். இரண்டு பக்கமும் செய்த போர்க்குற்றம் என்ற பொருள்படவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அணுகுமுறை இருந்தது.

எனவே, ஈழத் தமிழ்த் தேசிய இனத்தின் பார்வையையும் கோரிக்கையையும் முன்வைப்பதில் தவறான அணுகு முறையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு சிறிய குழு, ஆனால், கூட்டமைப்பின் தலைமையாகத் தம்மைச் சித்திரித்துக் கொண்டு,ஜெனீவாவில் பெருமதவறிழைத்திருக்கிறார்கள். அடிப்படையில் இங்கு 60 ஆண்டு காலமாக நடைபெறும் இன அழிப்பு குறித்த சர்வதேச விசாரணை வேணடும் என்ற கோரிக்கையை இவர்கள் முன்னெடுக்கத் தவறுவது ஏன் என்ற கேள்வி எழுகிறது. இலங்கை குறித்த நகல் தயாரிக்கப்படும் போது எமது நிலைப்பாட்டை முன்வைப்பதை பல சக்திகளும், குறிப்பாக ஈழத்தமிழருக்கு நடந்த, நடந்து வரும் இனரீதியானஅடக்குமுறை விடயத்தில் தமிழர் தரப்பின் நியாயத்தைப் புரிந்துகொண்டுள்ள பல மனிதர்களும் ஐ.நா.வின் மனிதவுரிமை அவையில் இருக்கிறார்கள். வல்லரசுகளினதும், பிராந்திய சக்திகளினதும் அநீதியான போக்குகளை விளங்கிய மனிதர்களாகவும் அவர்கள் இருக்கிறார்கள். ஈழத்தமிழர் மீதான இன அழிப்பு குறித்த கருத்து நிலையை கூட்டமைப்பும் புலம் பெயர் சமூகமும் பலமாக முன்வைக்கும் போதுதான் அவர்களால் ஐ.நா.வுக்கு உள்ளிருந்து செய்யக்கூடிய சில அடிப்படையான வேலைகளை இலகுவாக்கும். இதைப் புரிந்துகொண்டு செய்யப்படவேண்டிய ஒரு முக்கியமான வேலைத்திட்டம் ஒன்றை வகுத்துக் கொள்ளாது தமிழர் தரப்பு செயற்படுவதே மிக முக்கியமான சிக்கலாக உள்ளது என்பதை நான் ஜெனீவாவில் நேரே சென்று பார்த்தபோது புரிந்து கொள்ளமுடிந்தது. அங்கு சமுகமளித்திருந்த பல புலம்பெயர் தமிழர்கள்தனிப்பட்ட ரீதியில் கதைக்கும் போது கூட்டமைப்பில் ஒருசிலர் எடுத்திருக்கும் நிலைப்பாடு பெரியதடங்கலாக இருப் பதைச் சுட்டிக்காட்டினார் கள். வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் அங்கு நான்கு முறை உரையாற்றிய ஒரு விடயம் மட்டுமே உறுதியான கருத்தை முன்வைத்தாக அவர்கள் சொன்னார்கள். வெளிநாட்டு பிரதிநிதிகள் பலரும் தமதுநட்பையும் ஆதரவையும் அனந்தியிடம் வெளிப்படுத்தினார்கள். எமது கருத்தை மனிதவுரிமை அவையின் அதிகாரபூர்வமான அமர்வுகளில் பங்கெடுத்து வெளிப்படையாக முன்வைப்பதற்குஏன் இதுவரைகாலமும் தவறினோம்? மாகாணசபைஉறுப்பினரான அனந்தியும், உள்ளூராட்சி சபையின் உறுப்பினரான நானும் மொத் தம் 6 தடவைகள் மனிதவுரிமைகள் சபையில் பேசக் கூடியதாக இருந்தபோது,ஏன் இவ் வளவு காலமும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கூடஅங்கு தோன்றி நேரடியாக உரையாற்றவில்லை என்ற கேள்வி மிகவும் பாரதூரமானது.

ஆகவே, ஏதோ ஒரு சக்தியின் பேச்சுக்கு இணங்கி ஓர்நிகழ்வுகளில் மட்டும் பங்கெடுத்துவிட்டு, நேரடியாக ஈழத்தமிழரின் கோரிக்கையை பகிரங்கமாக முன்வைப்பதற்கு ஏன் கூட்டமைப்பின் தலைமை என்று சொல்லிக்கொள்பவர்கள் தடையாக இருந்தார்கள் என்ற கேள்வி அங்கு எழுந்தது. அடுத்ததாக அரசியல் தீர்வு குறித்த நிலைப்பாடு. குறிப்பாக, அரசியல் தீர்வு குறித்து பேசும்போது ஏற்கனவே நடந்துமுடிந்த நோர்வேயின் மத்தியஸ் தத்தின்போது இடைக்காலத் தீர்வு குறித்த ஒரு நகல் முன்வைக்கப்பட்டது.

இப்போது பேச்சுவார்த் தைக்கான நிலைப்பாடு எவ்வாறு அமைய வேண்டும் என்பதில் 13ஆவது திருத்தச் சட்டம் என்பதை ஒரு கருவியாக வைத்து செயற்பட முடியாது என்ற நிலைப்பாட்டைத் தெளிவாக சர்வதேச நாடுகளுக்கு எடுத்துரைக்கவேண்டும். நாமே எமது பிரச்சினை என்ன என்பதைத் தெளிவாக முன்வைக்க வேண்டும்.

இதைப்போலவே நோர்வே மத் திய ஸ்தம் வகித்த போது உள்நாட்டுப் பொறிமுறையிலேயே தீர்வு காணப்படவேண்டும்என்று வலி யுறுத்தும் போக்கு காணப்பட்டது. இதையும் நிராகரித்த நிலையிலேயே இடைக்கால நிர்வாகம் ஒன்றைக்கோரும் மாதிரி வரைபு ஒன்று தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்டது.

இன அழிப்புப் போர் ஒன்று நடந்து முடிந்திருக்கிற நிலையில், மனிதாபிமானத்திற்கெதிரான பெருங்குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்கிற நிலையில், அதுவும் குறிப்பாக ஒரு தேசியஇனமும் அதன் வளங்களும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிற நிலையில் எந்த விதமான அரசியல்கொள்கையை நாம் கொண்டிருக்கவேண்டும்.

குறிப்பாக, தென்னாபிரிக்க முயற்சி என்று ஒன்று கூறப்பட்டு வருகிறது. இதுவும் எமது அரசியற் கொள்கையை ஒருஉள்நாட்டு விவகாரமாக மட்டுப்படுத்திவிடும் போக்கில் முன்வைக்கப்படும் ஆபத்துஇருக்கிறது. இதனால், அரசியல்கொள்கையைத் தெளிவாக முன்வைக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(2-6-4)

# இடமாற்றம் வழங்குமாறுகோரி ஆசிரியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

கஷ்டப்பிரதேசங்களில் 5 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றிய ஆசிரியர்கள் தமது சொந்த இடங்களிற்கு இடமாற்றம் வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டம் நேற்றுக்காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள வடக்கு மாகாண கல்வியமைச்சின் முன்பாக இடம் பெற்றுள்ளது.

துணுக்காய், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மடு,தீவகம் ஆகிய 5 வலயங்களில் தற்போது ஆசிரியர்களாக பணியாற்றுபவர்களும் யாழ் மாவட்டத்தை சொந்த இடமாக கொண்ட ஆசிரியர்களே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தாம் 5 வருடங்களுக்கு மேலாக கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றி வருவதாகவும் எமக்கு இடமாற்றம் வழங்கக்கோரி இடமாற்றத்திற்கு விண்ணப்பித்திருந்தோம்.

ஆனால் நாம் இடமாற்றத்திற்கான தகுதியினை பெறவில்லை எனக்கூறி இடமாற்ற சபை எமது விண்ணப்பத்தினை நிராகரித்திருந்தது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாம் மேன்முறையீடும் செய்திருந்தோம். ஆனாலும் எமக்கு இதுவரை எவ்வித பதிலும் தரப்படவில்லை.மாறாக ஒவ்வொரு நாளும் ஏமாற்றப்பட்டே வந்தோம்.

போரின் [illegible] நாம் எமது [illegible] பணியாற்றியிருந்த போதிலும் எமக்கான இடமாற்றம் வழங்கப்பட்டது. வேறு இடங்களில் பணியாற்றுபவர்களிற்கு வழங்கப்பட்டுள்ளது.

எமக்கான இடமாற்றம் இம்முறையும் வழங்கப்படாது விட்டால் தொடர்ச்சியாக நாம் போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளோம்.

எமது இடமாற்றம் எழுதுவினைஞர் விட்ட தவறினாலேயே இரத்துச்செய்யப்பட்டுள்ளது

அவரின் தவறுக்காக நாம் ஏன் தண்டனை அனுபவிக்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்கு வருகை தந்த யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஆசிரியர்களின் கோரிக்கை நியாயமானது என்றும் தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டு இடமாற்றம் வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார் .

மேலும் வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனுடனான சந்திப்பின் போது இடமாற்றம் கோரியுள்ள 77 ஆசிரியர்களுக்கும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் இடமாற்றம் வழங்கப்படும் என உறுதியளித்ததனைத் தொடர்ந்து ஆசிரியர்கள் தமது ஆர்ப்பாட்டத்தினை கைவிட்டனர். (2-4)

# கைத்தொழில் அபிவிருத்தி சபையில் பதவி வெற்றிடம்

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் கீழ்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதில் பொறியியலாளர் பதவி (மின்சாரவியல்), சபை செயலாளர் பதவி, தவிசாளருக்கு பிரத்தியேக உதவியாளர், பொறியியல் உதவியாளர் பதவி,முகாமைத்துவ உதவியாளர் பதவி, சாரதி அல்லது உடனொத்து(அலுவலக உதவியாளர், வாா்ப்பக பணியாளர், ஆலை இயக்குநர், பொலிஸார், தச்சன், மின்முலாமிடுபவர், மின் ஒட்டுநர், மின் இணைப்பாளர் மற்றும் இறப்பர் மெசின் இயக்குநர்), வெளிக்கள உதவியாளர் ஆகிய வெற்றிடங்கள் நிலவு கின்றன.

சகல பதவிகளுக்குமான வயதெல்லை 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர், தவிசாளர், இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை, இல. 615, காலிவீதி, கட்டுபெத்தை, மொரட்டுவ என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இவ்விண்ணப்பம் கோரல்கள் தொடர்பான மேலதிக விபரங்களை வலம்புரி அலுவலகத்தில் பார்வையிடலாம். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்திட்ட மணலைப் பெறும் அனுமதிக்கு மாற்று ஏற்பாடு கோரி மக்கள் அணி திரள்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் கரை துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள குமுழமுனை கிழக்கு, மேற்கு, மத்தி, தண்ணிமுறிப்பு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் வீட்டுத்திட் டத்திற்கான மணல் ஏற்றுவதற்குள்ள நடைமுறையை மாற்றுமாறு கோரி அணி திரண்டுள் ளனர். இச் சம்பவம் நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குமுழமுனை கிழக்கு மேற்கு, மத்தி, தண்ணிமுறிப்பு ஆகிய நான்கு கிராமங்களைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட இந்திய வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டது.

இவ் அனைத்து வீடுகளையும் ஆறுமாதங்களினுள் பூர்த்தி செய்ய வேண்டுமெனவும் அறிவுறுத்தப் பட்டது.

எனினும், வீடு கட்டுவதற்கு தேவையான ஆற்று மணலை பெறுவதற்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள 46 கிராமசேவையாளர் பிரிவுகளுக்குமாக 130 அனுமதி கடிதங்கள் மாத்திரமே ஒரு தடவை வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் ஒரு கிராம சேவையாளர் பிரிவில்இரு குடும்பங்களுக்கு மாத்திரமே முதற்கட்டத்தில் மணல் ஏற்ற அனுமதி கிடைக்கும்.

இவ்வாறாக மணல் ஏற்றுவதற்கு இறுக்கமான நடைமுறையைப் பின்பற்றுவதனால் வீட்டுத்திட்டத்தினை அறிவுறுத்தப்பட்டதன்படி 6 மாதத்தினுள் பூர்த்தி செய்ய முடியாது.




மாறாக இவ் வீட்டுத்திட்டத்தினை பூர்த்தி செய்வதாயின் 2 வருடங்களாவது எடுக்குமென மக்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்ட இக்கிராம மக்கள் போக்குவரத்து, மின்சாரம், வீதி போன்ற வசதிகளை இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை.

இந்நிலையில் தமக்கு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டமும் மணல் பிரச்சினையால் பறி போய் விடுமோ என்ற அச்சத்தில் மணலை பெற்றுக் கொள்வதற்கான நடைமுறையை மாற்றுமாறு கோரி நேற்றைய தினம் அதிகாலையிலேயே அணி திரண்டுள்ளனர்.

4 கிராம சேவையாளர் பிரிவுகளிலுமுள்ள மக்கள் கரைதுறைப் பற்று பிரதேச செயலரிடமும், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடமும் சென்று தமது நிலையை எடுத்துரைத்தனர்.

ஆயினும் அவர்களின் தட்டிக் கழிப்பு பேச்சினால் விரக்தியுற்ற மக்கள் முல்லைத்தீவு பிரதான பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சேனநாயக்காவிடம் இப்பிரச்சினை பற்றி தெரிவித்தனர்.

மக்களின் பிரச்சினையையும் நிலைப் பாட்டினையும் புரிந்து கொண்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, 6 மாதத்தினுள் வீட்டுத் திட்டத்தினை பூர்த்தி செய்ய ஒத்துழைப்பு வழங்குவதாகவும் ஒரு வீட்டிற்கு தேவையான 20 உழவியந்திரப்பெட்டி மணலை 4 கட்டங்களாக பெற்றுத் தருவதாகவும் அதற்காக கிராம மக்கள் தமது கிராம சேவையாளர் ஊடாக கடிதத்தினைப் பெற்று பொலிஸ் நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அதன்படி மணலை ஏற்றி வீட்டில் கொண்டு வந்து சேர்க்கும் வரை பொலிஸ் உதவிபுரியும் என உறுதியளித்துள்ளார்.

இவ்வீட்டுத் திட்டங்களிற்கு போதியளவு மணல் குமுழமுனை பகுதியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.(9-267)

## சட்டவிரோதமாக மரப்பட்டறை நடத்தி வந்த இருவர் கைது

(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட முறிப்பு கிராமத்திலிருந்து சட்ட விரோதமாக மரப்பட்டறையை நடத்தி வந்ததாகக் கூறப்படும் இருவரை சந்தேகத்தின் பேரில் கடந்த சனிக்கிழமை கைது செய்துள்ளதாக முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கிராமத்தில் உள்ள வீடொன்றில் மரப்பட்டறையை இருவர் சட்டவிரோதமான முறையில் நடத்தி வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து அவ் வீட்டை சோதனையிட்ட போது தேக்கு மரக் குற்றிகள் சிலவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அத்தோடு அங்கு பணிபுரிந்த இருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதுடன் முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர். (9-250)

## பெய்து வரும் மழையினால் விவசாயிகள் மகிழ்ச்சி

(கிளிநொச்சி)

கடும் வரட்சி நிலவியதன் பின்னர் நேற்று முன்தினம் முதல் கிளிநொச்சியில் கடும் மழை செய்து கொண்டுள்ளது.

தற்போது இரணைமடு குளத்தின் கீழ் நெற்பயிர்ச்செய்கையை ஆரம்பித்துள்ள விவசாயிகள் பெரும் பயனடைந்துள்ளனர்.

அத்தோடு, புதுமுறிப்பு குளத்தின் கீழ் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு குளத்தின் நீர் போதாமையினால் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்வதில்லையென தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், மழை பெய்து குளத்தில் 10 அடி அளவில் நீர் வரக்கூடிய சாத்தியக்கூறுகள் இருந்தால் குறைந்த மாத விளைச்சலுக்கான நெல்லை விதைப்பதற்கு நீர்ப்பாசன பொறியிலாளருடன் கலந்தாலோசித்து நெற்செய்கை மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யலாமென அண்மையில் நடைபெற்ற பயிர்ச்செய்கை கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

தற்போது பெய்து வரும் மழையினால் குளத்தினுடைய நீர்மட்டம் அதிகரிக்கும் பட்சத்தில் சிறு போக பயிர்ச்செய்கையை சிறிய அளவிலேனும் மேற்கொள்ளலாமென விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (9-254)




## துணுக்காய் வலயத்தின் தமிழ்த்தின போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

தமிழ்த்தின போட்டியை முன்னிட்டு துணுக்காய வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டி மாகாண மட்டத்திற்கு தெரிவாகியோரின் பெயர் விபரங்களை துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய வெற்றி பெற்ற மாணவர்களின் விபரங்கள் வருமாறு,

**இசையும் அசைவும் பிரிவு-1**

த.எயுயி(மு/அணிஞ்சியன்குளம் த.வி)

**இசை-தனி பிரிவு-2**

பி.இனியவன்(மு/தேறாங் கண்டல் அ.த.க.பா)

பிரிவு 3 பு.சிவசங்கர்(மு/ஒட்டுசுட்டான் ம.வி)

பிரிவு 4 இ.மேரிபிரியங்கா(மு/மாங்குளம் ம.வி),

பிரிவு 5 க.வான்மதி(மு/ஒட்டுசுட்டான் ம.வி)

**இசை பிரிவு 1** மு/கற்சிலை மடு அ.த.க. பாடசாலை

**பிரிவு-2**

மு/கற்சிலைமடுஅதகபாடசாலை

**நடனம் தனிப்பிரிவு**

**பிரிவு-2**

மு/கற்சிலைமடுஅதகபாடசாலை

**பிரிவு-3**

மு/கற்சிலைமடுஅதகபாடசாலை

**பிரிவு-4**

மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை

**பிரிவு-5**

மு/மாங்குளம் ம.வி

**நடனம் குழு**

**பிரிவு-1**

மு/கற்சிலைமடுஅதகபாடசாலை

**நாட்டிய நாடகம் திறந்த போட்டி**

மு/ஒட்டுசுட்டான் ம.வி,

**நாட்டார் பாடல்**

மு/பாலி நகர் ம.வி

**மேடை நாடகம் திறந்த போட்டி**

மு/ஒட்டுசுட்டான் ம.வி

**வில்லுப்பாட்டு திறந்த போட்டி**

மு/தேறாங்கண்டல் அ.த.க.பாடசாலை

**விவாதம் திறந்த போட்டி**

மு/மாங்குளம் ம.வி

**தமிழறிவு வினாவிடை திறந்த போட்டி**

மு/மல்லாவி மத்திய கல்லூரி

(முற்றும்) (9-15)

## நிரந்தர அதிபரை நியமியுங்கள்

(முல்லைத்தீவு)

மு/வற்றாப்பளை மகா வித்தியாலயத்திற்கு நிரந்தர அதிபரை நியமிக்குமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மீள்குடியேற்றத்தின் பின்னர் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் இப்பாடசாலை இயங்கி வருகின்றது.

இங்கு தரம் 1 தொடக்கம் உயர் தரம் வரையில் 457 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இப்பாடசாலையில் நிரந்தர அதிபர் கடமையாற்றி வந்த நிலையில் கடந்த 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் இன்று வரை நிரந்தர அதிபர் இன்றி தற்காலிக அதிபரே கடமையாற்றி வருகின்றார்.

எனவே, மாணவர்களின் கல்வியினைக் கருத்திற்கொண்டு நிரந்தர அதிபரை நியமிக்க வடமாகாண கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-267)

## விவசாயிகளுக்கான செயலமர்வு இன்று

(மன்னார்)

எதிர்வுகூறப்பட்டுள்ள வரட்சியான நிலைமைகளின் கீழ் கடைப் பிடிக்க வேண்டிய பொருத்தமான தொழில் நுட்பங்கள் சம்பந்தமாக விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குவதற்காகவும், விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளின் மற்றைய பங்காளர்கள் இவ்வாறான சூழ்நிலை யில் எவ்வாறு செயற்பட்டு விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பங்களிப்பினை செய்ய முடியும் என்பதற்கான ஆறிவூட்டல்களை வழங்குவதற்காகவும் உயிலங்குளத்தில் அமைந்துள்ள மன்னார் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இவ் விடயம் தொடர்பான செயலமர்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் பி.ப. ஒரு மணி வரை நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வின் ஆரம்ப நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

இவ்வறிவூட்டல் செயற்பாடுகளில் விவசாயிகள், விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளின் மற்றைய பங்காளர்கள் மற்றும் ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு வடமாகாண விவசாய பணிப்பாளர் சி.சிவகுமார் கேட்டுள்ளார். (அ)



வவுனியா ஓமந்தை சமுர்த்தி வங்கிச் சங்கத்தினால் சித்திரை புத்தாண்டு சேமிப்பு வாரத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டது. இதன்படி சமுர்த்தி பயனாளிகளுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வையும் வெற்றி பெற்ற பயனாளிக்கும் மாணவனொருவருக்கும் பரிசில் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழைத்தனம் என்பது அனைத்தையும் பாழாக்கும். வீரமே அனைத்தையும் வெல்லும்.
- நேரு

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அட்டூழியங்களை ஒழிக்க மறைகர சக்தி உருவாகலாம்

அச்சுவேலி கதிரிப்பாயில் நடந்த கொடூரச் சம்பவம் அனைவரையும் திகிலடையச் செய்துள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரை வெட்டிச் சரிக்கும் அளவில் அசுரத்தனங்கள் எங்கள் மண்ணில் தாண்டவம் ஆடத்தொடங்கி விட்டது என்றே கூறவேண்டும்.

அதேநேரம் சாதாரண மனநிலையில் இருந்து கொண்டு தொடர்ச்சியாக மூவரை வெட்டிக் கொல்ல முடியுமா? என்ற ஆய்வுகளும் இங்கு அவசியமாகின்றன.

வன்மத்தை தீர்ப்பது என்பதில் கூட, சில இரக்கத் தனங்கள் இருக்கவே செய்யும். ஆனால் அச்சுவேலியில் நடந்த மூவர் கொலையில் ஈவு இரக்கம் என்ற எதனையும் கொலையாளியிடம் காண முடியவில்லை என்பது புலனாகின்றது.

அப்படியானால் போதை நிலையில் இப்படி ஒரு கொடூரம் நடந்திருக்கக் கூடிய சாத்தியம் உண்டா? என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவது அவசியம் என்பதை இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

இதுதவிர, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரை வெட்டிக் கொன்ற சம்பவத்தைப் பார்க்கும் போது இது தவிர்க்க முடியாத சூழலில் நடந்ததல்ல.

மாறாக குறித்த குடும்பத்தைச் சேர்ந்த அத்தனை பேரையும் வெட்டிச் சரிக்க வேண்டும் என்ற திட்டத்துடன் இந்தக் கொலைகள் நடந்துள்ளன என்பதற்குள் ஒரு வலுமையான செய்தி உள்ளது.

அதாவது வட மாகாணத்தில் இத்தகைய சம்பவங்களைச் செய்கின்றவர்களுக்கான தண்டனைகள் போதியதாக இல்லை. எதையும் செய்து விட்டு தப்பித்துக் கொள்ளலாம் என்ற நிலைமை உருவாகி விட்டது. பொலிஸ் பயம் என்பது அறவேயில்லை.

கை நீட்டி காசு வேண்டிய பொலிஸுக்கு இன்னும் கொஞ்சம் கூடுதலாகக் கொடுத்தால், எல்லாம் சரியாகிப் போகும் என்பது கொலையாளிகளுக்கும் கொள்ளைக்காரர்களுக்கும் நன்றாகவே தெரியும்.

இலஞ்சத்திற்கு அடிமையாகிப் போன பொலிஸாரால் கொலைகளையும் கொள்ளைகளையும் ஒரு போதும் கட்டுப்படுத்த முடியாது.

குறிப்பிட்ட சில பொலிஸ் அதிகாரிகளும் பொலிஸாரும் நேர்மையாக நடந்து கொள்கின்றனராயினும் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

சட்டத்தின் முன் நிறுத்தி குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்க பொலிஸார் முற்பட்டாலும் குற்றவாளியை பிணை எடுக்க எங்கிருந்தோ ஒரு சட்டத்தரணி வராமலா விடப்போகிறார்?

ஆக, மூன்று என்ன? முப்பது கொலை செய்தாலும் ஊர் எல்லாம் கூடி மூன்று நாள் கதைக்கும்; அவ்வளவுதான். அதன்பின் எல்லாம் சிவசம்போ என்பதாகிப்போகும்.

எனவே வடக்கில் இத்தகைய சம்பவங்கள் மேலும் மேலும் அதிகரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம் உண்டு என்பதால் வடக்கின் எதிர்காலம் மிகப்பயங்கரமாகவே அமையும்.

எனவே அட்டூழியங்களுக்குக் கடும் தண்டனை கொடுத்து அதனை வேரறுக்க; மறைகர சக்தி ஒன்றை, நேர்மைத் திறமுடைய இளைஞர்கள் உருவாக்கும் சந்தர்ப்பம் தோன்றலாம்.

எங்கள் இருப்பைக் காப்பாற்ற இதுவே இப்போது அவசியமானதாகவும் உணரப்படலாம்.

# மனிதாபிமானத்திற்கு மதிப்பளித்து உடன் கடமைக்குத் திரும்புங்கள்

## தாதியர்களுக்கு மைத்திரி அழைப்பு



(கொழும்பு)

அப்பாவி நோயாளர்களின் உயிருடன் விளையாடாமல் மனிதாபிமானத்துக்கு மதிப்பளித்து தாதிமார் உடன் கடமைக்குத் திரும்பவேண்டும் எனக் கேட்டுக்கொண்ட சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க முழு நேரமும் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தாதிமார் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தம் தொடர்பாக அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சுகாதார சேவையில் 106 தொழிற் சங்கங்கள் உள்ளன. வேறு அமைச்சுக்களில் இவ்வாறான எண்ணிக்கையில் தொழிற்சங்கங்கள் இல்லை. இதில் 15 தொழிற்சங்கங்கள் மிக ஆர்வமாக இயங்குகின்றன.

தொழிற்சங்கங்களுடன் பேசுவதிலேயே அமைச்சரினதும், அமைச்சின் உயர் அதிகாரிகளினதும் அநேக நேரம் செலவாகின்றது.

தாதிமாருக்கு பிரசவமனை பயிற்சி வழங்குவது சுகாதார அமைச்சின் தவறு அல்ல.

அது தொழில்நுட்ப சார் பிரச்சினையே என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அப்பாவி நோயாளர்களே இதனால் அவதிப்படுகின்றனர். தாதிமார் சங்கத் தலைவர் சங். முரத்தெட்டுவே ஆனந்ததேரர் உட்பட சகல தாதிமார்களும் இதனை உணர்ந்து கடமைக்குச் சமுகமளிக்க வேண்டும். அரசு தாதியருக்கு சகல அனுகூலங்களும் வழங்கியுள்ளது. அவர்களுக்கான சீருடை கொடுப்பனவை 9ஆயிரம் ரூபாயிலிருந்து 14 ஆயிரத்து 500 ரூபாயாகவும், தாதிமார் ஆசிரியர்களின் சீருடை கொடுப்பனவை 8000 ரூபாயிலிருந்து 10ஆயிரத்து 500 ரூபாய் வரையும் வழங்கினேன். அவர்களின் மேலதிக நேர வேலை கொடுப்பனவை "ரேட்" முறைக்கு மாற்றி மணித்தியாலத்துக்கு 200 ரூபாயாக வழங்கினோம்.

பட்டதாரி வரை கல்வி பயிலும் வாய்ப்பு, தாதிமார் யாப்பை நடைமுறைப் படுத்தல், ஆபத்துக் கொடுப்பனவை அதிகரித்தல், டாக்டர்களுக்கு மட்டும் வழங்கப்பட்ட தொடர்பாடல் அலவன்ஸை தாதிமாருக்கும் வழங்கி 2 ஆயிரம்ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

தாதிமார் சேவை அவசியமானதென்பதால் அரசு இதனை மேற்கொண்டது. குழந்தை பிறப்பின் போது தாதிமார் போன்று குடும்ப சுகாதார அதிகாரிகளின் சேவையும் அவசியமாகும்.

இவ்வளவு காலமும் இரு தரப்பினரும் சுமுகமாகச் சேவையைப் புரிந்தனர். தாதி மாணவியருக்கு பிரசவமனை பயிற்சி வழங்குவதை 2009 ஆம் ஆண்டில் ஆரம்பித்தோம்.

அதனுடன் பிரச்சினை உக்கிரம் அடைந்தது. அமைச்சின் அனுமதியின்றி தாதி பயிற்சி கல்லூரி அதிபர்கள் பிரசவமனை பயிற்சியை ஆரம்பித்ததாக இந்தப் பிரச்சினை உக்கிரமானது.

இவ்விடயமாக அமைச்சின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. இவ்விடயமாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட புத்திஜீவிகளின் குழுவின் பரிந்துரைகளின் பேரிலேயே அமைச்சு தொடர்ந்தும் செயற்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டில் மருத்துவ தாதிமார் முன்னெடுத்து வரும் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக நாடெங்கிலும் 600 இறகும் மேற்பட்ட வைத்தியசாலைகளின் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. (2)

# உலக இஸ்லாமிய தீவிரவாதிகளின் மையமாக இலங்கை மாறுகிறது

## -அமைச்சர் சம்பிக்க

(கொழும்பு)

உலக இஸ்லாமிய தீவிரவாதிகளின் மையமாக இலங்கை மாறி வருவதாக குற்றம்சாட்டும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க,

தமிழகத்தில் இயங்கும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்களுக்கும் இலங்கையிலுள்ள முஸ்லிம் அடிப்படைவாத சக்திகளுக்கும் தொடர்பிருப்பதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மலேஷியா, இந்தோனேசியா, பாகிஸ்தான் மற்றும் காஷ்மீரில் இயங்கி வரும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்களான அல்கொய்தா, லக்சரி தொய்பா, தலிபான் உட்பட இஸ்லாமிய தீவிரவாதிகள் இலங்கையை மையமாக பயன்படுத்தி வருகின்றனர்.

அத்தோடு தமிழகத்தில் இயங்கும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்களுக்கும் இலங்கையிலுள்ள முஸ்லிம் அடிப்படைவாத சக்திகளுக்கும் இடையே தொடர்புகள் உள்ளன.

இதன்வெளிப்பாடுதான் அண்மையில் சாஹீர் ஹுசைன் என்ற இலங்கையை சேர்ந்த பாகிஸ்தான் தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர் சென்னையில் கைது செய்யப்பட்ட சம்பவத்தை எடுத்துக்கொள்ளலாம்.

சென்னையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பிற்கும் இத் தொடர்புகள் சாதகமாக பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இன்று பாகிஸ்தானிலிருந்தும் ஆப்கானிஸ்தானிலிருந்தும் அகதிகளென தம்மை அடையாளப்படுத்திக்கொண்டு முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் இலங்கைக்குள் நுழைந்துள்ளனர்.

அது மட்டுமல்லாது மாலைதீவு பிரஜைகளும் இங்கு வந்துள்ளனர். இதன் பின்னணி என்ன? இவ்வாறு அகதிகளாகி வருபவர் யாரென்பது தொடர்பில் எமது நாட்டில் உளவுப் பிரிவினரால் தகவல்கள் சேகரிக்க வேண்டும் என்றார். (2)

## மழை வீழ்ச்சி தொடரும்!

நாட்டில் பாரிய மழைவீழ்ச்சிக்கான எதிர்வுகூறல் விடுக்கப்பட்டுள்ளது. இதன்படி நாட்டின் பல பகுதிகளில் கனத்த மழை பெய்து வருகிறது.

பாரிய மழை வீழ்ச்சி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் வடக்கு,கிழக்கு மற்றும மலையகம், தென்பகுதிகளிலும் மழை பெய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நீரேந்து பகுதிகளில் பல நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிந்தோடுகின்றன். இதன் காரணமாக நீர்த்தேக்கங்களின் அவசரக் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மழையால் பாதிப்புக்கள் நேரலாம் என்ற அச்சத்தில் இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு முன்கூட்டியே நிதி [illegible]

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## இது மகிழ்ச்சிக்கான வழி



- ஞானம் என்பது மனிதனிடம் இயல்பாக இருக்கும் விஷயம். அது வெளியில் இருந்து வருவது கிடையாது.
- தாயும் தந்தையும் வாழ்வில் மகிழ்ச்சி அடைந்தார்கள் என்றால் கடவுளும் எல்லையற்ற மகிழ்ச்சி அடைகிறார்.
- அன்பின் மூலமாக செய்யப்படும் எந்தப் பணியும் இறுதியில் நிலையான மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும்.
- தன்னைத் தானே மனிதன் வெறுக்கக்கூடாது. இல்லாவிட்டால் அழிவினுடைய வாசல்கள் அப்போதே திறந்து விடப்படும்.
- பிறரிடம் பெற்றுக் கொள்வதால் பயனில்லை. மாறாக கொடுத்து மகிழ்பவனே பேறுபெற்றவன்.
- தவறுகளைப் பெரும்பேறாக கருதிப் போற்றுங்கள். நம்மை அறியாமலேயே நமக்கு வழிகாட்டும் தெய்வங்கள் அவை தான்.
- தன்னை மறந்து, மன ஒருமையுடன் செயலில் ஈடுபட்டால், அந்தப்பணி அழியாத சிறப்பை பெறும்.
- போராட்டம் இல்லாத வாழ்வில் எந்தவிதமான சுவையும் இருப்பதில்லை. தோல்வியும் வெற்றிக்கான கதவுகளைத் திறந்தே விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக உதைபந்து; சாவற்கட்டு இ.கழகம் சம்பியன்

**சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் சாவற்கட்டு இளைஞர் கழகம் சம்பியனாகியது.**





முன்னதாக இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி இளைஞர் கழக அணியும் சாவற்கட்டு இளைஞர் கழக அணியும் மோதியது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் இரு அணிகளும் கோல் போடுவதற்காக எதிரணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமித்தன. எனினும் முதல் பாதியின் போது கோல்கள் எவையும் பெறப்படவில்லை. இதனால் முதற்பாதியாட்டம் 0:0 என சமநிலையில் நிறைவுற்றது.

இரண்டாவது பாதி ஆரம்பித்தவுடன் சாவற்கட்டு இளைஞர் கழக அணி கோலொன்றினைப் போட்டது. பதிலுக்கு இளவாலை ஹென்றியரசர் கல்லூரி இளைஞர் கழக அணி கோல் பெற பல வழிகளில் முயற்சித்தது. போட்டி நிறைவடைவதற்கு சிறிது நேரம் இருக்கையில் கோலொன்றினைப் போட்ட இளவாலை ஹென்றியரசர் கல்லூரி இளைஞர் கழக அணி போட்டியை 1:1 என சமநிலைப்படுத்தியது. ஆட்டம் விறுவிறுப்பை அடைந்ததும் தொடர்ச்சியாக மஞ்சள் அட்டைகளும், சிவப்பு அட்டையும் காண்பிக்கப்பட்டன.

போட்டி நிறைவடைகையில் 1:1 என்னும் அடிப்படையில் இரு அணிகளும் இருந்தமையால் சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்டது.

சமனிலை தவிர்ப்பு உதை மூலம் 1:3 என்ற கோல் அடிப்படையில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி இளைஞர் கழக அணியை வென்று சாவற்கட்டு இளைஞர் கழக அணி இறுதிப் போட்டிக்கு தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

2 ஆவது அரையிறுதி ஆட்டத்தில் பெரியவிளான் இளைஞர் கழக அணியை எதிர்த்து நவாலி சென் பீற்றர்ஸ் இளைஞர் கழக அணி மோதியது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய நவாலி சென் பீற்றர்ஸ் இளைஞர் கழக அணி அடுத்தடுத்து 2 கோல்களைப் போட்டு பெரியவிளான் இளைஞர் கழக அணிக்கு அதிர்ச்சியளித்தது.

பதிலுக்கு பெரியவிளான் இளைஞர் கழக அணி கோல் பெற முயற்சித்த போதும் கோல்களைப் பெற முடியவில்லை. இதனால் நவாலி சென் பீற்றர்ஸ் இளைஞர் கழக அணி 2:0 என வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நவாலி சென் பீற்றர்ஸ் இளைஞர் கழக அணியும் சாவற் கட்டு இளைஞர் கழக அணியும் மோதியது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் ஆரம்பம் முதலே இரு அணிகளும் எதிரணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமித்த போதும் கோல்கள் எதனையும் பெற முடியவில்லை. இதனால் முதற்பாதியாட்டம் எந்தவித கோல்களும் பெறாமல் நிறைவு பெற்றது.

இரண்டாவது பாதியில் கோல் பெறும் முனைப்பை சாவற்கட்டு இளைஞர் கழக அணி அதிகரித்தது. இதன் பலனாக இரண்டாவது பாதியாட்டம் ஆரம்பித்து சிறிது நேரத்தில் சாவற்கட்டு இளைஞர் கழக அணி கோலொன்றினை போட்டது.

பதிலுக்கு நவாலி சென் பீற்றர்ஸ் இளைஞர் கழக அணியும் கோல் போட முயற்சித்தது.

இதன் பலனாக நவாலி சென் பீற்றர்ஸ் இளைஞர் கழக அணியும் கோலொன்றினைப் போட்டது. ஆட்டம் 1:1 என சமநிலையில் நிறைவு பெற்றமையால் சமநிலை உடைப்பு உதை வழங்கப் பட்டது.

இதனை சாதகமாக பயன்படுத்திய சாவற்கட்டு இளைஞர் கழக அணி 3 கோல்களைப் போட்ட போதும் நவாலி சென் பீற்றர்ஸ் இளைஞர் கழக அணியால் 2 கோல்களையே பெற முடிந்தது.


இதனால் இப் போட்டியில் 3:2 என்னும் கோல் கணக்கில் சாவற்கட்டு இளைஞர் கழக அணி வென்று சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான 2014 ஆம் ஆண்டிற்கான உதைபந்தாட்டப் போட்டியில் சம்பியனாகியது. (க-23)

# கார்மேல் போய்ஸ் வெற்றி

நல்லூர் பிரதேச செயலகதினால் நடத்தப்பட்ட வடமாகாண ரீதியிலான 6 பேர் 5 பந்துபரிமாற்றத்தினை கொண்ட மாபெரும் மென்பந்து சுற்று போட்டியின் அரையிறுதியாட்டம் அண்மையில் ஸ்டான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது இதில் குருநகர் கார்மேல்போய்ஸ் அணியினை எதிர்த்து அரியாலை சரஸ்வதி வி.க மோதியது.

அரையிறுதியாட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற குருநகர் கார்மேல்போய்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. குருநகர் கார்மேல்போய்ஸ் அணியானது 22 ஓட்டங்கள் பெற்ற நிலையில் 4 இலக்குகளை இழந்து தடுமாறியது இந்த நிலையில் றோக்ஸ்சனின் பொறுப்பான ஆட்டம் அணியினை பலப்படுத்தியது அவர் 6 பந்துகளில் மூன்று 4 ஓட்டங்கள் அடங்கலாக 18 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார் இதன் மூலம்5பந்து பரிமாற்றத்தின் நிறைவில் 48 ஓட்டங்களை பெற்றது குருநகர் கார்மேல் போய்ஸ் அணி.


49 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நோக்கத்துடன் களமிறங்கிய அரியாலை சரஸ்வதி வி.க 41 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. (இறுதி பந்துபரிமாற்றத்தில் ஒரு இலக்கு மீதம் உள்ள நிலையில் 8 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிர்ப்பந்தத்தில் விளையாடிய அரியாலை சரஸ்வதி வி.க அணித்தலைவர் செல்டனின் மிகத் திறமையான பந்து வீச்சின் மூலம் எந்த வித ஓட்டமும் வழங்காமல் 2 இலக்குகளையும் கைப்பற்றினார் இதன் மூலம் குருநகர் கார்மேல்போய்ஸ் அணி வெற்றிபெற்றது. (க-23)




மாவட்ட மட்ட 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான எறிபந்தாட்ட போட்டி அண்மையில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில கல்லூரி மாணவர்கள் முதலாம் இடத்தினை பெற்றுக் கொண்டனர். அவ் அணியினரையும் கல்லூரி நிர்வாகத்தினரையும் படத்தில் காணலாம்.









காரைநகர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வுகளின் இறுதி நிகழ்வு அண்மையில் காரைநகர் தியாக ராஜா மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட தொழிலதிபர் கல்விக் காருண்யன் ஈ.எஸ். பி.நாகரத்தினம் வெற்றிக்கிண்ணம் வழங்குவதையும் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படுவதையும் வீரர்கள் சத்தியப்பிரமாணம் செய்வதையும் படங்களில் காணலாம். (23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# டெல்லி அணியை வீழ்த்தி சென்னை தொடர் வெற்றி

டெல்லி அணிக்கு எதிரான, போட்டியில் சென்னை அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சென்னை சுப்பர் கிங்ஸ்- டெல்லி டேர்டெவில்ஸ் அணிகளுக்கு இடையேயான 26-வது ஐ.பி.எல் போட்டி டெல்லியில் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணிகட்டன் தோனி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார். டெல்லி அணியைச் சேர்ந்த டி கொக்- முரளி விஜய் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். டி கொக் தொடக்கம் முதலே அதிரடியாக விளையாடி வந்தார். அவர் 16 பந்தில் 24 ஓட்டம் எடுத்திருக்கும்போது ரன அவுட்டாகி வெளியேறினார். அடுத்து வந்த பீட்டர்சன் ஓட்டம் ஏதும் எடுக்காமல் டக் அவுட் ஆனார்.



அடுத்து 3-வது விக்கெட்டுக்கு விஜயுடன். தினேஷ் கார்த்திக் ஜோடி சேர்ந்தார். இருவரும் அதிரடியாக விளையாடினர். இதனால் ஓட்ட விகிதம் அதிரடியாக உயர்ந்தது. சிறப்பாக விளையாடிய கார்த்திக் 51 ஓட்டங்களில ஆட்டம் இழந்தார். அவர் 36 பந்தில் 4 பவுண்டரி. 3 சிக்சருடன் இந்த ஓட்டங்களை எடுத்தார். முரளி விஜய 30 பந்தில் 35 ஓட்டம எடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் வந்த டுமினி. ஜாதவ் அதிரடியாக விளையாட டெல்லி அணி 20 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 178 ஓட்டங்கள் குவித்தது. டுமினி 17 பந்தில் 28 ஓட்டங்களும். ஜாதவ் 18 பந்தில் 29 ஓட்டங்களும் எடுத்தனர்.

சென்னை அணி தரப்பில் ஹில்பெனாஸ். மோகித் சர்மா. ரவீந்திர ஜடேஜா. அஸ்வின் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

இதனை அடுத்து 179 ஓட்டங்கள் என்ற வெற்றி இலகைகுடன் களமிறங்கிய சென்னை அணி 19.4 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.


சென்னை அணியில் அபாரமாக விளையாடிய டுவேன ஸ்மித் அரைசதம் அடித்து அசத்தினார். டுவேன ஸ்மித் 51 பந்துகளில் 4 பவுண்டரி. 8 சிக்சர் உட்பட 79 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இந்த வெற்றியின் மூலம் சென்னை அணி புள்ளி பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சென்னை அணியின் ஸ்மித் தெரிவானார். (க)




**தம்பே ஹட்ரிக்**

# ராஜஸ்தான் அசத்தல் வெற்றி




கொல்கத்தா அணிக்குகெதிரான போட்டியில் ராஜஸ்தான் அணி 10 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. ராஜஸ்தான்- கொல்கத்தா அணிகளுக்கு இடையேயான 25-வது ஐ.பி.எல் போட்டி குஜராத் மாநிலம் அகமதாபாத்தில நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில வென்ற கொல்கத்தா அணி கட்டன் காம்பீர் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

அதன்படி ராஜஸ்தானைச் சேர்ந்த ரகானே- கருணண் நாயர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். இருவரும் கொல்கத்தா அணியின் பந்துவீச்சை விளாசித் தள்ளினார்கள். 6.3 ஓவரில் 52 ஓட்டம் இருக்கும்போது சிறப்பாக விளையாடிய ரகானே 30 ஓட்டங்களில்ரன் அவுட்டானார். அடுத்து நாயருடன் சாம்சன் களம் இறங்கினார். நாயர் 44 ஓட்டங்களல் ஸ்டமிங் ஆகி வெளியேறினார். 3-வது விக்கெட்டுக்கு சாம்சனுடன் கட்டன் வோட்சன் களம் இறங்கினார். வோட்சன் பந்துகளை சிக்சராக பறக்க விட்டார்.

சாம்சன் 37 ஓட்டங்களல் சுனில் நரைன் பந்தில் ஆட்டம் இழந்தார். வோட்சன் 20 பந்தில் 2 சிக்சர். 2 பவுண்டரியுடன் 31 ஓட்டம் எடுத்தார். சுனில் நரைன் பந்தை வோட்சன் தூக்கி அடிக்க சூர்யகுமார் சிக்சர் லைனில் அருமையாக பிடி எடுத்தார். அப்போது ராஜஸ்தான் அணி 18.3 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 153 ஓட்டம் எடுத்திருந்தது. அதன்பின் வந்த வீரர்கள் சுமாராக விளையாட ராஜஸ்தான் அணி 6 விக்கெட் இழப்பிற்கு 170 ஓட்டம் குவித்தது. கொல்கத்தா அணி சார்பில் சுனில் நரைன். வினய் குமார் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்கள் வீழ்த்தினர்.

பின்னர் 171 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா அணியைச் சேர்ந்த காம்பீர்- உத்தப்பா தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். இருவரும் ராஜஸ்தான் பந்துவீச்சை விளாசித் தள்ளினார்கள். காம்பீர் 54 ஓட்டங்களுமம. உத்தப்பா 65 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தார்கள். அப்போது கொல்கத்தா 14.3 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 122 ஓட்டம் எடுத்து வலுவான நிலையில் இருந்தது.

ஆனால் அதற்கு பிறகு வந்த வீரர்கள் சொதப்ப கொல்கத்தா 6 விக்கெட் இழப்பிற்கு 160 ஓட்டஙகள் மட்டுமே எடுத்தது. இதனால் ராஜஸ்தான் 10 ஓட்டம் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ராஜஸ்தான் அணி சார்பில் வோட்சன். தாம்பே ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்கள் வீழ்த்தினர்.

கொல்கத்தா அணி குறிப்பாக 6 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை பறிகொடுத்து குறிப்பிடத்தக்கது.

இறுதியில் கொல்கத்தாஅணி 20 ஓவர்களில் 160 ஓட்டங்கள் எடுத்து 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

ஆட்டத்தின் திருப்பு முனையாக வோட்சன் வீசிய 14 ஓவரில் 3 விக்கெட்டும். பிரவீன் தாம்பே வீசிய 15 ஓவரில் 3 விக்கெட்டும் வீழ்ந்தது. குறிப்பாக பிரவீன் தாம்பே ஹட்ரிக் விக்கெட் வீழ்த்தி அசத்தினார். இந்த தொடரில் முதல் ஹட்ரிக் விக்கெட்டை பிரவீன் தாம்பே வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக ராஜஸ்தான் அணியின் தாம்பே தெரிவானார். (க)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்...

அமைப்புக்களின் நடவடிக்கைகளை கண்டிக்கும் வகையிலும், சிறுபான்மை இனங்களின் உரிமைகளை உறுதிச் செய்யக் கோரியும் சில பாதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தாங்கியிருந்தனர்.

இந்த போராட்டத்தின் ஏற்பாட்டாளர்களின் பேச்சாளரான எம்.பௌசர், இந்த ஆர்ப்பாட்டம் பற்றிக் கூறுகையில்,

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை களை நிறுத்துவதற்காக சரவதேச சமூகத்தையும், இலங்கை அரசாங்கத்தையும் கோரும் வகையல் தமது இந்த முதலாவது போராட்டம் நடத்தப்படுவதாகக் கூறினார்.

அதேவேளை, இந்த போராட்டத்துக்கும் தமக்கு எந்தவிதமான தொடர்பும் கிடையாது என்று இலங்கை உலமாக்கள் சபையும், இலங்கையில் உள்ள முஸ்லிம் கவுன்ஸில் என்ற அமைப்பும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

குறைகள் இருப்பின் முஸ்லிம்கள் பிரிட்டனுக்கான இலங்கை தூதுவரிடம் அது குறித்து முறைப்பாடு செய்யலாம் என்றும் அந்த அமைப்புகள் கூறியுள்ளன.

ஆனால், கடந்த காலங்களில் தம்மால், இலங்கை தூதரிடம், இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற அநீதிகள் குறித்து முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு எந்த விதமான பலனும் கிட்டாத காரணத்தினாலேயே, இந்த போராட்டத்தை தாம் ஏற்பாடு செய்ததாக இலங்கை முஸ்லிம்களுக்கான புலம்பெயர் அமைப்பின் தலைவரான எஸ்.நசீர கூறினார். (செ-11)

# அச்சுவேலி முக்...

ஜோய்மகிழ்மகாதேவா உத்தரவிட்டார்.

மேற்படி சந்தேக நபரினை பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் நேற்று நீதிமன்றில் ஆஜரப்படுத்திய வேளையிலே நீதவான் மேற்படி உத்தரவினைப் பிறப்பித்தார்.

அச்சுவேலி கதிரிப்பாய் பகுதியில் ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த தாய், மகன் மற்றும் மகள் மூவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டதுடன், மேலும் இருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நிற்குணாநந்தன் அருள்நாயகி (50), யசோதரன் மதுசா (27), நிற்குணாநந்தன் சுபாங்கன் (19) ஆகிய மூவரும் பலியாகியிருந்ததுடன், தனஞ்செயன் தர்மிகா (25), க.யசோதரன் (30) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்.

தொடர்ந்து இக்கொலைகளுடன் தொடர்புடையவரென, படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தர்மிகாவின் கணவரான பொ.தனஞ்செயன் ஊரெழு பகுதியில் வைத்து கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதேவேளை இந்தக் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட முச்சக்கரவண்டியினையும் பொலிஸார் கைப்பற்றியதுடன், முச்சக்கரவண்டி உரிமையாளரினையும் நேற்று முன்தினம் அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இருந்தும் குறித்த முச்சக்கர வணடி உரிமையாளரினை பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜரப்படுத்தவில்லை.

தர்மிகாவின் சகோதரியும் இந்த வாள்வெட்டில் பலியாகியிருந்தவருமான மதுசாவினை இரண்டாவதாகத் திருமணம் செய்ய முடியாத நிலையிலே குறித்த நபர் (தர்மிகாவின் கணவர்) மேற்படி படுகொலையினைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# போரை நிறுத்தாத இந்...

லும் யாழ்.இந்தியத்துணைத் தூதுவர் வி.மகாலிங்கத்திற்கு பிரியாவிடை நிகழ்வு ரில்ஹோ விருந்தினர் விடுதியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.இந்தியத்துணைத்தூதுவர் டில்லிக்கு திரும்பிச் செல்லும் போது ஈழத்தமிழருக்கு இந்தியா மீதுள்ள அதிருப்தியை மத்திய அரசின் கொள்கை வகுப்பாளர்களிடம் எடுத் துக் கூறவேண்டும்.

தமிழ் தாயகத்தில் ஆயுதக்குழுக்களுக்கு ஆதரவு வழங்கி அந்தக் குழுக்களை வளர்த்தது இந்தியதான். பின்னர் அந்தக்குழுக்களை மோதவிட்டு எமது இனத்தினை அழிக்கும் நடவடிக்கைக்கு இந்தியா துணைபோயிருந்தது.

தமிழ்த்தேசியத்தோடு மக்களின் உணர்வை நன்றாக புரிந்து வைத்திருக்கின்றவன் என்றவகையில் மக்களின் ஆதங்கத்தை சொல்ல வேணடிய கடப்பாடுள்ளது. 30 வருடத்திற்கு முன்னர் ஆயுதப்போராட் டத்திற்கு செல்ல முற்பட்டவேளை சமாதான வழியில் சென்று கொண்டிருந்த மக்களை ஆயுத வழியில் திருப்பிவிட்டு பெரும்மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது இந்தியாதான்.

இந்தியாவின் அணுகுமுறை தான் தமிழினத்திற்கு அழிவையும் நல்கியுள்ளது. உண்மையில் எமது இனம் சீரழிந்து விட்டது. எமது இனம் சீரழிந்ததற்கு இந்தியா காத்திரமான பங்கை ஆற்றத்தவறிவிட்டதே காரணம். துணைத்தூதுவரை நான் குறை கூறவில்லை டில்லி திரும்பிச்செல்லும் போது தமிழ்மக்களின் ஆதங்கத்தை மறக்காமல் சொல்லுங்கள். இந்தியாவை நம்பி தமிழ் மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

போரில் எல்லாவற்றையும் தமிழ் மக்கள் இழந்துவிட்டனர். போரை நிறுத்தும் வாய்ப்பு கிடைத்தும் போரை நிறுத்த நடவடிக்கை எடுக்கவில்லை போரின் பின்னர் தமிழருக்கு தீர்வைப்பெற்றுக் கொடுக்கவும் காத்திரமான நடவடிக்கையினை இந்திய எடுக்கத்தவறிவிட்டது.

மேலும் 13 திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவும் காத்திரமான நடவடிக்கையினை இந்திய அரசு எடுக்கவில்லை.

வடக்கு - கிழக்கு பிரிக்கும் போதும் இந்தியா மௌனம் காத்தது. இன்றும் போர் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்பும் இந்தியா நடந்து கொள்ளும் விதம் தமிழ்மக்களுக்கு மிகவும் மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்மக்களுக்கு அழிவை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பையும் நல்கியது இந்தியாதான். எமது இனததை சீரழித்து விட்டது என்றும் பிரசசினையினை தீர்க்க காத்திரமான நடவடிக்கையினை இந்தியா எடுக்கவில்லை என்று தமிழ் மக்கள் ஆதங்கப்படுகின்றனர் என்பதை உங்கள் நாட்டின் கொள்கை வகுப்பாளர்களிடம் சொல்லுங்கள்.

போர் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்பும் இந்தியா பின்வாங்குவது தமிழ்மக்களுக்கு ஏமாறறத்தை அளித்துள்ளது.

இந்தியாவை நாம் நம்புகின்றோம். ஆனால் இந்தியா தமிழர்களை ஏமாற்றிவிட்டது. ஈழத்தமிழரின் பிரச்சினை ஜெனிவா வரை சென்றுள்ள நிலையில் இந்தியா நடந்துகொள்ளும் விதம் தமிழ்மக்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# மோடி பிரதமரானால்...

சம்பிக்க ரணவக்க சிங்கள ஊடகங்களுக்கு அளித்துள்ள பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

இலங்கையில் உள்ள பௌத்தர்களில் சிலர் நரேந்திரமோடி, முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் எதிரானவர் என்ற ரீதியில் அவருக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

ஊடகங்களும் அவ்வாறான நிலைப்பாட்டிலேயே செய்திகளை வெளியிடுகின்றன. ஆனாலும அவர் தீவிர இந்துத்வா ஆதரவாளர். அந்த வகையில் இந்து மதம் தவிர ஏனைய எந்த மதத்துக்கும் ஆதரவானவராக இருக்க மாட்டார்.

மேலும் பாரதிய ஜனதாக் கட்சியானது தமிழ்நாட்டில் வைகோ, நெடுமாறன் போன்ற புலி ஆதரவு அரசியல்வாதிகளுடன் நட்புற வைக் கொண்டுள்ளது.

எனவே அவர்கள் தொடர்ந்தும் இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டில் இருப்பதுடன், பாரதிய ஜனதா அதிகாரத்துக்கு வந்தால் தமது நட்புறவினூடாக மத்திய அரசையும் நிர்ப்பந்தம் செய்வார்கள் என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போதைய ராஜபக்ஷ அரசாங்கம் பெரும்பான்மை பௌத்தர்களின் எதிர்பார்ப்புக்கு மாற்றமாக செயல்படுவது தொடர்பில் தமது கட்சி தீவிரமாக அவதானித்து வருவதாகவும், தேவையான சந்தர்ப்பங்களில் அது தொடர்பான எதிர்ப்பை வெளிப்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அரசாங்கம் தொடர்ந்தும் பெரும்பான்மை மக்களின் உரிமைகள் விடயத்தில் அலட்சியமாக நடந்து கொண்டால் அரசாங்கததை விட்டு வெளியேறவும் தாம் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (செ-11)

# இலங்கை...

கின்றனர்.

விசாரணையின் போது அகதிகள் குழுவைச் சேர்ந்தவர்கள், இலங்கை இராணுவத்தின் கெடுபிடி தாங்க முடியாமல் நாங்கள் தமிழகம் வந்துள் ளோம். எங்களை போல் சுமார் 2 ஆயிரம் அகதிகள் மன்னார் காடுகளில் பதுங்கி இருக கின்றனர்.

மேலும் இலங்கையில் விடுதலைப் புலிகள் இருப்பதாக கூறி தமிழர்களை இலங்கை இராணுவம் தொந்தரவு செய்து வருகின்றது என்று பரபரப்பான வாக்குமூலம் அளித்துள்ளனர்.

இலங்கையிலிருந்து தமிழர்கள் அகதிகளாக தமிழகம் செல்வது சமீப காலமாக குறைந்திருந்தது. இந்த நிலையில் 10 பேர் அகதிகளாக தனுஷ்கோடி சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# இளைஞர்...

தங்கியிருந்துள்ளார்.

பின்னர் நேற்று முன்தினம் மச்சான் முறை உறவினரான மாங்குளம் புதியகொலனியில் வசித்து வந்த குடும்பஸ்தரின் வீட்டிற்கு பிரஸ்தாப நபர் வந்திருந்தார்.

குடும்பஸ்தரும் பிரஸ்தாப இளைஞருமே அவ்வீட்டில் நேற்றையதினம் இருந்துள்ளனர். இதேவேளையில் தொழில் நிமிர்த்தம் ஆட்டோசாரதியான குடும்பஸ்தர் வெளியே சென்றிருந்துள்ளார்.

பின்னர் மதியவேளை உணவு கொடுக்க வீடு திரும்பிய வேளையிலேயே தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் சடலமாக காணப்பட்டதாக குடும்பஸ்தர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக உடனடியாக மாங்குளம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதனை தொடர்ந்து அங்கு வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மா.கணேசராசா சடலத்தை மீட்க உத்தரவிட்டார்.

பின்னர் சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் தமது புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-15)

# மின்சாரம் தாக்கியதில்...

52) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேசன் தொழிலாளியான பிரஸ்தாப குடும்பஸ்தர் தொழில் நிமித்தம் குறித்த இடத்தில் மின்னிணைப்பை ஏற்படுத்த முற்பட்ட போது தவறுதலாக மின்சாரம் தாக்கியதில் உயிரிழக்க நேரிட்டுள்ளது.

உயிரிழந்த குடும்பஸ்தரின் சடலம் பிரேதபரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை யாழ்.கோண்டாவில் அரசடிப் பிள்ளையார் ஆலயத்தில் வர்ணம் பூசும் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞன் மின்சாரம் தாக்கி நேற்று திங்கட்கிழமை உயிரிழந்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனா.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியினைச் சேர்ந்த திரவியநாயகம் றனிஸ்ரன் (27) என்பவரே இவ வாறு உயிரிழந்துள்ளார்.

ஆலயத்தின் கோபுரத்திற்கு வர்ணம் பூசும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மேற்படி இளைஞன், தவறுதலாக மின் இணைப்பில் கை பட்டமையினால் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், இவரைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்த மேலும் ஒரு இளைஞனும் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-6,24,60)

# கணவனும்...

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் விசாரணைக்காக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த இளைஞனின் தந்தையார் கறுப்பையா கணேசன் (வயது 54) என்பவர் அப்பனுக்கு உதவிய குற்றச்சாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை அநுராதபுரத்தில் வைத்து கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


## உடனடி வேலைவாய்ப்பு

புதியதோர் எதிர்காலத்தை நோக்கி...

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டத்தினருக்கான பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்கள் உள்ளன.

❖50 பேருக்கு மட்டும் முன்னுரிமை

இன்றே உடன் அழைக்க:- 0777981471, 0770167793

குறிப்பு:- தங்குமிடம் & உணவு இலவசம். வயதெல்லை 18-40

(C-7281)



## எமது உள்ளத்தில் உறைந்துள்ள அன்புத் தெய்வத்தின்

## 1ம் ஆண்டு நினைவு அஞ்சலி

அமரர்
மாதவர் அரிச்சந்திரன்



ஈரவிழிகள் கலங்கி நிற்கின்றோம்
நீர் எம்மை விட்டுச் சென்று
ஓராண்டு கடந்தாலும் – எம்
விழி நீரோ வற்றவில்லை
உம் இனிய நினைவுகள்
எம் மனதை விட்டு அகலவில்லை

பிறப்பு : 09.08.1933
இறப்பு : 17.04.2013

சீராட்டி தாலாட்டி ஏந்தி எடுத்து வளர்த்த அப்பாவே! இனி உமை நாம் எப்போது காண்போம்!

உம் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மாதவ மனை, பண்ணாகம், சுழிபுரம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.